2880

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XII NO: 3

July 9th 1985

©

D
V211,31 N85
N85.12.3
136418

304/86

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, 1985 ஜூலை 9, தொகுதி XII-எண். 3.

Tuesday the 9th July 1985—Volume XII-No. 3.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009

Legislative Assembly Department, Fort St. George.

Madras-600 009

விலை ரூ. 3 Price Rs. 3

ஆவணக்காப்பக
136418
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

9—7—1985.

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : உடுக்குறியிட்ட வினாக்கள். | 457—496 |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) பிற்பட்டோர் இட ஒதுக்கீடு கொள்கை .. | 497 |
| (ஆ) பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குதல் .. .. | 497—498 |
| (இ) சென்னை நகரில் அதிகமான போக்குவரத்து நெரிசலைத்தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் | 498—499 |
| (ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் நன்கொடை அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது .. | 499—500 |
| 3. அறிக்கை அளித்தல் : | |
| விதி 111-இன் கீழ் தொழில் அமைச்சரின் அறிக்கை | 500—501 |
| 4. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) சேர்வலாறு அணை உடைப்பால் மின் உற்பத்தி பாதிப்பு .. .. .. | 501—506 |
| (ஆ) பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலை கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு .. .. | 506—508 |
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் : | |
| (அ) சென்னை மாநகர் காவல்—தமிழ் நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1985. | 509—518 |
| (ஆ) மதுரை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1985. .. .. | 518—522 |

பக்கங்கள்

6. வரவு-செலவுத் திட்டம் 1985–86 வாக்கெடுப்பு:--தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை .. 522—599

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் —தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| திரு. இரா. முத்தையா | .. | .. | 522—534 |
| திரு. குமரி அனந்தன் | .. | .. | 534—546 |
| திரு. கி. கிருஷ்ணமூர்த்தி | .. | .. | 546—551 |
| திரு. பி. முசிறிபுத்தன் | .. | .. | 551—563 |
| திரு. ஜி.கே.ஜெ. பாரதி | .. | .. | 563—568 |
| திரு. கு. சுப்பராயன் | .. | .. | 568—575 |
| திரு. எம். அண்ணாதாசன் | .. | .. | 575—582 |
| திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் | .. | .. | 582—591 |
| திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் | .. | .. | 591—599 |

7. அரசினர் தீர்மானம் :
விதி 32-ஐத் தளர்த்தல். ... ... 599

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். ... 599

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூலை 9, செவ்வாய்க்கிழமை.

ஆனி 25, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.''

போர் வந்தால் உயிரின்பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் ஆவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### பழவேற்காட்டில் அனல் மின் நிலையம்.

554—(*வினா எண். 1365) திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி தொகுதியில் பழவேற்காடு (Palicat) அனல்மின் நிலைய துவக்கத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) (ஆ) மற்றும் (இ) ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகள் கொண்ட அனல் மின்நிலையத்தை ரூ. 547.79 கோடி மதிப்பீட்டில் செங்கை மாவட்டம், பொன்னேரி தாலூக்காவில் புழுதிவாக்கம், எண்ணூர் கிராமத்தில் அமைப்பதற்கு மத்திய மின் ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய திட்டக்குழுவும் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

[1985 ஜூலை 9

திரு. கே. பி. கே. சேகர் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் திட்டத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் பணிபுரிவதற்கு அமர்த்தப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு தொழிலாளர் அமர்த்தப்படுவார்கள் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இந்தத் திட்டம் இவ்வாண்டு துவக்கப்பட இருக்கின்றது. அதன் மூலம் சுமார் 315 கோடி யூனிட்டு மின்சாரம் கிடைக்கும்.

மேலச்செவல், கீழச்செவல் பகுதிகளுக்கு தனி டிரான்ஸ்பார்மர்.

555—(*வினா எண். 1525) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகரப் பஞ்சாயத்து, நயினார்குளம் மற்றும் கீழச்செவல் பொதுமக்களிடமிருந்து மின்சாரக் குறைவழுத்தத்தைப் போக்க தனி டிரான்ஸ்பார்மர் ஒன்று அமைக்கக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், இந்த மேலச்செவல் பகுதி நகரப் பஞ்சாயத்து பகுதி ஆகும். அங்கே குறைவழுத்த மின்சாரம் இருக்கிறது என்று பல்வேறு கால கட்டங்களில் பொதுமக்கள் கூறி வருகிறார்கள், எனவே, அதைப் போக்குவதற்கு புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க துறை பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குறைவழுத்தம் அங்கே இல்லை. புதிய மின் மாற்றிகள் அமைக்க வேண்டிய அவசியமும் இல்லை.



1985 ஜூலை 9]

2880

செங்குன்றம் ஆட்டுத்தொட்டி.

556—(*வினா எண். 1227) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்குன்றம் அருகில் உள்ள ஆட்டுத்தொட்டியிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் புழலேரி குடிநீர் பாதிக்கப்படும் என்ற அச்சம் மக்களிடையே இருப்பதால் ஆட்டு தொட்டியினை வேறு பகுதிக்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, செங்குன்றம் அருகில் அமைக்கப்படவிருக்கும் நவீன இறைச்சிக்கூடத்தின் கழிவு நீரால் புழலேரி குடிநீர் பாதிக்கப்படாது. எனவே, இந்த இறைச்சிக்கூடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் அருகில் இந்த ஆட்டு இறைச்சிக் கூடம் அமைக்கப்படுவதால், தென் சென்னைப் பகுதியிலிருந்து குறிப்பாக, சைதாப்பேட்டை, ஆயிரம் விளக்கு, மயிலாப்பூர் போன்ற பகுதிகளிலிருந்து வியாபாரிகள் சென்று வருவதற்கு தொலை தூரமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதை உணர்ந்து ஏற்கெனவே மிகப் பெரிய அளவில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையிலுள்ள ஆட்டிறைச்சிக் கூடம், ஏறத்தாழ 2,000 பேர்களுக்கு மேல் பயன்படுத்தக் கூடிய அளவில் உள்ள ஆட்டிறைச்சிக் கூடம் நவீனமயம் ஆக்கப்பட்டால் அந்த ஆட்டிறைச்சி வெட்டிக் கொடுக்கிற உரிமையாளர்களுக்குப் பாதிப்பு வராது. எனவே, அதை விஸ்தரிக்கின்ற அந்தப் பணியை அரசு மேற்கொள்ளுமா ? இப்போது செங்குன்றத்தில் கட்டப்பட்டிருக்கின்ற ஆட்டிறைச்சிக்கூடமானது எக்ஸ்போர்ட் செய்பவர்களுக்கு மாத்திரமா? அல்லது சென்னை மாநகரத்தின் பலவேறுஇடங்களில் ஆட்டிறைச்சியை, ஆட்டிறைச்சிக்கூடங்களில் வெட்டிக் கொடுக்கின்ற அந்த உரிமையாளர்களும் அதிலே சென்று பயன்படுத்தும் அளவில் கட்டப்பட்டதா என்ற அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நகர்ப்புறத்தில், நகரத்திற்குள்ளே சுகாதாரக் கேடுகள் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் நகரத்திற்கு அப்பால் நவீன இறைச்சிக்கூடம் கட்டப்படுகிறது. எனவே நகரத்திற்குள் எந்தக் காரணம் கொண்டும் இறைச்சிக்கூடம் அனுமதிக்கப்பட மாட்டாது. இரண்டாவது கருத்து, இது உடனடியாக சென்னை நகரத்திலே இருக்கின்ற 45 இலட்சம் மக்களிலே இறைச்சி உணவில் பழக்கம் உள்ளவர்களுக்கு உதவுகின்ற வகையிலே இன்றைக்கு அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீன ஆட்டிறைச்சிக்கூடத்தில் இயந்திரங்களைக் கொண்டு ஆடுகளை வெட்டுகின்ற அந்தப் பணியின்

காரணமாக அதிலே பல்வேறு கோளாறுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற முறைக்குப் பதிலாக ஆடுகளை அறுக்கின்ற முறை பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முன்னெச்சரிக்கையாக, தக்க நிபுணர்களைக் கொண்டு, நாட்டுமக்களுக்கு சுகாதாரக்கேடு இல்லாமல் இறைச்சி அளிக்க எல்லா முன் நடவடிக்கைகளும் விழிப்பாக எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆட்டிறைச்சியை எங்கேயோ அவர்கள் சீர்படுத்தி, ஒழுங்குபடுத்தி, வெட்டி எடுத்துக் கொண்டு வந்தாலும், வருகின்ற வழியிலே பாதுகாப்பு இல்லாமல் எடுத்துச் செல்கிறார்கள். அது அருவருக்கத்தக்க நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி பாதுகாப்பான முறையில், பெட்டிக்குள் அடக்கமாக வைத்து, வெளியே தெரியாமல் எடுத்துச் செல்வதற்கான உத்தரவு இடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய நவீன இறைச்சிக்கூடம் வந்த பிறகு, சென்னை நகரத்தில் எங்கேயும் தனியார்கள் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளாதவாறு சட்டப்பூர்வமாகத் தடை செய்யப்படும். அப்பொழுது இப்படிப்பட்ட பாதகங்கள் நிச்சயமாக ஏற்படாது.

**சுப்பராஜ் பஞ்சாலை தொழிலாளர்கள், இராஜபாளையம்.**

557—(*வினா எண். 1655) திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் சுப்பராஜ் பஞ்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் சேர்ந்த ஒரே காரணத்துக் காக 95 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராஜபாளையம், சுப்பராஜ் காட்டன் மில்ஸ் என்னும் நிறுவனத்தில் சுமார் 292 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். நிர்வாகம் சுமார் 95 தொழிலாளர்களை நவம்பர் 1984-ல் வேலைநீக்கம் செய்ததாகவும், அவர்களுக்கு மீண்டும் வேலை கோரி ஏ.ஐ.டி.யு.சி. சங்கப் பிரதிநிதி திரு. இராமசாமி 23—3—1985 முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இப்பிரச்சினையில் 26—3—1985 அன்று இருதரப்பினருக்குமிடையே



நடந்த நேரடிப் பேச்சுவார்த்தையின்மூலம் உடன்பாடு ஏற்பட்டு அதன்படி வேலையில்லாத தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து மேற்கூறப்பட்ட உண்ணாவிரதம் 26—3—1985 அன்று முடிக்கப்பட்டு, தற்சமயம் ஆலை சுமுகமாக இயங்கி வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, உண்ணாவிரதம் இருந்திருக்கக் கூடிய அந்தப் போராட்டத்தில், தொழிலாளர் இலாகா அதிகாரிகளும் மற்றவர்களும் தலையிட்டு பேச்சுவார்த்தைகள் நடத்தி அது முடிவிற்கு வந்திருக்கலாம். அது சரியானது. ஆனால் இந்தத் தொழிலாளர்களைத் திரும்ப எடுத்துக் கொள்கிறோம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். உண்மையிலேயே, வெளியேற்றப்பட்ட அந்த 95 தொழிலாளர்களும் இன்றைக்கு வேலையில் இருக்கிறார்களா ? அவர்கள் ஏற்கெனவே இருந்த பதவிகளில், அவர்களுடைய வருமானம் குறைக்கப்படாமல் அவர்களுக்கு அந்த வேலை கிடைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 95 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பிறகு நிர்வாகம், தொழிற் சங்கம் ஆகிய இரண்டு தரப்பினரும் பேசியதற்குப் பிறகு நிர்வாகம் 69 பேர்களை வேலைக்கு திரும்ப எடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டு இன்றைக்கு வேலையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். மீதி உள்ள 26 பேர்களுக்கும் வேலை தர வேண்டுமென்று ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கம் வற்புறுத்துகிறது. ஆகவே, தொழிலாளர் நலத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இரண்டு பேர்களையும் அழைத்து மீண்டும் அந்த 26 பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் பேசியிருக்கிறார்கள். அந்தத் தகவல் என்னிடத்தில் வரவில்லை. வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, எனக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் சரியானது என்பது அமைச்சரவர்களுடைய பதிலிலேயிருந்து தெரிய வருகிறது. தங்களுக்கு வேண்டாத தொழிலாளர்களை வெளியேற்றுவதற்காக சட்டவிரோதமாக நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை, இது. ஆகவே, முக்கியமான விஷயத்தை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் தெரிய விரும்புவது என்னவென்றால், பலயிடங்களில் இம்மாதிரி தொழிற்சங்கங்களை, சாதாரணமாக பக்கத்தில் தொழிற்சங்க இயக்கம் வராத பகுதிகளில், தொழிற்சங்க இயக்கம் உண்டாவதைத் தடுப்பதற்

காக வேண்டி கம்பெனி முதலாளிகள் கம்பெனி சங்கங்களையே உருவாக்க, தங்களுடைய சொந்த ஆட்களைக்கொண்டு சங்கங்களை உருவாக்கி தொழிற்சங்கங்களை உடைக்கிறார்கள்.

(முற்பகல் 9-10)

திடீரென்று ஒரு கூட்டம், தொழிலாளர்கள் தொழிற் சங்கத்திலே சேர்ந்தது என்பதற்காக சட்டபூர்வமாக அவர்களுக்கு இருக்கிற அடிப்படை உரிமைகளை அனுபவித்ததற்காக வெளியேற்றும்படியான அபாயத்தை கட்டாயமாக தமிழ் நாட்டில் அனுமதிக்கக் கூடாது. நமது அரசு அதற்கு ஒரு சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொழிலாளர்களுடைய நலனை, தொழிற்சங்க உரிமைகளைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும். ஆனால், ஒரு அடிப்படை பிரச்னையை இங்கே மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு தொழிற்சாலையிலே ஒரே தொழிற்சங்கம் என்ற அந்தத் தத்துவம் இல்லாத காரணத்தாலே, ஒரு தொழிற் சங்கத்திற்கும் மற்றொரு தொழிற்சங்கத்திற்கும்—ரைவல் டிரேட் யூனியன்ஸ் என்ற வகையிலே சில கருத்து வேறுபாடுகள் வருகின்ற நேரத்திலே, சில குழப்பங்கள் சில தடுமாற்றங்கள் வருகின்றன. அவற்றையெல்லாம் போக்க தமிழக அரசு இன்றைக்கு ஆய்ந்து கொண்டிருக்கிறது. அவைகளுக்கான அடிப்படை தொழிற்சங்க உரிமைகளை எப்படி வழங்குவது என்பது பற்றி தெளிவான ஒரு முடிவை தமிழக அரசு எடுக்க இருக்கிறது. குறிப்பாக, அடுத்த மாதம் டெல்லியில் நடைபெறுகின்ற ' நாஷனல் லேபர் கான்பரன்ஸில் ' தமிழ்நாட்டின் நிலை என்ன, தமிழக அரசினுடைய நிலை என்ன என்பது தெரியும்.

ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற தத்துவம் எல்லாம், 30, 35 ஆண்டுகளாக பேசப்பட்டுப் பேசப்பட்டு தள்ளி போடப்பட்டுக்கொண்டே வருகிறது. அதற்கு ஒரு முடிவு காண டெல்லியில் இருக்கிற தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அஞ்சையா அவர்கள் விடுத்த திங்கள் நாஷனல் லேபர் கான்பரன்சைக் கூட்டியிருக்கிறார்கள். அதற்கு முன்னோடியாக வருகிற 21ஆம் தேதி டெல்லியில் 4 அரசுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் அமைச்சர்களை அழைத்திருக்கிறார்கள். ஒன்று மகாராஷ்டிரம், இரண்டு தமிழ்நாடு. அதிலே நான் கலந்துகொள்ள இருக்கிறேன். அதில் இந்தக் கொள்கையை வலியுறுத்தி, விரைவாக ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் வேண்டும், அப்பொழுதுதான் பார்கெயினிங் பவர்—அந்தத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தோடு பேசும்போது நியாயமான



உரிமைகளைப் பேணுவதற்கு அளவில்லாத ஒரு சக்தி பெறுவதற்குரிய ஒரு வாய்ப்பிருக்கும். அந்தக் கொள்கையை இன்றைக்கு அரசு கொண்டிருக்கிறது. ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்பது புரட்சித் தலைவரின் கொள்கை. அந்தக் கொள்கை செயல்பட இன்றைக்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச சங்கடங்களைப் போக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதில், வருகின்ற மாநாட்டில், வருகிற 20 ஆம் தேதி தனிப்பட்ட முறையில் அந்தக் குழுவிலும் வலியுறுத்துவோம். அதற்குப் பிறகு செப்டம்பர் மாதம் அகில இந்திய அளவிலே தொழில் நிர்வாகிகள், அடுத்து தொழிற்சங்கத் தலைவர்கள், அதே போல் மாநில அமைச்சர்கள், ஆக இந்த முத்தரப்பினர் கூட இருக்கிற அந்தப் பெரிய மாநாட்டிலே உறுதியாக அந்தக் கொள்கையை வலியுறுத்தும் தமிழக அரசு.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இல்லை என்பதுதான் இந்தத் தகராறுகளுக்கு அடிப்படையான காரணம். பல ஆண்டுகளாக பேசப்பட்ட பிரச்னை இது. அமைச்சர்கள் மட்டத்திலும் பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் முக்கூட்டுக் குழுக்களிலும் பேசப்பட்டது இது. இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஒரு தொழிற்சாலையிலே பெருவாரியான தொழிலாளர்களுடைய ஆதரவைப்பெற்ற ஒரு சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்கிற ஒரு கொள்கையை தமிழக அரசு வருகிற மாநாடுகளில் வரவேற்குமா என்று அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்களுடைய உணர்வுகளை வைத்துக் கொண்டு, நாட்டு நலன், தேசிய நலன், தொழிலாளர் நலன், இவைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு நல்ல முடிவை அரசு எடுக்கும்.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலிலேயிருந்து சட்டம் வழங்கியிருக்கிற உரிமைகளின்படி சங்கம் சேர்ந்த காரணத்திற்காகத்தான் அந்தத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. சட்டம் வழங்கியிருக்கிற அடிப்படை உரிமையை மீறிய அந்த நிர்வாகத்தினர் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிவதோடு, அரசியல் சட்டமே வழங்கியிருக்கிற உரிமைகளை மீறுகின்ற அந்தக் கொள்கையின் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய பொருத்தமான திருத்தங்களைச் சட்டத்தில் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 9

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதைப்போல 95 தொழிலாளர்கள் நீக்கப்பட்டார்கள். அரசு முயற்சியின் காரணமாக் 69 தொழிலாளர்கள் வேலையில் மீண்டும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மீதியுள்ள 26 தொழிலாளர்களையும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, சாதகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கை வருகிற 20-ந்தேதி டெல்லியில் நடக்கவிருக்கும் கூட்டத்திலும் வலியுறுத்தப்படும். அடுத்து நேஷனல் லேபர் கான்பிரன்ஸ், அகில இந்திய அளவில் பெரிய அளவில் ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நடக்கவிருக்கிறது. அந்தக் கூட்டத்திலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்தக் கருத்தை வலியுறுத்துவோம்.

**சென்னையில் தனியார் கால்நடை பராமரிப்பு.**

558—(*வினா எண் 2043)—திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர எல்லைக்குள் தனியார் கால்நடைகளை வைத்துப் பராமரிப்பதைத் தடை செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மாட்டுத்தொழுவங்களையும், கால்நடைகளையும் நகருக்கு அப்பால் கொண்டு செல்வதற்கான திட்டம் ஏதேனும் தீட்டப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) சென்னை நகர எல்லைக்குள் கால்நடைகள் வைத்துப் பராமரிப்பதைத் தடை செய்வதைப்பற்றி அரசு ஆலோசித்து வருகின்றது.

(ஆ) மாட்டுத் தொழுவங்களையும் கால்நடைகளையும் நகருக்கு அப்பால் கொண்டு செல்வதற்கான திட்டம் சம்பந்தப்பட்ட குழுவிலிருந்து இன்னும் அரசுக்கு கிடைக்கப்பெறவில்லை. அதனை விரைந்து பெறுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். வேணுகோபால் : தலைவரவர்களே, வெளியே மாடுகளைக் கொண்டு தொழுவத்தில் கட்ட தனி இடம் பார்த்திருப்பதாகத் தகவல் தெரிவிக்கிறது. அது உண்மையா ?



1985 ஜூலை 9]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, தற்போது நெல்லூர் நெடுஞ்சாலையில் சென்னைக்கு அப்பால் மாதவரத்தில் அரசுக்குச் சொந்தமான பண்ணை இருக்கிறது. அங்கே அரசுக்குச் சொந்தமான நிலம் ஏறத்தாழ 500 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அங்கே கால்நடைகளைப் பராமரிக்க எல்லா அடிப்படை வசதிகளும் (இன்ஃப்ரா ஸ்டரக்சர் பெசிலிட்டீஸ்) இருக்கின்றன. ஆகவே, முதற்கட்டமாக சென்னை மாநகரிலிருந்து அப்புறப்படுத்துகின்ற கால்நடைகளை அந்தப் பகுதியில் வைத்து பாராமரிக்கப்படும். பின்னர், அதைத் தொடர்ந்து புறநகர் பகுதிகளில் தக்க இடங்களைத் தேர்ந்தெடுத்து சென்னை மாநகரிலிருந்து அப்புறப்படுத்தப்படவிருக்கும் சுமார் 4 இலட்சம் கால்நடைகளையும் அங்கே வைத்து பராமரிக்க அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். வேணுகோபால் : தலைவரவர்களே, இந்த ஆண்டிற்குள் அது முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் நிச்சயமாக முடியும்.

**கருப்புக்கல் அறுத்து மெருகிடும் பிரிவு.**

559—(*வினா எண் 701)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருப்புக்கல்லை (Granite Stone) பாலிஷிங் அண்ட் கட்டிங் செய்ய சுமார் 3½ கோடி ரூபாய் செலவில் யூனிட் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னைக்கு அருகில் மணலியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் பாறையை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது. இது 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடையது. இத்தொழிற்சாலை அமைக்க சுமார் ரூ. 385 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை நடப்பாண்டில் (1985–86) இறுதியில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த கருப்புக் கல்லை வெட்டி எடுப்பதும், மெருகு ஊட்டுவதும் நல்ல இலாபத்தைத் தருகின்ற ஒரு தொழிலாக இருக்கின்ற காரணத்தால் அரசுக்குச் சொந்தமான 'டாமின்' நிறுவனத்தின் மூலமாக கருப்புக் கல்லை வெட்டி எடுக்கவும் மெருகு ஊட்டவும் ஏற்பாடு செய்து, இந்தத் தொழிலை விரிவுபடுத்தும் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தொழிற்சாலை பற்றிய ஒரு திட்டம் இது. வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்து, கல்லை அறுத்து வெளிநாடுகளில் தேவைக்கேற்ப ஏற்றுமதி செய்கிற காரியம் இது. அரசுக்குச் சொந்தமான டாமின் நிறுவனம் மூலமாக இதைச் செய்ய முடியுமா என்று கேட்கிறார்கள். இப்போதே அப்படித்தான் செய்யப்படுகிறது.

## சென்னையில் கம்ப்யூட்டர் மையம்.

560—(*வினா எண் 992) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள சிறு தொழில் கூடங்கள் வசதிக்காக ஒரு கம்ப்யூட்டர் சென்டர் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ). தொழில் மற்றும் வணிகத் துறையில் ஒரு கம்ப்யூட்டர் கருவியை நிறுவுவதற்கும் அதன் மூலம் சிறு தொழிற்கூடங்களுக்குத் தேவையான அடிப்படை தகவல்களை வழங்குவதற்கும் மற்றும் தகவல்களை சேகரிப்பதற்கும் உரிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதேபோல் இரசாயனம் மற்றும் அதைச் சார்ந்த தொழிற்சாலைகளுக்கும் இம்மாதிரி வசதியை அளிப்பதற்கு மற்றொரு கம்ப்யூட்டர் கருவியை தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநர் அலுவலகத்தில் நிறுவுவதற்கு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 'மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ்' தொழிலாளர்கள்.

573 அ—(*வினா எண் 3852) திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம் 'மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ்' மில் கடந்த 1984 ஏப்ரல் முதல் மூடி இருப்பதால் அதில் பணி புரியும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) தொழிலாளர் துறை தனித் துறை ஆணையர் இரு தரப்பினரிடமும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் பயனாக அவரது முன்னிலையில் 11—10—84 அன்று தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் ஆலையிலுள்ள இயந்திரங்கள் முழுமையாக உபயோகிப்பதில் படிப்படியாக முன்னேற்றம் காணவேண்டுமென்றும், சிக்கனச் சீரமைப்பு, சம்பளம் போன்ற பிரச்சினைகளில் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி அதில் முடிவு ஏற்படாவிடில் அவை மீண்டும் தனித் துணை ஆணையர் முன்பு பேசி தீர்க்கப்பட வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் பிறகு சில தொழிற் சங்கங்கள் மேற்கூறப்பட்ட ஒப்பந்தப்படி தறிகளையும், ஸ்பின்னிங் பிரேம்களையும் நிர்வாகம் சரிவர ஓட்டுவதில்லை என்றும் சிக்கன சீரமைப்பு பிரச்சினையைத் தீர்ப்பதிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும், இந்த ஆலையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும் முறையீடு செய்துள்ளது. இந்த முறையீட்டின் மீது சேலம் தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்ணயித்த விசாரணையில் நிர்வாகம் கலந்து கொள்ளவில்லை. இந்த ஆலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தொடர்ந்து அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் சொன்னபடி 11–10–1984 அன்று முடிவான செட்டில்மென்டை மேனேஜ்மென்ட் ஹானர் செய்யவில்லை என்ற நிலைதான் தொடர்ந்து இருந்து வருகிறது. அதற்குப் பிறகு அந்த செட்டில்மென்ட்படி அவர்கள் நடக்கவில்லை என்றிருந்த நிலையை விட 4 முறை கன்சிலியேஷன் மீட்டிங் நடந்தும் அதற்கு அந்த நிர்வாகம் வரவில்லை என்று அங்கே சொல்லப்படுகிறது. எனவே, இந்தப்பிரச்சினை குறித்து முழுமையாக ஒரு தீர்வு காண்பதற்கு முன்பு குறைந்தபட்சம் ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தையாவது ஒப்புக்கொள்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர்

[1985 ஜுலை 9

அவர்கள் அல்லது இப்போது துணை ஆணையர்தான் இப் பிரச்சினையில் தலையிட்டிருக்கிறார்கள்-கமிஷனரை வைத்தாவது அந்த ஒப்பந்தப்படி நிர்வாகத்தை நடத்த முயற்சிகளை மேற் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி கமிஷனரைக் கொண்டே அடுத்து இதை நடத்த அரசு ஆணையிடும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-ஆம் ஆண்டு போனஸ் கொடுக்கவில்லை என்ற நிலைமை அங்கே இருந்து வருகிறது. அதேபோல் லே ஆஃப் காம்பென்சேஷன் கொடுக்கவில்லை என்ற நிலைமையும் அங்கே இருப்பதாகத் தொழிலாளர் மத்தியில் சொல்லப்படுகிறது. எனவே இந்தப் பிரச்சினையிலாவது தலையிட்டு 1983-ஆம் ஆண்டுக்கான போனஸைப் பெற்றுத் தருகின்ற வகையிலும் லே ஆஃப் காம் பென்சேஷனைப் பெற்றுத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆலையில் உள்ள ஒருசில பிரச்சினைகளைப் பற்றிச் சொன் னார்கள். குறிப்பாக 12(3) செட்டில்மென்டை அவர்கள் செயல் படுத்தாமல் சுணக்கமாக்கி தொழிலாளர்களுக்கு பாதகமான ஒரு அம்சத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று சொன் னார்கள். லே ஆஃப் காம்பென்சேஷன், போனஸ் ஆகியவை கொடுக்கப்படவில்லை என்கின்ற பிரச்சினைகள் குறித்து முக்கிய மான முடிவு எடுக்கின்ற வகையில் என்னைப் போன்றவர்கள் தலையிட்டு ஒரு சுமுகத்தை ஏற்படுத்த முயற்சி செய்வோம் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நீண்ட நாட்களாக ஒழுங்காகச் செயல் படாமல் அந்தத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். சட்ட மீறலைத் தொடர்ந்து அந்த மில் முதலாளிகள் கையாளுகிறார்கள். அது குறித்து நான் அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது என்னவென்றால் லே ஆஃப் காம்பென்சேஷன் கொடுக்கப்படவேண்டும் என்பதும் அவர்கள் சம்பாதித்த சம்பளத்தின் ஒரு பகுதியான அந்த போனஸ் கொடுக் கப்படவேண்டும் என்பதும் அவர்களுக்குச் சட்டப்படியாகக் கொடுக்க வேண்டியவையாகும். இந்த இரண்டையும் மீறுகிறார் கள். எனவே, பேச்சுவார்த்தை தவிர வேறு வழியில்லை, வேறு கதியில்லை என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கும், கன்சிலியேஷன் போட்டால் இன்டஸ்ட்ரியல்



1985 ஜுலை 9]

ஆக்டைத் தூக்கி குப்பையிலே எறிந்து விட்டு அதற்குக் கூட வரா மல் இருக்கிறார்கள். இந்த நிலையினை மாற்றுவதற்கும் அவர் களைக் கம்பெல் பண்ணி, கட்டுப்படுத்தி கன்சிலியேஷன் டேபிளுக்குக் கொண்டுவருவதற்கும் வேண்டிய வகையில் மத்திய அரசிடத்திலே அனுமதிகேட்டு ஒரு சட்டத்திருத்தத்தினை இந்த அரசு உடனடியாகக் கொண்டுவர முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன். இந்த மில் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் நேரடியாகக் கமிஷனர் அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு நிர்ப்பந்தத்தைச் செலுத்தி உடனடியாக அவற்றைக் கொடுக்கும்படி பண்ணுவதற்கு முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர் கள் சொன்ன உணர்வுகளோடு நானும் ஒன்றுகிறேன். இன் றைக்கு பல நிர்வாகங்கள், தொழிலாளர்களுக்கு நியாயமாக சேர வேண்டிய போனஸ், லே ஆஃப் காம்பன்சேஷன், பி.எப்., ஈ.எஸ்.ஐ. இப்படி சட்டபூர்வமான சலுகைகளை, அந்த உரிமை களைக் கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். சட்டத் தில் இருக்கின்ற 'லகூனா'வை, பலஹீனத்தை வைத்துக்கொண்டு ஐ.டீ. ஆக்டைப் புறக்கணிக்கிறார்கள். வருகிற நேஷனல் லேபர் கான்பரன்சிலே இதுபற்றி வருகிறது. 'டு கெட் தி ஓர் கர்ஸ் டியூஸ் பிரம் தி மானேஜ்மெண்ட்'—இன்றைக்கு நிர்வாகத் தினரால் சட்டபூர்வமாக கொடுக்கப்படாமல் இருக்கின்ற, அந் தப் பணங்களையெல்லாம் பெறமுடியாத வாய்ப்பு இருக்கிறது. சட்டபூர்வமாக எப்படி பெற்றுத் தர வேண்டுமோ, அவ்வாறு குறிப்பாக, ஒரு ஆலையை மூடி விட்டால் முதல் சார்ஜாக தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய அந்த பாக்கிகளைக் கொடுக்கவேண்டும் என்பது இதனுடைய கருத்து. இந்தக் கருத்தை வருகிற மாநாட்டிலே தமிழக அரசின் சார்பிலே உங் களுடைய உணர்வுகளை நிச்சயமாக பிரதிபலிப்பேன்.

திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த மேட்டூர் மில்லிலே நீண்ட நெடுநாட்களாக தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. தொழிலாளர் களுக்கு சரியாக சம்பளம் கொடுப்பதில்லை. தொழிலாளர் விருந்து இதற்குத் தீவிரமான நடவடிக்கை அரசாங்கத்தி அது மாத்திரமல்ல. தொழிலாளர்களிடத்திலே பிடிக்கப்பட்ட பி.எப். நிதி 60 இலட்சம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை அவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. ஈ.எஸ்.ஐ-க்கான பிடிக்கப்பட்ட நிதி 12½ இலட்சம் ரூபாய் அவர்களிடத்திலே இருக்கிறது. இதற்காக சம்பந்தப் பட்ட கமிஷனர் தன்னுடைய ரிப்போர்ட்டை நல்லமுறையிலே தயாரித்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று

[1985 ஜூலை 9

எங்களிடமும் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு இதுவரையிலும் அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்கள் சொன்ன அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை. சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டு, உடனடியாக, துரிதமாக, தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

### இடைப்பாடி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்

561—(*வினா எண். 957) திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், இடைப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, ஆட்டையாம்பட்டி ஆகிய பகுதிகளின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ)இடைப்பாடி நகராட்சி, கொங்கணாபுரம் இளம்பிள்ளை, இடங்கனசாலை, ஆட்டையாம்பட்டி, மல்லசமுத்திரம், வெண்ணாந்தூர், அத்தானூர், பிள்ளாநல்லூர் ஆகிய எட்டு பேரூராட்சிகள் மற்றும் 110 வழியோர சிற்றூர்களுக்கு காவேரி ஆற்றை நீர் ஆதாரமாகக்கொண்டு குடிநீர் வழங்க ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே கடும் குடிநீர் பற்றாக்குறை இருப்பதை கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை விரைவில் எடுத்துக்கொண்டு, செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தொடர்புடைய நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றின் வரவுசெலவுத் திட்ட அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்த பிறகு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, முடிவு செய்யலாம்.



1985 ஜூலை 9]

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைப்பாடி நகராட்சியிலே தற்போது வழங்கப்படும் குடிநீர் பற்றாக்குறை இருப்பதால், மேலும் அங்கு மேல்நிலைத் தொட்டி கட்டி, நல்லமுறையிலே குடிநீர் விநியோகம் செய்வது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. இருந்தாலும் அரசு பரிசீலிக்கும்.

### இரசாயன உரம் மூலம் கிருமி பரவுதல்.

562—(*வினா எண் 1726)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரசாயன உரங்கள் மூலம் கிருமிகள் பரவுவதற்கு வாய்ப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடுக்கும் முயற்சிகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

(முற்பகல் 9-30)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரசாயன உரங்கள் மூலம் கிருமிகள் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். ஆஸ்திரேலியா நாட்டில் அதுபற்றி ஆராய்ச்சி செய்து இப்போது இருக்கிற இரசாயன உரங்களால் கிருமிகள் பரவுகின்றன என்றும் பயிர்களில் அவை மேலடியில் தங்கியிருந்து பயிர்கள் சிறிது வாடினாலும் அவைகளில் புகுந்து தாக்குகின்றன என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதனைத்தான் அமைச்சர் அவர்களுடைய பார்வைக்குச் சொல்லி அதனை நம்முடைய வேளாண்மைத்துறை அதிகாரிகள், விஞ்ஞானிகள் கண்டுபிடித்து அதைத் தடுக்கிற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 9

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றி இதுவரைக்கும் நமக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. ஆராய்ச்சியாளர்கள் அந்த வகையில் கருத்துத் தெரிவிக்கவில்லை. இலக்கியச் செல்வர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் புதிதாக ஆராயலாம். உரம் தாவரத்திற்கு உரம் என்ற வகையிலேதான் பயன்படுத்தப்படுகிறதே தவிர வேறு எந்தவிதமான தகவலும் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த உண்மை இருக்கிற காரணத்தினால்தான் அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்டு அவர்கள் தகவல் இல்லை என்று சொன்னாலும் இனி மேல் தகவல் வரும்; அப்படி வந்தால் அதைப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இரசாயன உரங்கள் அளவுக்கு மேல் அதிகமாகப் போடப்படுகின்றன என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தமிழ்நாட்டிலே பயிருக்கு எவ்வளவு உரம் தேவையோ அதற்கு மேலும் போடப்படுகின்ற நிலை இருக்கிறது. தழை உரம், இலை உரம் போன்ற கம்போஸ்ட் உரங்களை அதிகமாகப் பயன்படுத்தச் செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா? அந்தக் காரியத்திலே விவசாயிகள் ஈடுபடவேண்டுமென்ற முறையிலே அவர்களை ஊக்குவிக்கின்ற முறையிலே ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நீலப்பச்சைப் பாசி போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று விவசாயிகளுக்கு நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். இதைத் தவிர பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு பயிர் வகைக்கும் எந்த அளவுக்கு உரம் பயன்படுத்த வேண்டுமென்று தெளிவுபடுத்தி வருகிறோம். ஒட்டு மொத்தமாக நமக்குத் தேவையான அளவுக்கு இன்னும் நாம் எட்டிப்பிடிக்கவில்லை என்பதுதான் உண்மை.

சீர்காழிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம்.

563—(*வினா எண் 2172)—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின் பணிகள் தற்போது எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) அந்த பணிகள் எப்போது நிறைவு பெறும் ?



1985 ஜூலை 9]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகருக்கு உலக வங்கி கடனுதவித் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ரூ. 153.13 இலட்சம் மதிப்பீட்டிலான துணைத் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிவுற்று விரிவான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான பணிகள் 1985–86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்திற்குத் தண்ணீர் எடுப்பதற்கு கொள்ளிடத்திலே இருக்கின்ற சித்தமல்லி என்ற இடத்திலேயிருந்து தண்ணீர் எடுத்து வருவதற்காக ஆய்வுப் பணிகள் செய்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படியென்றால் வருகின்ற வழியிலே உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. அப்படியென்றால் எந்த எந்தக் கிராமங்களுக்கு எத்தனை கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சீர்காழி உட்கிராமங்கள் புள்ளிசா காடு, முதியாவனம், கோயில்பட்டி, இணையழி, சித்தமல்லி, குறிச்சி, பனங்காட்டுக்குடி, வள்ளுவக் குடி, நென்மேலி, அகனி, கொண்டல், துறையூர், பனமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு நாம் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த சித்தமல்லி என்ற இடத்தில் தண்ணீர் எடுப்பதால் இப்படிப் பல்வேறு கிராமங்களுக்கு விநியோகம் செய்வதால் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுவதால் கொள்ளிடத்தில் தடுப்புச் சுவர் கட்டி தண்ணீரைத் தேக்குவதற்கு அரசு ஆய்வு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வேடப்பட்டிக்கு சிறுவாணி குடிநீர்த் திட்டம்.

564—(*வினா எண் 2877) திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடப்பட்டி பேரூராட்சி பகுதிக்கு சிறுவாணி குடிநீர்த் திட்டம் விரிவு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அங்கு மேல்நிலை தொட்டி கட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வேடப்பட்டி பேரூராட்சியில் ஏற்கனவே உள்ள மேல் நிலைத் தொட்டிகள் நல்ல நிலையில் உள்ளன. அதையே உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ள இப்போது தீர்மானிக்கப்பட்டு உள்ளது. மேலும் இங்கு குடிநீர் வழங்கும் திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது.

திரு. ஆ. நடராசன : தலைவர் அவர்களே, வேடப்பட்டி, குரும்பப்பாளையம், நம்பி அழகன் பாளையம், நாகராஜன்புரம், எப். ஐ. சி. கோடவுன் ஆகிய பகுதிகளுக்கு சிறுவாணித் திட்டத்திலிருந்து தண்ணீர் வரவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் அந்தப் பகுதியிலே மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டாததால் வருவதற்கில்லை என்று சொல்கிறார்கள். அதைக் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சிறுவாணியிலிருந்து 0.126 மில்லியன் லிட்டர் தண்ணீர் வேடப்பட்டிப் பகுதிக்கு ஒதுக்குவதற்கு 20—8—84 அன்று அரசு ஆணை வழங்கிவிட்டது. அப்படி நிறைவேற்றாமல் இருக்குமானால் அதை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

வைகுண்டம் ரப்பர் தொழிற்சாலை கழிவு நீர்.

565—(*வினா எண் 360) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா, நல்லூர் ரெவின்யூ கிராமத்திலுள்ள பம்மம் என்னும் இடத்தில் அமைந்துள்ள வைகுண்டம் ரப்பர் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பொதுமக்களுக்கு சுகாதாரக் கேடு விளைவிப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டம் பம்மம் என்னுமிடத்திலுள்ள வைகுண்டம் ரப்பர் தொழிற்சாலையின் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் பொது மக்களுக்கு சுகாதார கேட்டினை விளைவிக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.





டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அந்தத் தொழிற்சாலையின் மூலமாக சுகாதாரக் கேடு விளைவது உண்மைதான் என்று கூறியிருக்கிறார்கள். அதே நேரத்தில் இது வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மட்டும் அல்லாமல், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு அங்கே இருக்கவே முடியாத அளவுக்கு துர்நாற்றம் இருப்பதாலும், கிணறுகளில் ஊறுகின்ற தண்ணீரில் கூட அதன் பாதிப்பு ஏற்பட்டு அந்தப் பகுதி மக்கள் பெருவாரியான நோய்களுக்கு ஆளாகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு உடனடியாக அந்த தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரைக்கும் நாம் பரிசோதனை செய்து, உடனடியாக அந்தக் கழிவு நீரை சுத்திகரிக்க வேண்டும் என்று, அதற்காக அவர்களுக்கு 6 மாத காலம் அவகாசம் கொடுத்து, கெடு வைத்து உத்தரவு இட்டோம். பிறகு அந்த 6 மாதங்களுக்குள் அவர்கள் செய்யவில்லை என்று தெரிந்த உடனேயே அவர்களுக்கு ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். முறையாக சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு அவர்கள், ரிச்சர்ட்ஸ் அன்ட் குருடாஸ் என்ற கம்பெயின் மூலமாக—அவர்கள் தான் அங்கே சுத்திகரிக்கக்கூடிய தொடர்பான பணியை ஏற்று இருக்கிறார்கள்—அதை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்று எழுதி இருக்கிறார்கள். இதற்குப் பிறகும், மேலும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், செக்ஷன் 26-ன் கீழ் நடவடிக்கை எடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை வெளியேற்றுவதாக இருந்தாலும் கூட, இப்போது வருகின்ற சேனல் வழியாகவே அதை வெளிவிடாமல், அவர்களுக்கு சொந்தமான அந்த பங்களா பகுதிக்குள்ளாகவே செப்டிக் டேங்க் கட்டி அவற்றை அதிலே தேக்கி வைத்து, அதன் பிறகு வேறு வழியாக வெளியேற்றுவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில்,—சுத்திகரிக்க வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருந்தாலும் கூட—எக்காரணம் கொண்டும் அந்தக் கழிவு நீர் வெளியே வரா வண்ணம் தடை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பகுதிகளாக அந்தக்

கழிவு நீர் சுத்திகரிக்கப்பட வேண்டும். The acidic efftluent is neutralised with quick time. The industry has informed that the existing treatment system wil! bo recovered by addition of dilute sulphuric acid என்று நமக்கு அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மாதிரியாக It is also suggested to put an ancrobic lagoon and Faculative lagoon to treat further to the full requirement.

Anaerobic lagoon and Faculative lagoon என்று இரண்டு நிலைமைகளை ஏற்படுத்தி, சுத்தி கரிக்கப்பட்ட கழிவு நீர் கூட அங்கேயே வைக்கப்பட வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறோம்.

**நெல்லிக்குப்பம் இ. ஐ. டி. பாரி லிமிடெட் எரி அடுப்பு.**

*566—(*வினா எண். 1398)* **திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி (இ) லிமிடெட் என்கிற சர்க்கரை ஆலையின் எரி அடுப்பிலிருந்து வெளிக் கிளம்புகின்ற கரித் தூள்கள் ஆலையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூர சுற்றளவுக்கு பரவி நகரத்தின் தூய்மையையும், சுகாதாரத்தையும் கெடுப்பதுடன் நகரத்தில் சாலை விபத்துக்களும் ஏற்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) இது குறித்து அரசு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் பகுதியிலே அரவை ஆலை வைத்திருக்கிற ஈ.ஐ.டி. பாரி சக்கரை ஆலையில் அரவைக் காலத்தில், அந்த ஆலையின் எரி அடுப்புகளிலிருந்து வெளியேறுகிற கரித் துண்டுகள் நெல்லிக்குப்பம் பகுதியைச் சுற்றியிருக்கும் 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் பரவி பாதையிலே வருகிற பாதசாரிகளின் கண்களிலும், சைக்கிள்களில் வருகின்றவர்களின் கண்களிலும்,



விழுந்து பாதிப்பு ஏற்படுத்துவதோடு, லாரி போன்ற வாகனங்களை ஓட்டுபவர்களின் கண்களிலும் விழுந்து அதனால் அங்கே பல விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட்டு பல சாவுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, நெல்லிக்குப்பம் பகுதியில் வாழ்கின்ற மக்களின் சாப்பிடுகின்ற உணவிலும், உடுக்கின்ற உடையிலும் கூட அந்தக் கரித் துகள்கள் அதிகமாகப் பரவி பாதிப்பு ஏற்படுத்துவதோடு, சுகாதாரக் கேட்டையும் ஏற்படுத்துகின்ற நிலையை மாற்ற, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. சர்க்கரைத் தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 9.6 மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்கிறது. எரி சாராய தொழிற்சாலை மாதம் ஒன்றிற்கு ஆறு லட்சம் லிட்டர் எரி சாராயத்தை ''ஆல்கஹால்'' தயாரிக்கிறது. மிட்டாய்த் தொழிற்சாலை மாதம் ஒன்றிற்கு 400 மெட்ரிக் டன் மிட்டாய் தயாரிக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் கரும்புச் சக்கையிலிருந்து எரியூட்டப்படுகிற பெகாசே என்ற பொருளை பயன்படுத்தி அவர்கள் அங்கே நெருப்பை உற்பத்தி செய்கிறார்கள். அதன் மூலம் நெருப்பு வருகிறது. பெகாசேயிலிருந்து வெளிப்படுகிற 'பால்-அவுட்' கரித்தூளாக வருகிறது. இவைகளைப் பார்த்து இன்றைக்கு கட்டுப்படுத்த வேண்டுமென்று அவர்களிடம் சொல்லி இருக்கிறோம். அந்த அடிப்படையில் 1981 ஆம் ஆண்டு காற்று மாசுத் தடுப்பு கட்டுப்பாட்டு சட்டத்தின் 21-ம் பிரிவின்படி தொழிற்சாலை செயல்படுவதற்கு அனுமதி கோரி நிர்வாகம் விண்ணப்பித்துள்ளது. முதலிலே அவர்கள் அதைச் செய்யவில்லை. நாம் நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகு அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். நாம் சொல்லியிருக்கிற நிபந்தனைகளை ஏற்று உடனடியாக அவர்கள் அந்தத் தவறுகளைத் திருத்த வில்லையென்றால், தாட்சணியம் இல்லாமல் அந்தத் தொழிற்சாலை மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

**திரு. துரை அன்பரசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்சணியம் இல்லாமல் இ.ஐ.டி. பாரி லிமிடெட் தொழிற்சாலை நிர்வாகத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று சொல்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஆலையில் பணியாற்றுகின்ற இரண்டு தொழிலாளர்கள் கரித்தூள் பட்ட காரணத்தால் கண்களை இழந்திருக்கிறார்கள். அந்த ஆலையிலிருந்து கரித்தூள் பரவாமல் செய்ய வேண்டுமென்று கோரி ஆண்டுதோறும்

உண்ணாவிரதம், போராட்டங்கள், போன்றவற்றை மக்கக செய்து வருகிறார்கள். இதுநாள் வரையில் அதன்மேல் அந்த நிர்வாகம் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. ஆகவே வருகிற கரும்பு அரவை நேரத்திற்குள் அப்படிப்பட்ட கரித்தூள்கள் பரவுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தக் கரித் தூள் வருவதற்குக் காரணம் ஏற்கெனவே நான் தெரிவித்ததைப் போல பெகாசே தான். பெகாசே என்றால் கரும்புச் சக்கை என்று சொல்வார்கள். இதனால் கரித் தூள் வருகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். ஏர் பொலூஷன் ஆக்ட் மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு தொழிலாளர்கள் கண்ணிழந்த நிலைமையை சொல்லி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் சட்டத்திலே அதற்கு வாய்ப்பு இருக்கிறது. வேலை செய்கிற நேரத்திலே விபத்து ஏற்பட்டால், சேதம் ஏற்பட்டால் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. அதன் மூலமாக அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு காம்பென்சேஷன் வாங்கிக் கொடுப்பதற்கு உறுப்பினர் அவர்கள் முயலவேண்டும். பொதுவாக இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகிற இந்த நிலையில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்றுதான் முதலில் சொன்னேன்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, எரிக்கப்படுகிற பெகாசேயிலிருந்து வருகிற கரித் தூள் பிரச்சினை மட்டுமல்ல. அநேகமாக சென்னை நகரத்திலும், தமிழகம் முழுவதிலும் பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீர், கேஸ் இன்னும் பல்வேறு பொருட்களால் சுகாதாரம் பெருமளவிற்கு பாதிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கான தமிழக அரசினுடைய அமைப்பு மிகவும் பலகீனமாக இருந்துக் கொண்டிருக்கிறது. செயலற்றத் தன்மையில் இருந்து கொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது, தகுதியான நடவடிக்கை, உறுதியான நடவடிக்கை எடுத்து இலாக்காவைச் சீரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு முக்கியமான காரணம், 1974 ஆம் ஆண்டு மாசுக் கட்டுப்பாடு சட்டம் அகில இந்தியாவில் நிறைவேறியது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தச் சட்டம் இங்கே அமல்படுத்தப்படவே இல்லை. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் அமல்படுத்தப்பட்டது. இதில் நாம் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாது. இதிலே இரண்டு பிரச்சினைகள் வரும். உடனடியாக



சட்ட ரீதியாகப் பார்க்கிற போது அதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அவர்கள் அனுமதி பெற வேண்டும். நாம் அதன்மேல் சோதனை செய்ய வேண்டும். அதற்குப் பிறகு ஏதாவது தவறுகளைச் செய்தார்களானால் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி பல்வேறு ஸ்டேஜ்கள் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் எதற்காக அவகாசம் கொடுக்கிறோம் என்றால், We can stop the industry immediately, but resultant problems will be labour unrest and decrease in production. All these problems will have to be taken into consideration.

ஆகவேதான் தாட்சணியம் இல்லாமல் நடவடிக்கை எடுத்து வருகிறோம். 1981 ஆம் ஆண்டுதான் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகுதான் இவைகள் எல்லாம் குறைந்து இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் சொல்கின்ற அந்தக் காரணத்தின் அடிப்படையிலே நாம் துரிதமாக நடவடிக்கை எடுத்து வகிருறோம். ஆங்கிலத்திலே சொல்வார்கள். Make haste slowly அந்த வகையிலே நாம் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். எச்சரிக்கையாகவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில் கரித் தூள்தான் என்று சொன்னார்கள். ஆலைகளிலே எரிக்கின்ற பெகாசே கரித் தூளாக மாறுவதில்லை. தூசாகத்தான் மாறுகிறது. மாறாக பைலர்களை காலத்தோடு கிளீன் செய்யாததால் சிட்டங்கள் கட்டி எரிகின்ற நேரத்திலே மேலே உள்ள வழியாக வந்துதான் கண்களைக் கெடுக்கிறது. அதைப் பற்றி ஆலைகளுக்கு தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி. இந்த ஆலைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி மிக விளக்கமாகச் சொன்னதற்கு நன்றி. அதையும் நாம் கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் அங்கே கிடக்கின்ற அந்தக் கரும்புச் சக்கைகள் திறந்த வெளியிலே இருக்கின்ற காரணத்தால், அதிலிருந்து பறக்கின்ற துகள்கள் சில ஸ்பெசிபிக் வியாதிகளை உருவாக்குகிறது. குறிப்பாக, Some allergic diseases like Asthmatic Bronchitis and chronic Bronchitis போன்ற வியாதிகளை உருவாக்குகிறது. இதற்கெல்லாம் காரணம் அவைகளை திறந்த வெளியிலே வைக்கின்ற காரணத்தால் தான் இப்படி வருகிறது. ஆகவே அவைகளை எல்லாம் மூடிய கூடங்களில் வைக்க வேண்டும் என்று அரசாங்கம் அத்தகைய ஆலைகளை வற்புறுத்துமா ? இதற்காக அந்த ஆலைகளில் இருக்கின்ற மருந்தகங்களில், இதற்கு என்று தனி சிறப்பு மருத்துவம் பயின்ற மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று அரசு வற்புறுத்துமா, என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே*: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்து முற்றிலும் உண்மை. அந்த பெகாசே வெளியே இருப்பதன் காரணமாக ஏராளமாக ஈக்களும் அங்கே உட்கார்ந்து கொள்கின்றன. Flies also multiply ஆகவேதான் நாம் அதைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். நாம் நோட்டீஸ் கொடுக்கின்ற நேரத்திலே இவைகளை எல்லாம் கவனத்திலே கொண்டுதான் செய்கிறோம்.

அதோடு அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். இது வந்து Occupational Health Hazard என்று சொல்வார்கள். இந்த ஆக்கு பேசனல் மெடிக்கல் பிரிவு நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அந்தப் பிரிவிலே பயின்ற அந்த டாக்டர்களை இந்தத் துறையிலே நாம் பயன்படுத்திக கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான அளவில் முந்திரித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே அங்கே தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்கு இந்த முந்திரி உடைக்கின்றபோது. அதனுடைய பால் அவர்கள் மேல் பட்டு, அதனால் அவர்களுடைய துணிகள் கெட்டுப் போகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவாகளுக்கு ஸ்கின் டிஸீஸ் வருகின்ற வாய்ப்பிருக்கிறது. எனவே அவற்றை தடுக்கின்ற விதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அன்பரசன் அவர்கள் கேட்டது, நெல்லிக்குப்பத்தில் உள்ள அந்தத் தொழிற்சாலையைப் பற்றியது.

### காரைக்குடி அரசு மருத்துவமனை

567—(*வினா எண். 1819) திரு. எஸ். பி. துரைராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு மேலும் இரண்டு மருத்துவர்கள், அதிகமான படுக்கை வசதிகள் செய்து தர அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இவ்வசதிகள் செய்து தரப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். பி. துரைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகரிலே சுமார் 1,20,000 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அங்கேயிருக்கின்ற அரசு மருத்துவமனைகளிலே இருக்கின்ற படுக்கை வசதிகள் போதிய அளவிலே இல்லாத காரணத்தால் இப்போது அமைச்சர் அவர்கள் ஒரே வரியிலே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இது எனக்கு மன வருத்தத்தை அளிக்கிறது. 1952-ஆம் ஆண்டிலேயிருந்து வருகின்ற இந்த மருத்துவமனைக்கு காரைக்குடி நகராட்சிக்குச் சொந்தமான அந்த இடத்தை அரசு மருத்துவமனைக்கு தானமாகத் தந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் கிட்டத்தட்ட 33 ஆண்டுகாலமாகியும், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல், காரைக்குடியிலே இந்த அரசு மருத்துவமனை இருக்கிறது. எனவே, இதை முன்னேற்றுவதற்கு அமைச்சரவர்கள் ஏதாவது கூற வேண்டும். அதேபோல் அங்கே எலும்பு முறிவு சிகிச்சைக்கு எந்த வசதியும் இல்லை. எனவே, அமைச்சர் அவர்கள் அதையும் ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காரைக்குடி மருத்துவமனையைப் பொறுத்தவரையிலும் 48 படுக்கைகள் இருக்கின்றன. 8 டாக்டர்கள் இருக்கிறார்கள். அதோடு Opthalmic wing, Dental wing, X-Ray and clinical Laboratory ஆகியவைகள் எல்லாம் இருக்கின்றன. அதே நேரத்தில் இந்த 1985–86 ஆம் ஆண்டு பார்ட்-2 ஸ்கீமில் Orthopaedic department அங்கே திறக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்குத் தாக்கீது வந்தது.

[1985 ஜூலை 9

(முற்பகல் 9–50)

அதை பிளானிங் கமிஷன் மூலம் நாம் கொண்டு வந்து (Standing Finance Committee) ஏற்றுக்கொள்ள இருக்கிறது. வெகு விரைவில் அதற்கும் நாம் ஆணை பிறப்பிக்க இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் விஸ்தரிக்க வேண்டிய மருத்துவ மனை என்பதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இல்லை. அதனுடைய முழு விவரங்களையும் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு இருப்பதன் காரணமாக அவைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி பெரு நகரத்தில் உள்ள அந்த அரசு மருத்துவ மனையில் உள்ள மொபைல் ஆம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து இருக்கிறது. அது போல பல்வேறு நகரங்களில் உள்ள மொபைல் ஆம்புலன்ஸ் வண்டிகளும் பழுதடைந்து இருக்கின்றன. அவசரத்திற்கு உதவாத சூழ்நிலையில் இருக்கின்றன. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்திச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காரைக்குடி மொபைல் ஆம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து இருக்கிறது என்பது உண்மை. உடனடியாக அதை திருச்சிக்கு அனுப்பி ரிப்பேர் செய்து அங்கே தரப்படும். அது மட்டும் அல்லாமல் நாம் சில புது வண்டிகளை வாங்குவதாக இருக்கிறோம். நாம் ஏற்கெனவே பழுதடைந்து இருக்கக்கூடிய வண்டிகளுடைய சதவீதத்தை குறைத்து இருக்கிறோம். இன்னும் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் காமராஜ் மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற விருதுநகரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற இராமநாதபுரத்திலும் 30 இலட்சம் ரூபாய் செலவு செய்து மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் வசதியை அதிகப்படுத்தப்போவதாகச் சொன்னார்கள், ஆகவே, விருதுநகரிலும், இராமநாதபுரத்திலும் எத்தனை படுக்கைகள் அதிகப்படுத்தப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்?



1985 ஜூலை 9]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் யோசனையாகச் சொல்கிறேன். ஒரு ஸ்டார்டு கேள்வியாகக் கேட்டால் எல்லா விவரத்தையும் தரலாம். இது காரைக்குடியை பற்றிய கேள்வி. ஆகவே, முன்கூட்டியே கேட்டு இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநாகேஸ்வரத்தில் துணை சுகாதார நிலையம்.

568—(*வினா எண். 2344) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தாலுக்காவைச் சேர்ந்த திருநாகேஸ்வரம் கிராமத்தில் '' துணை சுகாதார நிலையம் '' அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

[மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆயிரம் மக்களுக்கும் மேற்பட்ட நெசவாள பெருங்குடி மக்கள் திருநாகேஸ்வரம் கிராமத்தில் இருக்கிறார்கள். மேலும், தென் திருப்பதி என்று வழங்கப்படுகின்ற உப்பிலியப்பன் கோயில் அங்கு இருக்கிறது. அதற்காக சுற்றுலா பயணிகள் அதிகமாக அங்கே வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு மக்களுடைய நல்வாழ்வை கருதி மருத்துவ மனையை அங்கே ஏற்படுத்த உரிய முயற்சியை மேற்கொள்ளுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி துணை சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் பற்றி கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, துணை சுகாதார நிலையம் என்றால் சப் சென்டர் என்று பெயர். அதைப் பொறுத்தவரையில் அங்கே நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக ஒரு தொகையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழுமையாக எனக்கு எழுதிக் கொடுப்பார்களானால் நிச்சயமாக அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்பதை இங்கே ஒரு வாக்குறுதியாகச் சொல்கிறேன்.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னால் திருநாகேஸ் வரம் பேரூராட்சி மன்றத்தால் மருத்துவ மனைக்காக நிலம் வாங்கப்பட்டு, அது காலியாக இருக்கிறது. ஆகவே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி ஆரம்ப சுகாதார நிலையமாவது ஆரம்பிக்க முயற்சிப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி மூலம் எழுப்பிய அந்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் து. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கும்பகோணம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந் ததால், தஞ்சை மாவட்டத்தில் (filariasis) யானைக்கால்வியாதி முன்பு எவ்வளவு சதவீதம் இருந்தது? இப்போது எவ்வளவு சதவீதம் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு குறைந்து இருக்கிறது? அதற்காக குறிப்பாக லேட்டஸ்ட்டாக எந்த மருந்துகள் உபயோகப்படுத் தப்படுகின்றன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கள் கேள்வி நேரத்தின் போது அவரவர்கள் இருக்கையில் அமர வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி, ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

## *Government Hospital for Avadi.*

569. (*Q. No. 2918)—THIRU G. ANANTHA KRISHNA : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether the Government have any plan to shift the Primary Health Centre at Avadi in Chengalpattu District to Nemam Village in Poonamallee Panchayat Union and to establish a full fledged Hospital at Avadi ; and

**(b)** if so, the details thereof ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, இந்த நேமம் கிராமத்திலே. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மாற்றுவதற்கு எல்லா இடமும் ஒதுக்கப்பட்டு, அந்த இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் வரும் என்று அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டு இருந்தது. இந்தப் பூவிருந்தவல்லி ஒன்றியத்தில் ஏற்கனவே ஆவடி இருந்த நேரத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம் பிக்கப்பட்டது. ஆனால் 1966-இலே அந்த ஆவடி கிராமம் பல கிராமங்கள் சேர்ந்து ஒரு நகரீயமாக மாற்றப்பட்டது. ஆனால் இந்த ஒன்றியத்தில் இருக்கவேண்டிய ஆரம்ப சுகாதார நிலையம் இன்னமும் அந்த நகரீயத்திலேயே இருக்கின்றது. இரண்டு இலட்சம் மக்களுக்கு மேல் இருக்கின்ற இந்த ஆவடி நகரீயம் பல தொழிற்சாலைகள் உள்ள பகுதியாக இருப்ப தனாலே, அங்கே அரசாங்க மருத்துவமனையே அமைக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. எனவே, ஆவடியிலே ஒரு நல்ல 50 அல்லது 70 படுக்கைகள் உள்ள மருத்துவமனை அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம், விதிமுறைகளைப் பார்த்தால் கூட இந்த அரசுக்கு இருக்கின்றது. எனவே, அங்கு பல படுக்கை கள் கொண்ட மருத்துவமனையும், பூவிருந்தவல்லி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கிடையாது-எனவே, அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கும் அமைச்சரவர்கள் நட வடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமையைப் பொறுத்து தான் நாம் எந்தக் காரியமும் செய்ய முடியும். அடுத்து, ப்ரயாரிட் டீஸ் இருக்கின்றது. தமிழகத்திலே அருகிலே மருத்துவமனை களே இல்லாமல் இருக்கும் கிராமங்களும் பல்வேறு இருக்கின்றன. அவைகள் எல்லாம் பின் தங்கிய, பிற்படுத்தப்பட்ட பகுதி களாகவும், மோஸ்ட் ரிமோட் ஏரியாஸ் ஆகவும் ஹில் ஏரியாஸ்— ஆகவும் இருக்கின்றது. அந்தப் பகுதிகளுக்கு முதலிலே முக்கியத் துவம் கொடுத்து, படிப்படியாக, நேரம் வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பற்றி பரிசீலிக்கலாம்.

## நிலக்கோட்டையில் பழங்களை பதப்படுத்தும் தொழிற்சாலை.

570—(*வினா எண் 1713) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1985 ஜூலை 9

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டைத் தொகுதியில் திராட்சை போன்ற பழவகைகள் அதிகம் கிடைப்பதால் அங்கு பழங்களை பதப்படுத்தும் தொழிற்சாலை நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராட்சை உற்பத்தி ஆகக்கூடிய நிலக் கோட்டை தாலுகாவில் மிக மிகச் சிறிய விவசாயிகள் தான் இந்தத் திராட்சை விவசாயம் பண்ணுகிறார்கள். அப்படிப் பண்ணும்போது ஏறத்தாழ ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் என்று செலவு செய்து உற்பத்தி செய்கிறார்கள். செய்த பிறகு விலை இல்லாமல் மிகவும் சிரமமான நிலைமையை விவசாயிகள் அடைகின்ற காரணத்தினால், பல்வேறு முறைகள் இந்த மன்றத் தில் சொல்லி இருக்கின்ற அந்தக் காரணத்தினால், தயவு செய்து மறுபரிசீலனை செய்து, கொடை ரோட்டை மையமாக வைத்து, ஒரு பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பித்துக் கொடுத்து, அது விவசாயிகளுக்கு நல்ல விலை தேடிக் கொடுக்கும் அளவுக்கும் நிலைமையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர் களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழம் பதப் படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதை நிலக்கோட்டை வட்டாரத்திலே தொடங்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

### கல்வேலிப்பட்டியில் சத்துணவு மையம்

**571—(*வினா எண் 1086) திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கல்வேலிப்பட்டியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?



1985 ஜூலை 9]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கல்வேலிப் பட்டியில் சத்துணவு மையம் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரை முன்மொழிவு அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ளது. அவரது முன்மொழிவு கிடைத்ததும், அதனை பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

**திரு. மு. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை சத்துணவு மையங்கள் இப்போது செயல் பட்டு வருகின்றன ? ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் நாம் போடக்கூடிய சத்துணவில் குழந்தைகளுக்கு, ஒவ்வொரு குழந்தைக்கும் எவ்வளவு செலவிடப்படுகிறது? ஒவ்வொரு குழந்தைக்கும் போடப்படக்கூடிய சத்துணவில் எத்தனை கலோரி சத்துணவு கிடைக்கிறது என்பதையும், அதே நேரத்தில் சத்துணவில் சேர்க்கப்படும் காய்கறிகளில் எந்தந்தக் காய்கறி களில் என்னென்ன சத்துக்கள் உள்ளன என்பதைக் குறித்து, தொகுத்து பொதுமக்களும் சத்துணவு சாப்பிடக்கூடிய சிறார் களும், அறிந்து கொள்ளக்கூடிய வகையில், பயன் உள்ள வகை யில் ஏதாவது விளக்கப் புத்தகங்கள் சத்துணவுத் துறையின் மூலம் வெளியிடப்பட இருக்கின்றதா ? அப்படி இல்லையெனில், அதை வெளியிடக்கூடிய செயல் குறிப்பு சத்துணவுத்துறையில் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, கிராமப்புறங்களில் மட்டும் குழந்தைகளுக்கான சத்துணவு மையங்கள் 28,105 செயல் படுகின்றன. அங்கே வழங்கப்படுகின்ற சத்துணவில் ஒவ்வொரு குழந்தைக்கும் 411 கலோரி ஊட்டம் அளிக்கக்கூடிய சத்து இன் றைக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. காய்கறிகளை நாம் பயன்படுத்தவேண்டும்.

(முற்பகல் 10-00)

கீரை வகைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று நாம் சொல்லி யிருக்கிறோம். அந்தவகையில் பச்சைக் காய்கறிகளையும், கீரை களையும் பயன்படுத்தி வருகிறார்கள். எந்தெந்த காய்கறிகளில் எந்தெந்த சத்துக்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி பதார்த்த குண சிந்தாமணி என்ற புத்தகத்தில் இருக்கிறது. அந்தப் புத்தகம் இப்பொழுது வெளிவருதில்லை என்று தெரிகிறது. எனவே, பழைய பிரதிகளைப் பார்த்து புத்தமாக அச்சிட்டு சத்துணவுத் திட்டத்தின் மூலமாக வெளியிடலாம் என்று அரசு கருதியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[1985 ஜூலை 9

தொழு நோய் புனர்வாழ்வு விடுதி.

572—(*வினா எண். 1984) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய தொழு நோய்க்காரர் புனர்வாழ்வு விடுதிகளில் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் ?

(ஆ) அதற்காக செலவு விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, (அ)1984-ஆம் ஆண்டு டிசம்பர் முடிய அரசு மறுவாழ்வு இல்லங்களில் 3,381 தொழுநோய்க்காரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஆ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய அரசு மறுவாழ்வு இல்லங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தொழு நோய்க்காரர்களுக்காக ரூபாய் 61.59 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பருத்தி மற்றும் வாழைக்குப் பயிர் காப்புறுதித் திட்டம்.

573—(*வினா எண். 2341) திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிர் காப்புறுதித் திட்டத்தினை பருத்தி மற்றும் வாழைப் பயிர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பருத்திப் பயிரானது கொடிய நோய்களால் திடீரென்று தாக்கப்படுவதால் விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைப் போல வாழையும் புயல் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, பயிர் காப்புறுதித் திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 9]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, இந்தப்பயிர் காப்புறுதித் திட்டத்தை நாம் மட்டும் அமல்படுத்துவதில்லை. மத்திய அரசின் யோசனையின் பேரில் அமல்படுத்திக்கொண்டிருக்கிறோம். உறுப்பினரவர்களின் கருத்தை அனுதாபத்தோடு இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

விருதுநகருக்குக் குடிநீர் வழங்கல்.

573ஆ—(*வினா எண். 3796) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

விருதுநகருக்கு தாமிரபரணி ஆற்றில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, விருதுநகருக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விருதுநகரிலே குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருக்கிறது. 73 இலட்சம் ரூபாய் செலவிலே சம்மர் டேங்க் கட்டப்பட்டிருக்கிறது. அதில் தண்ணீர் நிரப்பப்பட முடியாமல் இருக்கிறது. ஏற்கனவே, காருசேரி கல்குவாரியிலிருந்து சப்ளை செய்கிறார்கள். ஒண்டிப்புளி கல்குவாரியிலிருந்து தண்ணீர் எடுக்கப்படும் திட்டம் அரசிடத்தில் இருப்பதாக அறிகிறேன். அது விரைவில் நிறைவேற்றப்படுமா ? மேலும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள், தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவோம் என்று பேசி அது பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. எனவே, அப்படி ஒரு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதற்கு வேறு திட்டம் இருக்கிறது. தாமிரபரணி தண்ணீருக்கு ஆசைப்பட வேண்டாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே ஒண்டிப்புளி கல்குவாரியிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டம் இருப்பதாக அறிகிறேன். அதை உடனடியாக எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து : தலைவரவர்களே, விருதுநகர் குடிநீர் மேம்பாட்டிற்காக 1,24,000 ரூபாய்க்கு திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. நகராட்சி ஆய்வுக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். ஒரு பகுதியைக் கட்டியிருக்கிறது. இன்னொரு பகுதி கட்டி முடிக்கப்பட்டவுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் வளர்ந்து வருகின்ற வணிகப் பெருநகரமாகும். இந்த ஊரில் தண்ணீர்த் தட்டுப்பாடு எப்பொழுதுமே இருக்கிறது. இப்பொழுதுள்ள ஏற்பாட்டின்படி திருத்தங்கல் ஆற்றிலேயிருந்து வருகிறது. இரண்டு திட்டங்கள் இருப்பதாக அறிகிறேன். ஒன்று, வைகை அணையிலிருந்தும், இன்னொன்று தாமிரபரணி ஆற்றிலிருந்தும் தண்ணீர் கொண்டு வருவது என்ற திட்டம் பரிசீலிக்கப்பட்டதாக அறிகிறேன். நான் உங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு விரைந்து திட்டத்தை எடுத்து குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுமா என்று.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதற்குரிய ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், வைகை, தாமிரபரணி என்று சொல்லி புதுப் பிரச்சினைகள் ஏற்படுத்த வேண்டாம்.

### கோட்டூர்புரம் சுகாதார நிலையம்.

573இ (*வினா எண். 1219) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை கோட்டூர்புரம் மாநகராட்சி சுகாதார நிலையத்தை தாய்—சேய் நல மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் இப்பணிகள் துவக்கப்பட உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) சைதை கோட்டூர்புரத்தில் மருந்தகம் தவிர வேறு மாநகராட்சி சுகாதார நிலையமே கிடையாது. ஓர் மாநகராட்சி மகப்பேறு மற்றும் குழந்தை நல நிலையம் கட்டுவதாக இருந்ததும் பின்னர் கைவிடப்பட்டது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு தாய்-சேய் நல விடுதி கட்டுகின்ற அந்தத் திட்டம் கைவிடப்பட்டதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதி ஒரு பின்தங்கிய பகுதி, இன்றைக்கும் சென்னை மாநகரில் இணைந்திருந்தாலும், அது கிராமத்தைப் போல் விளங்கிக் கொண்டிருக்கின்ற பகுதி. ஆகவேதான், அவசியத்தைக் கருதி இந்த ஆண்டில், அல்லது அடுத்த ஆண்டில், அந்தத் தாய்-சேய் நல விடுதியைக் கட்டுகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முழு விவரத்தை விசாரித்ததிலே நமக்குக் கிடைத்த தகவல், அந்த இடத்திலே ஒரு மெட்டர்னிட்டி அன்ட் சைல்ட் ஹெல்த் சென்ட்டர் கட்டுவதற்காக ஒரு லே — அவுட் — சைதை — கோட்டூர்புரத்திலே — போட்டு அதற்காக பவுண்டேஷன் ஸ்டோன் வாஸ் லெய்ட் ; வேலையையும் ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு கோர்ட் இன்ஜங்க்ஷன் மூலமாகத் தடை கிடைத்தது. அந்த கோர்ட் இன்ஜங்க்ஷனை உடனடியாக நீக்க வேண்டுமென்று அரசாங்கத்தினுடைய சட்டத் துறை மூலமாக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் ஏதாவது தடை இருக்குமானால் வேறு இடத்தைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். எனவே, அப்படி வேறு நல்ல இடமாகத் தந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அந்த இடத்திலே தாய்-சேய் நல விடுதியைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே கட்ட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிற காரணத்தாலே, இன்னொரு இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக மெட்டர்னிட்டி அன்ட் சைல்ட் வெல்பேர் சென்ட்டர் அந்த இடத்திலே கட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோவை நகரில் பிச்சையெடுத்தலைத் தடுத்தல்.

573 ஈ (*வினா எண். 21) திரு கு. ரமணி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர வீதிகளில் பிச்சைக்காரர்கள் அதிகமாகி உள்ளது அரசு கவனத்துக்கு வந்துள்ளதா?

[1985 ஜூலை 9

(ஆ) இதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே,
(அ) ஆம்;

(ஆ) பிச்சைக்காரர் வறுமையினால் தூண்டப்பட்டு குற்றம் புரிவாராயின் உழைப்பின் உயர்வு மற்றும் பிச்சை எடுக்கும் தொழிலினால் ஏற்படும் சமுதாய சிக்கல்கள் ஆகியவை அவர்களுக்கு உணர்த்தப்பட்டு, அறிவுறுத்தலின் பேரில் வெளியில் விடப்படுகின்றனர். தொடர்ந்து பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுபவர்கள் பிடித்துச் சென்று பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களில் ஒப்படைக்கப்படுகிறார்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்கள் குற்றம் செய்தால் அதன்மீது அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்படுகிறது என்பது என்னுடைய மூலக் கேள்வி அல்ல. மூலக் கேள்வி, கோவை மாநகர வீதிகளில் பிச்சைக்காரர்கள் அதிகமாகி உள்ளது அரசு கவனத்துக்கு வந்துள்ளதா என்பது. அதற்கு ஆம் என்று சொன்னார். ஆனால், குற்றம் செய்தவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். நான் அதைப் பற்றிக் கேட்கவில்லை. பிச்சைக்காரர்கள் ஏராளமாகப் பெருகிவிட்டார்கள். அவர்கள் பிச்சை கொடுக்கிற ஜனங்களையும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறார்கள். 5 பைசா 10 பைசா கொடுத்தால் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. அந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லைகளைக் கட்டுப்படுத்த என்ன உறுதியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது. எவ்வளவு சட்டங்கள் இருந்தாலும் தெருவிலே பிச்சைக்காரர்கள் சுற்றிக்கொண்டு திரிகிறார்கள். அதோடு, திருடுவதற்கு வேறு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதை எபெக்டிவ்வாகத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்கள், பிச்சை எடுப்பு தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். பிறகு, அந்தப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டு, அதன் பேரில், அவர்களுக்குத் தங்குவதற்கு வசதியும், உடுப்பதற்கு உடையும் அவர்கள் தொழில்கள் கற்றுக்கொள்வதற்குத் தொழில்களும் அரசின் மூலம் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு நல்ல வகையில் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லி, பிச்சைக்காரர்கள் வெளியில் செல்ல வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட பிச்சைக்காரர்கள் ஏதாவது குற்றம் புரிவார்களாயின், அவர்கள் உழைப்பின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, பிச்சை



1985 ஜூலை 9]

எடுக்கும் தொழிலினால் ஏற்படும் சமுதாயச் சிக்கல்களை எல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அந்த அறிவுறுத்தலின் பேரில் அவர்களை விடுதலை செய்து, வெளியில் அனுப்பப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எனக்குக் கொடுத்திருக்கின்ற பதிலுக்கும் நடைமுறையிலே வெளியிலே இருக்கிற நிலைமைக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு சொன்னாலும் பிச்சைக்காரர்கள் ஏராளமாக தினசரி அதிகப்பட்டுக் கொண்டே, தெருவிலே வந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களையும் கைது செய்வது நடக்கவில்லை. கோவை மாநகரில் நூற்றுக்கணக்கான பிச்சைக்காரர்களைக் கொண்டுபோய் வைத்து, அவர்களுக்கு ஏதாவது ஒரு தொழில், அது என்ன தொழிலாக இருந்தாலும் சரி, கைத்தொழிலைக் கற்றுக்கொடுத்து, அவர்களுக்கு உணவும் கொடுத்து, அவர்களை உபதேச முறையிலாவது, வேறு எந்த முறையிலாவது சீர்திருத்தம் பண்ணி, அவர்களை வெளியிலே அனுப்பக்கூடிய முறையில் என்ன தொழிற்சாலை கோவை மாநகரில் இருக்கிறது? ஜெயில்-கம்-தொழிற்சாலை என்ற முறையில் சீர்திருத்த முகாம் ஏதாவது கோவை மாநகரில் அமைக்கப்பட்டிருக்கிறதா? எவ்வளவு பிச்சைக்காரர்கள் அதிலே இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, கோவை மாநகரில் 1984–85ஆம் ஆண்டில் பிச்சை எடுப்போர் தடுப்புச் சட்டத்தின் கீழ் 89 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் 61 பேர்கள் அறிவுரை வழங்கப்பெற்று, விடுதலை செய்யப்பட்டார்கள். மீதமுள்ள 28 பேர்கள் மறுவாழ்வு இல்லத்திதிற்கு அனுப்பப்பட்டனர். மேல் பாக்கத்தில் அரசு பராமரிப்பு முகாம் இருக்கிறது. அந்த முகாமில் கைத்தொழில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. கோவை மாநகரில் இருக்கும் மறுவாழ்வு இல்லங்களில் கைத்தொழில் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அரசு பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, கோவை மாநகரில் இரவு கடை வீதிகளை சாத்திய பின்னால் கடை பலகைகளையும், பிளாட்பாரங்களையும் தங்களுடைய இல்லங்களாக ஆக்கிக்கொண்டு ஹோசூர்ரோடு பெரிய கடை வீதி, ராஜ

வீதி, செண்ட்ரல் பஸ்ஸ்டாண்டு பக்கத்திலுள்ள டாக்டர் நஞ்சப்பா ரோடு ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் 500-க்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்குகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். உண்மையான பிச்சைக்காரர்கள் என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. அது அல்லாமல் பிச்சைக்காரர்களைப்போல வேஷமிட்டுக்கொண்டு ரயில்வே நிலையத்திலிருந்து அதிகாலையில் ரயிலை விட்டு இறங்கி வருகின்றவர்களிடம் வழிப்பறி செய்யக் கூடியவர்களும் பிச்சைக்காரர்கள் என்ற பெயரில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, பிச்சைக்காரர்களை எந்த எந்த வகைகளில் எல்லாம் சீர்படுத்த, ஒழுங்குபடுத்த வாய்ப்பு இருக்கிறதோ அந்த வகைகளிலெல்லாம் ஒழுங்குபடுத்த உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, கோவை மாநகரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்தமாதிரி ஏதாவது சம்பவங்கள் அல்லது பிச்சைக்காரர்களைப்போல வேஷமிட்டுக்கொண்டு அங்கே திரிபவர்களை எல்லாம் பிச்சைக்காரர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிச்சயமாக காவல் துறை கைது செய்து, அவர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

### பரனூர் மறுவாழ்வு இல்லம்.

573-2—(*வினா எண்.81) திரு.இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் செங்கல்பட்டு மாவட்டம் பரனூரில் உள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் உள்ளவர்கள் உணவு போதைவில்லை என்று அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.





(ஆ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லவாசிகளின் நலன்கருதி அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுத் தொகையை நாளொன்றுக்கு, வயது வந்தோருக்கு இரண்டு ரூபாய் முப்பது பைசாவிலிருந்து நான்கு ரூபாயாகவும், பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கட்கு ரூபாய் 1·15 லிருந்து ரூபாய் 2.50-ஆகவும் உயர்த்தி அரசு ஆணை எண் 1278, சமூக நலம், நாள், 29—3—1984-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த பிச்சைகாரர் மறுவாழ்வு இல்லங்களில் இருக்கிற பிச்சைக்காரர்கள் எல்லாம் உணவு போதாது என்று மட்டும் சொல்லவில்லை. ருசியான சாப்பாடு இல்லை, காய்கறி இல்லை, குழம்பு இல்லை என்று சொல்கிறார்கள், ஆகையால் கல்யாணச் சாப்பாடு மாதிரி நல்ல ருசியான சாப்பாடு போட அரசு ஏற்பாடு செய்யுமா ? வேலைப் பளு அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த வேலைப் பளுவைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, பிச்சைக்காரர்களுக்கு இன்றைக்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதை என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கிறேன். உணவுக்கு கொடுக்கப்படும் தொகையை அதிகரித்திருக்கிறோம். 2 ரூபாய் 30 பைசாவிலிருந்து 4 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அதைப்போன்று 1 ரூபாய் 15 பைசாவாக இருந்ததை 2 ரூபாய் 50 பைசாவாக உயர்த்தியிருக்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவு ருசியான முறையில் இல்லை என்று நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ருசியான முறையில்தான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு முறை நான் அந்த பரனூர் இல்லத்திற்குத் திடீர் என்று சென்று பார்வையிட்டபோது அப்போதுதான் அங்கே சமைத்துக் கொண்டு இருந்தார்கள். அந்தச் சமையலை நான் ருசி பார்த்தேன். அப்போது நான் கூட ஆச்சரியப்பட்டேன். மிகவும் நல்ல ருசியான சாப்பாடாக கொடுக்கப்படுகின்றது என்று அப்போது நான் அவர்களிடத்திலே, அதாவது அந்த இல்லரவாசிகளிடத்திலே சொல்லிவிட்டுத்தான் வந்தேன். எனவே அங்கு நல்ல சாப்பாடு கொடுக்கப்படுகின்றது'.

அவர்களுக்கு வேலைப் பளுவும் அதிகமாக இல்லை. அவர்களுக்கு என்ன தொழில் கொடுக்கப்பட வேண்டுமோ அந்தத் தொழிலைத்தான் கொடுக்கிறார்கள். அந்த தொழில்களைக் கற்றுக் கொண்டால்தான் பின்பு அவர்கள் தன்காலில் சுயமாக நின்று மற்றவர்களின் உதவியை நாடாமல் இருக்கின்ற அளவுக்கு நிலைமை ஏற்படும். எனவே அந்த அளவுக்குத்தான் இப்படிப்பட்ட தொழில்கள் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எனவே அவர்களுடைய நலனுக்காகத்தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றதே தவிர அங்கே வேலைப்பளு அதிகமாக இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் பரனூரில் இருக்கின்ற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் வாரத்திற்கு ஒரு முறை விடுமுறை விடப்படுகின்றது. அவர்களுடைய உறவினர்கலளைப் பார்க்க வேண்டும் என்று எழுதிக் கொடுத்துவிட்டு செங்கற் பட்டிலிருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்து, எக்மோருக்கு வந்து அங்கிருந்து டிவிஷன், டிவிஷனாகச் சென்று பிச்சை எடுத்துக் கொண்டு பின்னர் அந்தச் சில்லரையை ஓட்டல்களில் விற்றுவிடு கிறார்கள். இவ்வாறு விடுவது ரத்து செய்யப்படுமா ? மேலும் அவர்கள் பலருக்கும் கஞ்சா விற்கிறார்கள். இது தடுக்கப்படுமா ? பேங்கில் பாஸ் புக்கில் அவர்கள் வரவு-செலவு வைத்திருக்கிறார் கள் என்பதெல்லாம் அரசுக்குத் தெரியுமா ? உரிய நடவடிக்கை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அவர்களுக்கு விடுமுறை என்பது இல்லாமல்தான் இருந்தது. அதன் பின்னர் அந்த இல்லவாசி களின் கோரிக்கையை ஏற்று உறவினர்களை அவர்கள் வெளியூரில் சென்று பார்ப்பதற்கு அனுமதி வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கு விடுமுறை கொடுக் கப்படுகின்றது. அப்படி விடுமுறை கொடுக்கப்பட்டு அதில் அவர் கள் செல்கிறபோது தவறான முறையில் ஈடுபட்டால் நிச்சயமாக அவர்கள் எல்லாம் காவல் துறையினரால் பிடிக்கப்பட்டு பிறகு இல்லங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படுவதாகச் சொன்னார்கள். பழனி திருப்பரங்குன்றம், மருதமலை போன்ற கோயில்களுக்கு அருகே நூற்றுக் கணக்கானபேர் வரிசையாக அமர்ந்து இருக்கிறார்கள். அவர்களை அழைத்துச் சென்று மறுவாழ்வு இல்லங்களில் வைத்து காப்பாற்றி அல்லது அவர்கள் தனியாகத் தொழில் செய்கின்ற வகையில் உதவ ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை ஏற்று அரசு செயல்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்.

### (அ) பிற்பட்டோர் இட ஒதுக்கீடு கொள்கை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் பிற்பட்டோர் இட ஒதுக்
கீடு தொடர்பாக இன்றைக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு
ஒன்று இருக்கின்றது. இரண்டாண்டு காலத்திற்குள்ளாக பிற்
பட்டோர் நலக் கமிஷனுடைய அறிக்கையை உச்ச நீதி மன்றத்தில்
தாக்கல் செய்ய வேண்டும் என்றும் 31—7—1985-ஐ இறுதிக்
கட்டமாக வைத்தும் அதற்குள் கொடுக்க வேண்டும் என்றும்
உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கின்றது. எங்களுடைய
தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேலவையில் இது தொடர்
பாகக் கேள்வி கேட்கின்றபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்
கள் இன்னொரு கமிஷன் கூட அமைக்கலாம் என்று தெரிவித்
திருக்கிறார்கள். எனவே இப்போது 31-7-1985-க்குப் பின்னர் பிற்
பட்டோர் இட ஒதுக்கீடு கொள்கையைப் பொறுத்தமட்டில் ஒரு
கொள்கை இல்லாத நிலைமை அரசுக்கு ஏற்படும். 50 சதவீதமா
அல்லது 31 சதவீதமா என்பதில் ஒரு குழப்பம் ஏற்பட்டு நீதி
மன்றங்கள் கூட தங்களிடம் உள்ள சாட்சியங்களை முக்கியமாக
வைத்து தீர்ப்பளிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அப்படி ஏற்
படுகின்ற நேரத்தில் இந்த அரசுதான் அப்படிப்பட்ட தீர்ப்பு
களுக்கெல்லாம் பொறுப்பு ஏற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.
எனவே இது தொடர்பாக இந்த அரசு என்ன நடவடிக்கையை
31—7—1985-க்கு முன்னால் எடுக்க இருக்கின்றது என்று இந்த
நாடும், இந்த மன்றமும் அறிய விரும்புகின்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே இது பற்றி இருக்கின்ற நிலைமை
கள் முழுவதையும் அறிந்து அதன் பின்னர்தான் அதுபற்றி
எடுத்துச் சொல்லவேண்டும். எனவே இதுபற்றி குறுகிய கால
வினாவாகவோ அல்லது கவன ஈர்ப்பாகவோ கொண்டுவந்தால்
இந்த அவைக்கு விவரங்களை அறிந்து உரிய பதிலை நான் எடுத்து
வைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். அந்த வகையில் எடுத்து
வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20.)

### (ஆ) பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்குதல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஏறத்
தாழ 13 1/2 கோடி ரூபாய் செலவிலே 1 முதல் 8 ஆம் வகுப்பு
வரை படிக்கின்ற தகுதி உள்ள மாணவர்களுக்கு இலவச பாட
புத்தகங்கள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. அண்மை

யிலே கூட தமிழகத்திலே, தமிழக முதல்வர் அவர்களும், மத்திய அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்களும் கலந்துக் கொண்ட ஒரு விழாவில் இலவச பாட புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்று காலையிலே எனக்கு தந்தி வந்திருக்கிறது. அரியலூரிலே இருந்து அங்கே அந்த இலவச பாட புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது போல மதுரையிலேயிருந்தும் புகாரைச் சொன்னார்கள். நான் உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ளவிரும்புவது, பள்ளிகள் திறந்து 2 மாதங்கள் ஆகிவிட்டன. அந்த வறுமைக் கோட்டோடு உறவாடிக் கொண்டிருக்கிற குழந்தைகளுக்கு இலவச பாட புத்தககங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா இல்லையா ? இல்லை என்றால் முழுமையாக எப்போது அனுப்பப்படும் என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அந்தப் பணிகளை ஏற்கனவே துவக்கிவிட்டது, இலவச பாட புத்தகங்களை வழங்கும் திட்டமானது செயல் முறைக்கு வந்துவிட்டது. பல்வேறு ஊர்களிலே அப்படி வழங்கப்பட்டிருப்பதாக விவரங்களை நான் கூட பத்திரிக்கைகளில் பார்த்தேன். குறிப்பாக சில ஊர்களில் வரவில்லை என்று சொன்னால், அது குறித்து பரிசோதித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சென்னை நகரில் அதிகமான போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை மேற் கொள்ளுதல்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசாங்கத்திற்கு ஒரு முக்கியமான விஷயத்தை தெரிவிக்க வேண்டிய நிர்பந்தத்தில் நாங்கள் இருக்கிறோம். சென்னைவாசிகளாக இருக்கக்கூடிய 45, 50 லட்சம் மக்கள், பள்ளிக்கூடம் செல்பவர்கள் அரசாங்க காரியாலயங்களுக்கு போகிறவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் என்று தினமும் லட்சக்கணக்கில் பிரயாணம் செய்யக் கூடிய பிரயாணிகளாக இருக்கிறார்கள். அதுவும் தற்போது நாம் நேரங்களை மாற்றி அமைத்துவிட்டக் காரணத்தினால், நெரிசல் அதிகமாகி ரெயில் வண்டி நிலையங்களில் மக்கள் வெள்ளம் அலை மோதுகிறது. நேற்று கூட நெரிசலின் காரணமாக தகராறு வந்து, மாம்பலம் ரெயில்வே ஸ்டேஷனில், கடைசியில் அது லா ஆண்டு ஆர்டர் பிரச்னையாகி பொது ஜனங்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது.

ஆகவே நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, அதிகமான எண்ணிக்கையில் ரயில் வண்டிகளை— ஸபர்பன் ரயில்களை—விடுவதற்கு ஏற்பாடு செய்து, குறிப்பிட்ட நேரங்களில் மக்களுக்கு ஏற்படக் கூடிய இத்தகைய கஷ்டத்திலிருந்து அவர்களை விடுவிக்க தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று அப்படிப்பட்ட நெரிசல்களை தவிர்க்க வேண்டும் என்றால், அலுவலகங்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும், மற்ற பணிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் மக்கள் செல்வது ஒரு குறிப்பிட்ட நேரமாக இருப்பதனால்தான் ஏற்படுகிறதா என்பதை ஆராய்ந்து, ஒரு அரை மணி நேரம் வித்தியாசமாக அவைகளின் பணி நேரத்தை நிர்ணயிக்கலாமா என்பதைப் பற்றி அரசு யோசித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால் அதிகமான அளவுக்கு ரயில் வண்டிகளை விட வேண்டும் என்ற நிலைக்கு வந்தால், அந்தக் குறிப்பிட்ட நேரங்களைத் தவிர, மற்ற நேரங்களில் கூட்டம் இல்லாமல் காலியாக விடவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அது அவ்வளவு லாபகரமாக இருக்காது என்று சொல்லி மத்திய அரசு அதை மறுக்கக்கூடும். இருந்தாலும் தமிழக அரசு இருக்கின்ற பிரச்னையை தலைமைச் செயலர் அவர்களின் மூலமாக மத்திய அரசுக்கு இந்தக் கருத்தை தெரிவிக்கலாம்.

அத்தோடு நேரத்தை பகிர்ந்து அளிப்பதன் மூலமாக 9, 9 1/2, 10, 10 1/2 என்று பகிர்ந்து அளிப்பதன் மூலமாக நெரிசலை தவிர்க்க முடியுமா என்பதைப் பற்றியும் தலைமைச் செயலாளர் மூலமாக சில ஏற்பாடுகளைச் செய்யலாமா என்பதைப் பற்றியும் அரசு யோசிக்கும்.

(ஈ) அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியில் நன்கொடை அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்து கொள்வது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை சர்வகலாசாலையின் மருத்துவக் கல்லூரி பிரிவு 1985-ல் துவங்க இருக்கிறது. மனுக்கள் அங்கே கொடுக்கப்படுகிறது. 100 ரூபாய் ஒரு மனுவின் விலை என்று சொல்லுகிறார்கள். மற்றக் கல்லூரிகளில் 5 ரூபாய் 10 ரூபாய் என்றுதான் மனுக்களின் விலை இருக்கும்போது இங்கே மனுக்களுக்கே 100 ரூபாய் என்கிறார்கள். அத்தோடு அங்கே 55 பேர்களைத் தான் எடுப்பதாக இருக்கிறார்கள். ஆனால் 10 ஆயிரம் மனுக்கள் இதுவரையில் வந்திருக்கின்றன. மேலும் 5 ஆயிரம் பிரதிகள் அச்சிடப் போவதாக வேறு சொல்லுகிறார்கள்.

அத்தோடு அட்மிஷனுக்கு 2 1/2 லட்சம் ரூபாய் வாங்கப்படுவது குறித்து பத்திரிக்கைகளில் கூட விளம்பரம் செய்கிறார்கள். இப்போது சில பாலிடெக்னிக்குகளில் கூட அதுபோன்ற நிலை இருக்கிறது. இந்த முறையை அனுமதித்தால், பாலிடெக்னிக் படிப்பிற்கு இவ்வளவு ரூபாய், என்ஜினீயரிங் கல்லூரி படிப்பிற்கு இவ்வளவு ரூபாய் என்று நிர்ணயித்து விட மாட்டார்களா ? இத

னால் கல்வியினுடைய தரம் குறைந்துவிடாதா என்பதையும் யோசிக்க வேண்டும் என்பதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனால் வசதி படைத்தவர்களுக்கு மட்டும் தான் இப் படிப்புகளில் வாய்ப்பு இருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு, தக்க நடவடிக்கை எடுப்பார்களா ? 20 பேர்களுக்கு தான் கல்வித் தரம் அடிப்படையில் இடம் கொடுக்கிறார்கள். மீதி 55 பேர்களுக்கு இப்படி 2 1/2 லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு தான் கொடுப்பார்கள். இப்படி இவைகளை வளர விட்டால், கல்வித் துறையில் பெரிய ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து, இதுபோன்று விளம்பரம் கொடுக்கின்ற நிலைமையை தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏதாவது பதில் இருந்தால் அதனைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுகுறித்து விசாரித்து விவரங்களை சேகரித்த பிறகு நாம் வேண்டிய நடவடிக்கை எடுப்போம்.

### 3. அறிக்கை அளித்தல்.

விதி 111-ன் கீழ் தொழில் அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் விதி 111-ன் கீழ் அறிக்கை ஒன்றினை அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே திருச்சி மாவட்டம் புகளூரில் உள்ள தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான காகிதத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து பற்றி 4—7—1985 அன்று கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பதில் அளித்துப் பேசும்போது நான் அந்தத் தொழிற்சாலையை நேரில் சென்று பார்வையிட்டு விவரமான அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளிப்பதாக குறிப்பிட்டிருந்தேன்.

அதன்படி நான் 5—7—1985 அன்று மாலை புகளூரில்உள்ள காகிதத் தொழிற்சாலையை பார்வையிட்டு அலுவலர்களுடன் பேசினேன். நான் முன்னமே இந்த அவைக்கு அறிவித்திருந்ததைப்போல 2—7—1985 அன்று இரவு ஏற்பட்ட தீ விபத்தினால் தொழிற்சாலையில் வைக்கப்பட்டிருந்த இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழ் 2,000 டன் அளவிற்கு எரிந்து நாசமாகியுள்ளது. இதனால் அரசுக்கு 90 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.



136418 சென்னை-600 008.

தீ பிடித்தவுடன் அதை மேலும் பரவாமல் தடுக்கவும் தீயினை அணைக்கவும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் போதிய நடவடிக்கை எடுத்துள்ளார். நாமக்கல், கோபிசெட்டிபாளையம், முசிறி, மணப்பாறை, திண்டுக்கல், திருச்சி சேலம் ஆகிய இடங்களிலிருந்தும் இதர இடங்களிலிருந்தும் தீ அணைப்பு வண்டிகள் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்தன. மொத்தத்தில் 13 தீ அணைப்பு வண்டிகள் கரூர் உதவி ஆட்சியர் தலைமையில் பணியினை மேற்கொண்டு தீயை அணைத்தது. அதனால் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கோ அல்லது அங்குள்ள இயந்திரங்களுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை. மேலும் இவை இன்சூர் செய்யப்பட்டுள்ளதால் இன்சூர் கம்பெனியிலிருந்து இந்தத் தொகையை திரும்பப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4—7—1985 முதல் தொழிற்சாலை தனது வழக்கமான உற்பத்தியை தொடங்கியுள்ளது. மூலப் பொருட்கள் எரிந்துள்ளதால் தொழிற்சாலையின் வழக்கமான உற்பத்தி எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

இத்தொழிற்சாலையில் சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் தீ பாதுகாப்பு அமைப்பு வைக்கப்பட்டு போதிய அளவிற்கு இம்மாதிரியான எதிர்பாராத தீ விபத்து நேரங்களில் போதிய தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு அதன் மூலம் போதிய தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எம்மாதிரியான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

தீ பிடித்ததற்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து நீதி விசாரணை செய்ய ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் நீதிவிசாரணை செய்யப்படும் என்பதையும் இந்த பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

### 4. கவன ஈர்ப்புகள்.

(அ) சேர்வலாறு அணை உடைப்பால் மின் உற்பத்தி பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், மா. மணிமாறன், ஆ. நடராசன், அ. பிரணவநாதன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களின் ஒருவர் மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

[1985 ஜுலை 9

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 'சேர்வலாறு அணையில் உடைப்பு ஏற்பட்டு, பல கோடி ரூபாய் அளவிற்கு பலத்த சேதம் ஏற்பட்டதன் விளைவாக, சேர்வலாறு மின் நிலையத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும் நிலைகுறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நீர்பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக, 22–6–1985ல் சேர்வலாறு அணையில் இருந்த 224 அடி நீர்மட்டம் 25–6–1985 மாலையில் 246 அடிக்கு உயர்ந்தது. மின் உற்பத்தி நிலையத்திற்கு நீர் எடுத்து செல்வதற்கு பிரதான மதகு, அவசரகால மதகு மற்றும் குழாய் அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் இருந்தது,. 30–6–1985 அன்று இயந்திரத்தை இயக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. பிரதான மதகை பொருத்துவதில் சிரமம் ஏற்பட்டதால், அவசரகால மதகு இறக்கப்பட்டது. மின் உற்பத்திக்காக நீர் எடுத்துச் செல்லும் குழாயில் தண்ணீர் புகாதவண்ணம் தேவையான உயரத்தில் தடுப்பு (Bulk head) அமைக்கப்பட்டது. அவசரகால மதகில் ஏற்பட்ட நீர் ஒழுக்கின் காரணமாக தண்ணீர் செல்லும் குழாயில் நீர் புகுந்து அதில் இறுக்கம் ஏற்பட்டதில் தடுப்பு (Bulk head) உடைந்து மின் உற்பத்தி நிலையத்திற்குள் அறைகுறையாக முடிந்திருந்த அடைப்புத் தகட்டின் வழியே நீர் புகுந்தது. இது 25–6–1985 இரவு 7.30 மணிக்கு நிகழ்ந்தது. அங்கிருந்த கருவிகள் அனைத்தும் மூழ்கின. 10 மீட்டர் உயரத்தை எதிர் நோக்கி அமைக்கப்பட்ட தடுப்பு, 22 மீட்டர் உயரத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலையில், நிலைகுலைந்தது. மின் வாரிய உறுப்பினர் (உற்பத்தி) 26-6-85 அன்று சேர்வலார் சென்று இது குறித்து விசாரணை செய்தார். மேலும் இது குறித்து எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டார். அவசரகால மதகில் ஏற்பட்ட கசிவு அடைக்கப்பட்டுவிட்டது.

மின் உற்பத்தி நிலையத்திலிருந்து தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதன்மூலம் இயந்திரங்களுக்கு பெருஞ்சேதம் ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் எல்லா இயந்திரங்களையும் காயவைத்து சுத்தப்படுத்தி சோதனை செய்து மீண்டும் பொருத்த வேண்டும். தேவைப்பட்டால் சில கருவி





கள் மாற்ற வேண்டியது இருக்கும். இந்த சீர்திருத்தப்பணி முடிவடைய 16 அல்லது 20 வாரங்கள் ஆகும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது. இதற்கு சுமார் 15 இலட்சம் செலவு ஆகும். கட்டு மானத்திற்கான காப்பீடு பெறப்பட்டுள்ளது. இக்காப்பீட்டு தொகையினை பெற காப்பீட்டு நிறுவனத்திடம் தக்க தருணத்தில் முறையீடு செய்யப்படும்.

தற்போதுள்ள பாபநாசம் மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்திக்காக சேர்வலாறு, அணையில் உள்ள தண்ணீரை முறையாக பயன்படுத்தப்படும். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது செயற்பொறியாளர் ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சேர்வலாறு மின் உற்பத்தி நிலையத்தில் 30–6–1985-ம் தேதியில் இயந்திரத்தை சோதனை இயக்கம் செய்யவிருந்ததாகத்தெரிய வருகிறது. 15–7–1985-ம் தேதி மின் உற்பத்தி திறப்பு விழா நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. இதற்கிடையில் நிர்மாணப் பணிகள் சரியாக கவனிக்கப்படாததாலும், அனைத்து வேலைகளும் கான்ட்ராக்ட்களுக்கு விடப்பட்டதாலும், புதியதாக நிறுவப்பட்ட பவர் ஹவுஸ் முழுவதும் தண்ணீரில் முழ்கி, உற்பத்தி துவங்குவதற்கு மேலும் ஒரு ஆண்டு காலமாகலாம் என்றும் தகவல்கள் வரப் பெற்றுள்ளன. இவைகள் சரிதானா? புதியதாக கட்டப்பட்டுள்ள பவர் ஹவுஸ்க்கு தண்ணீர் வரும் வைப்பில் உடைப்பு ஏற்பட்டு, அந்த உடைப்பின் காரணமாக பவர் ஹவுஸ் தண்ணீரில் முழ்கி, அங்கேயிருக்கிற டர்பைன்கள், கம்ப்ரசர்கள், ஜெனரேட்டர் போன்ற கருவிகள் பாதிக்கப்பட்டதாக கூறப் பட்டிருக்கிறது. பல கோடி ரூபாய் இதன் மூலம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அறிக்கையில் இந்தப் பணிகளை மேற் கொள்ள ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு மேலும் இந்த உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்தப் பின்னணியிலே, தமிழக அரசு பவர் ஹவுஸ் சேதம் அடைந்தது பற்றியும், அணையில் கசிவு உள்ளதா என்பதை பற்றியும் விரிவாக, பொறியாளர்களைக் கொண்டு, விசாரணை செய்ய வேண்டும். அதேபோல் பவர் ஹவுசிலே ஏற்பட்டு இருக்கக்கூடிய சேதம் குறித்தும், அந்தச் சேதம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் மீதும், பவர் ஹவுஸ் நிர் மாணப் பணியிலே ஈடுபட்ட கான்ட்ராக்டர்கள் சரியான முறை யில் செய்யவில்லை என்ற காரணத்தால், இந்த பைப்பிலே லீக்கேஜ் ஏற்பட்டது என்ற காரணத்தாலும், இது சம்பந்த மாக நல்ல விசாரணை செய்து, குற்றவாளிகளை தண்டிப்ப பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1985 ஜூலை 9

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, 30ஆம் தேதி இந்த நீர் மின் திட்டம் சோதனை ஓட்டமாக துவக்கப்படுவதாக இருந்தது. 25ஆம் தேதியே தண்ணீர் அதிலேயிருந்த தடுப்புகளை பிளாக் ஹெட்களை உடைத்துக்கொண்டு, உள்ளே புகுந்துவிட்டது. அதன் விளைவாகத்தான் இந்தச் சேதம். இதற்கு என்ன காரணம், எதனாலே இந்தச் சேதம் ஏற்பட்டது என்பதை மின் வாரியம் விசாரித்து வருகிறது. அந்த விசாரணை நமக்கு திருப்தி இல்லை என்றால், வேறு பொறியாளர்களை வைத்து, அதைப்பற்றி முழுவதுமாக விசாரிப்பதற்கு நாம் ஏற்பாடு செய்யலாம்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சேர்வலாறு அணை மின் தொடக்கம் 30–6–1985 அன்று இயக்குவதாக இருக்கிறார்கள். ஆனால் 25ஆம் தேதி உடைப்பு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் வேலை முழுவதுமாக நடந்ததாகத் தெரியவில்லை. தொடர்ந்து வே[illegible] செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நான்கு [illegible] இடைவெளிக்குள்ளே வேலைகள் முடிக்கப்பெறாமல் [illegible]தொடர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பது துறையைப பொறுத்தவரையில் நலமாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா? அத்தோடு மட்டுமல்லாமல், மணலிலே இருப்பதே உடைந்தால் கவலைப்படாத நமது அரசு, தகடுகள் உடைக்கப்பட்டு, குழாய்களில் கசிவு ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால், இது வந்து சீராகுமா? இப்படி எல்லாம் இருப்பதற்குக் காரணம் அந்த ஒப்பந்தக்காரர்கள் தவறா அல்லது அரசுப் பொறியாளர்கள் தவறா? இது யாருடைய தவறு. காப்பீட்டுக் கழகம் நமக்கு கவசமாக இருக்கிறது என்ற எண்ணத்தோடு இல்லாமல், இந்த இழப்பைக் காப்பீட்டுக் கழகம் தந்தாலும், இந்த இழப்புக்கு உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** 10 மீட்டர் உயரம் தான் எதிர்ப்பார்க்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் 22 மீட்டர் உயரம் தண்ணீர் வந்தது என்று சொல்கிறார்கள். அப்படியானால் ஆய்விலே ஏதாவது குறையிருக்கிறதா? எதிர்பார்க்காமல் இருந்தபோது அந்த 22 மீட்டர் அளவிற்கு தண்ணீர் ஏறி விட்டதா? இப்படி ஏற்படுகின்ற நேரத்தில் அங்கேயிருந்தவர்கள் எல்லாம் என்ன செய்து கொண்டு இருந்தார்கள். நல்ல காலம் இது இரவிலே ஏற்பட்டு இருக்கிறது. எனவே இதைக் குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30-ம் தேதி ஒருசோதனை ஓட்டமாக இயக்குவது என்பதுதான் தீர்மானம். அதற்கு 5 நாட்களுக்கு முன்னால் இந்த உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதனால் இந்த வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன என்று பொருள் அல்ல. வேலைகள் எல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருந்தன. ஆனாலும் அதிலே 10 மீட்டருக்கு மேலாக தண்ணீர் வந்ததால் உடைத்துக்கொண்டு போய் இருக்கிறது என்பதையும், உடைப்புக்கு என்ன காரணம் என்பதைப் பற்றியும், நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகு, யார் அந்தப் பொறியாளர்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது. அதைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். மின் வாரியமே இதைப் பரிசீலித்து, குற்றம் குறைகள் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நமக்கு திருப்தி இல்லை என்றால், வேறு பொறியாளர்களை வைத்து, இதைப்பற்றி தீர விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 மீட்டர் தண்ணீர் உயரத்தை எதிர்பார்த்து 22 மீட்டர் எதிர்பாராமல் வந்து விட்டது என்று சொல்கிறார்கள். அப்படியானால் மழை அதிகமாக பெய்து அதன் காரணமாக ஏற்பட்டதா? இந்த நிலைமைகளை அங்கே இருக்கக் கூடிய மின்சார அலுவலர்கள் கவனிக்காத காரணத்தால், வேறு பொறியாளர்களை வைத்து, இதைப்பற்றி ஆராய அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் அதிகமாக என்பதால் அல்ல, தண்ணீர் வரக் கூடாது என்பதற்காக அங்கே தடுப்பான் ''பல்க் எட்'' போட்டார்கள். அந்த பல்க் எட் சரியாக இல்லாததால் தண்ணீர் வந்து இருக்கிறது. என்றைக்கும் தண்ணீர் எவ்வளவு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அதைவிட குறைந்த அளவு தான் இருந்து இருக்கிறது. அந்த தடுப்பான் சரியாக போடாததன் காரணமாக இந்த சேதம் ஏற்பட்டு இருக்கிறது. அதனால் அது பற்றி தீர விசாரித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் உடைப்பட்டதன் காரணமாக அங்குள்ள பவர் அவுசில் தண்ணீர் நுழைந்து விட்டது என்று சொல்லப்பட்டது. தடுப்புச் சுவர் போடப்பட்டது தகட்டால் போடப்பட்டதா ? அல்லது இரும்பால் போடப்பட்டதா? தண்ணீர் வந்த உடன் உடைப்பு ஏற்படுகின்ற அளவுக்கு தடுப்புச் சுவர் கட்டி இருந்தால் கட்டியவர் குறையா ? அதைப் பார்த்த அதிகாரியின் குறையா ? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 9

மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் விசாரணையில் தெரிய வரும்.

### (ஆ) பட்டுகோட்டை நவீன அரிசி ஆலை கழிவுநீரால் ஏற்படும் பாதிப்பு.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர், அருகிலுள்ள பொன்னவராயன்கோட்டை, பாப்பான் குளம் மற்றும் இரண்டு குளங்களில் கலப்பதால், அந்நீர் மக்கள் குளிக்க, குடிக்க மற்றும் கால்நடைகள் உபயோகத்திற்கும் தகுதியற்றதாக மாறி வரும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மேற்கண்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள நவீன அரிசி ஆலையானது தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டை வட்டம் பொன்னவராயன் கோட்டைக் கிராமத்தில் அமைந்துள்ளது. இது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமானது. இவ்வாலை, நாளொன்றுக்கு 60 டன் புழுங்கலரிசியை உற்பத்தி செய்கின்றது. நெல், இரும்பு தொட்டியில் 60° (டிகிரி) சென்டிகிரேட் வெப்ப அளவில் 10 மணி நேரம் ஊரவைக்கப்படுகின்றது. இவ்வாறு ஊறவைத்த பின்னர், கழிவுநீர் வெளியேற்றப்பட்டு, நெல் நீராவியின் மூலம் அவிக்கப்படுகின்றது. அவிக்கப்பட்ட நெல், வெப்பக்காற்று மூலம் உலர வைக்கும் இயந்திரத்தில் 5 மணி நேரம் உலர வைக்கப்படுகின்றது. உலர்த்தப்பட்ட நெல் அரவை இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு அரிசி தயாரிக்கப்படுகின்றது. ஊறல் தொட்டியிலிருந்து வெளிவிடப்படும் நீர், ஆலையினின்று வெளி வரும் கழிவு நீராகும். இவ்வாலை நாளொன்றுக்கு 40,000 லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீரும் 1,000 லிட்டர் கழிவு கழிவு நீரும் வெளியேற்றுகின்றது. மேற்படி ஆலை, 27-6-85 அன்று பார்வையிடப்பட்டது. தற்போது, சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவு நீரானது 1/2 கி. மீட்டர் தூரம் வரை முத்துப்பேட்டை—பட்டுக்கோட்டைச் சாலையின் அருகே அமைந்துள்ள கால்வாயில் வெளிவிடப்படுகின்றது. பின்னர் அக் கழிவு நீரானது, தேவன்குளம் அருகில் உள்ள நிலத்தை அடைகின்றது. அப் பகுதியில் மன்னாங்குளம், தாரார் உடையார் குளம் என்று இன்னும் சில குளங்கள் அமைந்துள்ளன.



1985 ஜூலை 9]

தொழிற்சாலைக் கழிவு நீரானது மஞ்சள் நிறத்தையும், லிட்டர் ஒன்றுக்கு 2,400 மில்லி கிராம் உயிர் ரசாயன உயிரகத் தேவை அளவையும், லிட்டருக்கு 380 மி. கிராம் மிதக்கும் திடப் பொருட்கள் அளவையும், கரையாத திடப் பொருட்கள் லிட்டருக்கு 3,940 மில்லி கிராம் அளவையும் கொண்டது. சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவு நீரானது நீர் நிலைகளிலும், நிலத்திலும் வெளிவிடப்படும் போது, நெடி ஏற்படுவதோடு, நிலத்தடி நீரும் நீர் நிலையும் மாசுறக் காரண மாகலாம். உள்ளூர்ப் பொதுமக்களிடம் விசாரித்ததில் பொது வாகக் குளங்கள் தண்ணீரின்றி வறண்டிருப்பதாகவும் மழைக் காலங்களில் மட்டும் கழிவுநீர் மழை நீருடன் சேர்ந்து குளங்களை அடையும் வாய்ப்பிருப்பதாகவும் தெரிய வந்தது. இவ்வாலை 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி கழிவுநீரை வெளியேற்றுவதற் கான அனுமதி விண்ணப்பத்தை மாசுக் கட்டுப்பாடு வாரியத் திடமிருந்து பெற்றிருக்கின்றது. கழிவு நீரை வெளியேற்றுவதற் காக அனுமதி கோரும் விண்ணப்ப படிவத்துடன் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துருவையும் மேற் படி வாரியத்திற்கு அனுப்பி வைக்கும்படி இவ்வாலை அறிவுறுத்தப் பட்டிருக்கின்றது. மேற்படி ஆலைக்கு அனுமதி .வழங்கும் போது, வாரியம் தாம் நிர்ணயித்துள்ள வரன்முறைக்கு ஏற்ப கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்ற, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கால கெடுவையும் வலியுறுத்தும். இவ்வாரியம் இப்பொருள் குறித்து கண்காணித்து வருகின்றது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கின்ற அறிக்கையில் தொழிற்சாலையிலிருந்து 40 ஆயிரம் லிட்டர் கழிவு நீரும், மற்றும் ஆயிரம் லிட்டர் வேறு கழிவு நீரும் ஆலையிலிருந்து அன்றாடம் வெளியேற்றப்படுகிறது என்ற தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள். அதன் அடிப்படை யில் ½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கால்வாயில் சேர்வதாக வும், இதனால் குளத்தின் நீர் பாதிக்கப்படவில்லை என்று குறிப் பிட்டு இருக்கிறார்கள். உண்மை நிலை அங்கேயிருக்கின்ற ஆணைக்காடு, பொன்னவராயன்கோட்டை, உக்கடை ஆகிய கிராமங்களில் உள்ள கிழவன்குளம், செட்டிகுளம், மண்ணாங் குளம், ஐயனார் குளம், தாயார் ஓடை குளம் ஆகிய குளங் களில் அந்த கழிவு நீர் சென்று கலக்கிறது. அதிகாரிகள் இங்கு கொடுத்து இருக்கின்ற அறிக்கையில் அது தடுக்கப்பட்டு இருக் கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே அப்படி தடுக்கப் படவில்லை. அருகில் இருக்கின்ற ஒரு 500 கெஜ தூரத்தில் இருக்கின்ற பொதுப்பணித்துறை கால்வாயில் இந்த கழிவு நீரை திருப்பி விட அரசு .முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன் ? அங்கே இந்த கழிவு நீர் செல்வதால் அந்த குளம் வறட்சியான காலத்தில் தண்ணீர் இல்லாத காலத்தில் இதுபோல் சேருவதால் அந்த தண்ணீர் குடிக்க, குளிக்க தகுதி அற்றதாகி விடுகிறது.

மேலும் மீன்கள் இறந்துவிடுகின்றன கால்நடைகள் அதிகமாக சிரமப்படுகின்றன. இதை எல்லாம் கருத்தில் கொண்டு விரைவில் ஒரு நல்ல நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சுத்தி கரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவு நீரானது அங்கு இருக்கக் கூடிய முத்துப்பேட்டை—பட்டுக்கோட்டைச் சாலையின் அருகே அமைந்துள்ள கால்வாயில் வெளியிடப்படுகின்றது. இந்தத் தகவலை இலாகா நமக்கு கொடுத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சில புதிய தகவல்களைக் கொடுக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்து இருக்கக் கூடிய அந்த தகவலையும் நாம் நிச்சயமாக பரிசீலித்து தக்க நடவடிக்கையை எடுத்துக்கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலைக்கு 1974 ஆம் ஆண்டு மாசு தடுப்புச் சட்டத்தின் கீழ் 26-வது பிரிவின் கீழ் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அனுமதி வழங்கும் போது இந்தக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான அனுமதியும் சேர்ந்து வழங்கப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆகவே, எதிர் வரும் காலங்களில் விரைவாக அந்த இயந்திரத்தை அங்கே பயன்படுத்துவதோ அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுத்தால் அங்கு இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வழி பிறக்கும் என்பதை கருத்தில் கொண்டு விரை வில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 26 ஆம் ஷரத்தின் கீழே நாம் சில நிபந்தனைகளுடன் அனுமதி கொடுத்து இருக்கிறோம். அந்த நிபந்தனைகளை ஏற்று, சுத்திகரித்ததற்குப் பிறகு தான் அந்தக் கழிவு நீரை அவர்கள் விடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்யவில்லை எனில், அனுமதி ரத்து செய்யப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லி இருக்கக்கூடிய அந்தக் கருத்தின் அடிப்படையில் அந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்படாமல், திட்டவட்டமான நடவடிக்கை கள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைந் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் தமிழ்நரடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சர்வாதிகாரத்திற்கு வழி வகுத்து, ஜனநாயகத்தினுடைய கதவுகளை மூடுகின்ற சட்டம் என்ற காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதைக் கடுமையாக எதிர்க்கிறேன். Sir I oppose the introduction of this Bill on two grounds, namely, res judicate and ultra vires of the Constitution.

இந்தச் சட்டத்தினுடைய திருத்தம் என்னவென்று கேட்டால், யாராவது உடமைக்கு அல்லது உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டால் அல்லது வன்முறையில் ஈடுபடு வார்கள் என்ற நிலை இருந்தால், கமிஷனர் உத்தரவு போட்டு சென்னை நகரை விட்டு அவர்களைக் கடத்தி விடலாம். ஊர் கடத்திவிடலாம். 2 வருட காலத்திற்குக் கூட உள்ளே நுழையக் கூடாது என்ற உத்தரவு போடுகின்ற ஒரு பயங்கரமான சட்டத் திருத்தமாகும்.

கோர்ட்டுக்குப் போகமுடியாது. அரசாங்கத்திடம்தான் அதற்காக முறையிட முடியும். அடுத்து, வக்கீல் வைத்து வாதாட முடியாது என்ற அபாயகரமானது இந்தச் சட்டம். காவல்துறையின் இச்சட்டம் ஏற்கனவே, வெள்ளைக்காரன் கொண்டு வந்திருக்கக்கூடிய—இந்தச் சட்டம்—இந்தச் சட்டம் தூக்கி எறியப்படவேண்டும். காரணம், வன்முறையிலே யாரா வது ஈடுபடுவார்கள் என்ற நிலைமை இருக்குமேயானால், அல்லது ஒருவருடைய உயிருக்கோ, உடமைக்கோ ஆபத்து ஏற்படும் என்று சொன்னால், ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையிலேயே அவர்களைக் கைது செய்யலாம்; வழக்குப்போடலாம் ப்ரிவெண்டிங் அரெஸ்ட்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள்
கான்ஸ்டிடியுஷன்லே எப்படி அல்ட்ரா வயர்ஸ் என்பதை மட்டும்
சொல்லுங்கள். நீங்கள் மெட்ரிட்டுக்குள்ளே போகிறீர்கள்.
பில் இந்த செஷனிலேயே வருகிறது. பில்லிலே வரும்போது
பேசலாம். அப்போஸ் பண்ணும்போது, எப்படி அல்ட்ரா
வயர்ஸ், எப்படி ரெஸ்-ஜூடிகேட்டா என்று மட்டும் சொல்
லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, டெக்னிகல் கிரௌண்ட்ஸ்-ஐ எப்படி
சொல்கின்றேன். என்ற முறையில் தான் வேறுபாடே தவிர,
நீங்கள் சொல்வது போல், ஒரே வரியில் முடித்து விடுவது அல்ல.
எப்படி என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

ஏற்கனவே யாராவது தவறு செய்தால், குற்றம் இழைத்
தால் இந்தியன் பீனல் கோடின்படி செக்ஷன்கள் இருக்கின்றன.
அவற்றின்படி அவரைக் கைது செய்து வழக்குப்போட்டு நீதி
மன்றத்திற்குக் கொண்டு போய் தண்டிக்கலாம். இரண்டாவது,
யாராவது குற்றங்கள் செய்வது போன்ற ஒரு நிலைமை ஏற்படு
மேயானால், 'பிரிவென்டிங் அரெஸ்ட்' அவர்களைமுன்கூட்டியே
கைது செய்து வைத்திருக்கலாம். இப்படி ஏற்கனவே, 'எக்ஸிஸ்
டிங் ஆக்ட்' இருக்கும்போது கமிஷனர் திருப்திப்பட்டால்
யார் வேண்டுமானாலும், வன்முறையில் ஈடுபடக்கூடும் அல்லது
உயிருக்கு, உடமைக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று கருதி,
ஒருவரை ஊரை விட்டே வெளியேற்றிவிடவேண்டும், இரண்டு
வருடத்திற்கு உள்ளே நுழையக்கூடாது என்று ஊர் கடத்து
கின்ற சட்டத்தைக் கொண்டு வருவது சட்டவிரோதமானது;
இன்னும் சொல்லப்போனால், ஜனநாயக விரோதமானது.

இன்னொன்றை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.
இதிலே குற்றவாளிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் தராத சூழ்நிலை
இருக்கிறது. காரணம், வக்கீல் வைத்து வாதாட முடியாது, ஜாமீ
னிலே வர முடியாது; நீதிமன்றத்திற்குப் போகமுடியாது;
அரசாங்கத்திற்குத்தான் மனுச் செய்ய வேண்டும்; ஆகவே,
இது அரசியல் உள்நோக்கத்தோடு பயன்படுத்தக்கூடிய அபா
யம்; யாரை வேண்டுமானாலும் வெளியேற்றி பழி வாங்குகின்ற
அபாயம் இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்
தம் எதற்கென்று கேட்டால்—கஸ்டம்ஸ் ஆக்ட், 1962-வது
ஆண்டு சுங்க வரிச் சட்டத்தினுடைய 135-வது பிரிவின்படி, வரி
ஏய்ப்பு செய்தால் அல்லது இல்லீகல்-ஆக, சட்டவிரோதமாக
அந்நிய பொருட்களை வைத்து இருந்தால், அவர்களுக்குத்தண்
டனை தருவதற்கு, இந்தச் சட்டத்திலே இடம் இருக்கிறது.
கஸ்டம்ஸ் ஆக்ட்டிலே இடம் இருக்கிறது. வரி ஏய்ப்பு செய்
தால், மேக்சிமம் பனிஷ்மெண்ட் 5 வருஷம். கஸ்டம்ஸ் ஆக்ட்,
சென்டிரல் ஆக்ட் மத்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய
சட்டம்.





ஆனால் இப்போது கொண்டு வருகிற சட்டத் திருத்தம்
என்னவென்று கேட்டால்—மத்திய சர்க்கார் கொண்டு வந்து
இருக்கக்கூடிய சட்டத்தில், வரி ஏய்ப்புச் செய்தால், 'இல்லீகல்
பொசஷன் ஆப் கான்ட்ராபாண்ட்' இருந்தால் ஏற்கனவே தண்
டிக்கக்கூடிய அந்த உரிமை இந்தச் சட்டத்திற்கு இருந்தாலும்
கூட, நீங்கள் ஒரு சட்டம் கொண்டு வருவதன் மூலம் என்ன
செய்கிறீர்கள் என்றால், அவர்கள் அப்படிப்பட்ட சட்டத்தில்
தண்டிக்கப்பட்டிருந்தால், அவர்களையும் நீங்கள் ஊர் கடத்தி
விடலாம். ஏற்கனவே கஸ்டம்ஸ் சட்டம் இருக்கிறது. அதன்
மூலம் ஒருவர் தண்டிக்கப்படுகிறார் என்றால், மீண்டும் அவரை
ஊரை விட்டு கடத்துகிறேன் என்று சொன்னால், ஒரே குற்றத்
திற்கு இரண்டு தண்டனை வழங்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகப்
பேசுங்கள். அல்ட்ரா வயர்ஸ் என்று சொல்கிறீர்கள். ஆனால்
அது எப்படி என்று சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். சீக்
கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, ஒரே
குற்றத்திற்கு இரண்டு தண்டனைகள் வழங்கப்பட முடியாது.
ஏற்கனவே ஒரு நீதிமன்றம் தண்டனையை வழங்கியதற்குப்
பிறகு, அவர் கஸ்டம்ஸ் சட்டப்படி குற்றம் செய்திருக்கிறார்
என்று சொல்லி, தமிழக சர்க்கார் சட்டம் கொண்டு வந்து
ஊரைக் கடத்துகின்ற சட்டத்தை நிறைவேற்றுவது என்பது,
res judicata ஒரு குற்றத்திற்கு இரண்டு தண்
டனை தர முடியாது. எனவே, இது சட்ட விரோதமான
சட்டம். இதைக் கொண்டு வருவதற்குச் சட்ட அதிகாரம்
கிடையாது. it is ultra vires of the Constitution.
அடிப்படை ஜீவாதார உரிமைகள் இங்கே மறுக்கப்படுகிறது.
தெளிவாக இந்தியாவின் அரசியல் சட்டத்திலே சொல்லப்
பட்டிருக்கிறது. Citizens shall have the right to reside and
settle in any part of the territory of India and also to move
freely throughout any part of India.

எல்லாக் குடி மக்களுக்கும், இந்த நாட்டின் பிரஜைகளுக்கு
இந்தியாவின் எந்தப் பகுதிக்கு வேண்டுமென்றாலும் சுதந்திர
மாகப் போய்வருவதற்கான உரிமை இருக்கிறது. அடுத்து,
இந்தியாவில் எந்தப் பகுதியிலேயும் வாழலாம்.
They can reside or settle என்ற பண்டமென்டல் ரைட்,
அந்த ஜீவாதார உரிமை அரசியல் சட்டத்தில் மிகத் தெளி
வாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் ஊர் கடத்துகின்ற சட்
டத்தின் மூலம், அவர் குற்றம் இழைத்து விட்டார் என்று
சொல்லி, அவர் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம் என்ற
ஜீவாதார உரிமையை சர்வாதிகாரமாக இந்தச் சட்டம் பறிக்

கிறது. இது அரசியல் சட்டம் அங்கீகாரம் கொடுத்திருக்கின்ற அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகும். ஆகவே, இது அல்ட்ரா வயர்ஸ் என்று சொல்வதோடு, இது அரசியல் உள்நோக்கத்தோடு, யாரையும் பழி வாங்கலாம் என்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சட்ட அடிப்படையிலே என்னென்ன சொல்லியிருக்கிறார்களோ அவைகள் நியாயமானவை என்பது என்னுடைய கருத்து. முதலாவதாக, நமது அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறக்கூடிய ஒரு சட்டம் இது என்று சொல்வதற்கு ஒருமுக்கியமான காரணம், இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதன்மீது எந்தவிதமான உயர் மட்ட அப்பீல் ---தாவா செய்ய வழியில்லை. அப்படிப்பட்ட நடவடிக்கை, உண்மையிலேயே ஒரு பிரஜையின், ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும், இந்தச் சட்டம் அதற்கு எதிரானது, இது எந்தவிதத்திலும் அரசியல் சட்டத்திற்கு உள்பட்டதாக இல்லை. அது அல்ட்ரா வயர்ஸ் என்று சொல்லக்கூடிய அப்படிப்பட்ட நிலையில் உள்ளது என்பது ஒன்று. இரண்டாவதாக, முக்கியமான விஷயம் என்னவென்றால், சென்னை மாநகரில் ஒரு நபரின் நடவடிக்கை, செயல் அல்லது ஒருவர் உயிருக்கு அல்லது உடைமைக்குப் பீதி, அபாயம்அல்லது தொல்லை விளைவிப்பதாக இருந்தால் அல்லது பலாத்காரம் அல்லது வன்முறையில் ஈடுபட்டுக் குற்றமொன்றைச் செய்கிறார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருந்தால்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லவேண்டும். The hon. Member should speak briefly how it is ultra vires of the Constitution and he should not go tnto merits of the Bill, at the introduction stage. சுருக்கமாக சொல்லி முடிக்கவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: பாலிசியை அட்டாக் பண்ணி பேசக் கூடாது என்று இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டிஸ்கஷனுக்கு வரும்பொழுது பேசுங்கள்.

THIRU A. RAHMANKHAN: Is there any provision that we should not oppose the policy of the Government Please tell me.





MR. DEPUTY SPEAKER: The hon. Member should not go into the merit of the bill at the introduction stage. அது முடியாது என்று ரூலிங் இருக்கிறது.

THIRU A. RAHMANKHAN: We can oppose the policy of the Government at the introduction stage.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் ஏற்கனவே பேசி முடித்தாகிவிட்டது. எனவே, அவர்கள் உட்காரவேண்டும். ரூலிங்கை எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றலாம்; ஏற்கனவே இல்லை என்றால்கூட இப்பொழுது மாற்றலாம்; இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே டீட்டெயிலாகப் பேசக்கூடாது என்பது நடைமுறையில் இருக்கிறது.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தண்டனை வழங்கக்கூடிய ஒரு சட்டம் அரசாங்கத்தால் கொண்டு வரப்படுகின்றபொழுது, அந்தத் தண்டனையை வழங்குபவர், அப்படி வழங்குவதற்கான நியாயமான உரிமை அற்ற நிலையில் இருக்கிறார் என்கிறபொழுது, அடிப்படை ஜீவாதார உரிமை பறிக்கப்படுவதால் சில விஷயங்களை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்.

(முற்பகல் 10-50)

எனவே இந்த மசோதாவினுடைய விளைவுகளை மனதிலே கொண்டு துணைத் தலைவர் அவர்கள் பேசுகிற உறுப்பினர்களுடைய எண்ணங்களை முழுவதும் வெளியிட அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மெரிட்டுக்குள் போகவேண்டாம், டிஸ்கஷன் வேண்டாம்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, மெரிட் டிஸ்கஷனுக்குள் இப்போழுது போகவில்லை. சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வரும்போது நாங்கள் பேசத்தான் போகிறோம். வேறு வழியில்லை. ஆனால், காரண காரிய நோக்கங்களிலே, குறிப்பிடப்பட்டிருப்பதிலே ஒரு மனுதனுடைய உரிமைகளை எப்படி ரெஸ்டிரிக்ட் செய்வது என்ற அம்சமும், இட் இஸ் எ காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் என்ற வகையிலே வருகிறது. இதற்குள்ளே வராதது என்பது எதுவுமே கிடையாது. சுங்கச் சட்டம் உள்பட அதற்குள்ளே கொண்டு வரப்பெற்றுள்ளது. இப்படி சொல்லி, ஒரு எக்ஸ்டிரார்டினரி பவர், கமிஷனர் கையில் எந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிறது என்றால், நாடு கடத்தும்ப

[திரு. கு. ரமணி] [1985 ஜூலை 9

யான ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. பிரிட்டிஷ்காரன் காலத்திலே தியாகிகளை இந்தியாவிலிருந்து அந்தமான் தீவுக்குக் கொண்டு செல்கின்ற ஏற்பாடு இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை. அப்படிச் சுதந்திர இந்தியாவில் நிலைமை வந்த பிறகு, சென்னை நகரத்திலிருந்தே ஒட்டியுள்ள பிரதேசங்களிலிருந்தே நாடு கடத்துவது என்று, மாவட்டம் கடத்துவது என்று, ஊர் கடத்துவது என்று சொன்னாலும், அது நாடு கடத்துவது என்ற சென்சில் வருகிறது. அப்படிப்பட்ட அதிகாரம், உண்மையிலேயே எந்த நீதிமன்றத்திலும், எந்த டெஸ்ட்டுக்கும் நிற்காது என்ற அந்த அளவுக்குச் சட்ட விரோதமான நிலைமை இருக்கிறது என்பது என்னுடைய கருத்து, ஆகவே, பிரிட்டிஷ்காரன் 1888-லே கொண்டு வந்த சட்டத்திற்கு இன்றைக்கு நீங்கள் அமெண்ட்மெண்ட் கொண்டு வந்து அடாப்ட் செய்ய வேண்டிய அவசியம் என்ன? மற்றப்படி அனைத்திற்கும் ஐ.பி.சி., சி.பி.சி. போன்ற சட்டங்கள் இருக்கின்றன. குண்டா ஆக்ட் உள்பட சட்டங்கள் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது என்பது ஒரு சர்வாதிகார போக்கிற்குத் தான் கொண்டு போகும். ஜனநாயகத்தையே டார்பிடோ பண்ணும், ஆகவே, அந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது, நமது அமைச்சர் அவர்கள் இன்ட்ரடியூஸ் பண்ணக் கூடாது என்று ஆரம்ப நிலையிலேயே நான் அதை எதிர்க்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்த மசோதாவை நாங்கள் கடுமையாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் வெள்ளைக்காரன்காலத்தில்,இந்தநாட்டு சுதந்திரத்திற்காகப் போராடக்கூடிய தியாகிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு, கடுமையான தண்டனை கொடுப்பதற்கு, இப்பேர்ப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலேயிருந்து சுதந்திரம் பெற்றுள்ள இந்தியாவில் ஒரு மனிதன் எங்கு வேண்டுமானாலும் போய் வாழலாம் என்று இந்திய அரசியல் சட்டத்திலேயே குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய சட்டங்களிலேயே இதிலே குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தவறுகளைச் செய்யக் கூடியவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான இடம் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இன்றைக்குக் காவல் துறை தகுதி இழந்து, இன்றைக்கு சென்னை மாநகரத்தில் ஒருவர் இப்பேர்ப்பட்ட தவறு செய்தால், சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, காவல் துறை கமிஷனருக்கு இந்த அதிகாரத்தை வழங்குவது என்பது உண்மையிலேயே ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக ஆக்கிவிடும். இது இந்திய ஜனநாயகக் குடியிருப்புச் சட்டத்திற்கே வேட்டு வைக்கக் கூடிய அளவுக்கு ஒரு உள்நோக்கம் கற்பிக்கக்கூடிய அளவுக்கு இந்தத் திருத்தச்சட்டம் கொண்டு வருவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான கண்டனம் தெரிவிப்பதோடு, சட்ட அமைச்சர் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.



1985 ஜூலை 9]

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை ஆரம்பக் கட்டத்திலேயே ஜனதா கட்சி எதிர்க்கிறது. குற்றம் செய்வதற்கு நம்புவதற்குரிய காரணம் இருந்தாலே போதும் என்று சொல்வது சரியல்ல. காவல் துறை நம்புவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். இந்தச் சட்டத்தை நிறை வேற்றுவது மனிதனுடைய ஜீவாதார உரிமைகளைப் பறிக்கிறது என்கிற காரணத்தாலே, நான் இந்தச் சட்டத்தை முன்கூட்டியே எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசாங்கம் கொண்டு வருகிற இந்தச் சட்டம் சென்னை, மாநகரினுடைய காவல் துறைத் தலைவருடைய கையில் வழக்கமாகத் தரப்படுகிற ஆயுதத்தைத் தவிர, பழங்காலத்து காட்டுமிராண்டி கையிலே தரப்படுகிற ஆயுதத்தையும் வழங்குவது மிகக் கொடுமையான ஒரு நிலைமையை ஏற்படுத்தும். எந்த ஒரு சட்டமும் நீதிமன்றத்தின் மூலம் விசாரித்து, குற்றவாளி என்று விசாரணையின்போது முடிவு சொல்வதாக இருந்தால் அது நியாயம். எப்படிப்பட்ட உத்தமராக இருந்தாலும், காந்தியடிகளாக இருந்தாலும்கூட தீர்ப்பு அளிக்கிற உரிமை குற்றஞ்சாட்டுகிற ஒருவருக்கு இருந்து, ஓராண்டு, இரண்டாண்டு அவர் வாழுகிற பகுதியைவிட்டு வேறு பகுதிகளுக்கு வெளியேற்றுகிற உரிமை ஒரு ஜனநாயக நாட்டில் யாருக்கும் இருக்க முடியாது. வெள்ளைக்காரன் கொண்டுவந்த சட்டத்தை இன்னும் வலியுறுத்தி, மேலும் கடுமையாக ஆக்குவதாக இது இருக்கிறது. இந்தச் சட்டம் இருப்பது அரசியல் சட்டத்தையே அவமதிப்பதாகும். அரசியல் சட்டம் கொடுத்திருக்கிற உரிமையை, நீதிமன்றத் தீர்ப்பைப் பெறுவதற்கு இருக்கிற வாய்ப்பைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒரு கமிஷனர் மூலம் குற்றவாளி என்று முடிவு செய்து வெளியேற்றுவது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. குற்றவாளி என்று முடிவு செய்து நகரத்தை விட்டு வெளியேற்றுவது, அந்த மாவட்டத்தை விட்டு வெளியிலே தங்கியிருக்கச் செய்வது என்பதை, ஜுடிஷியல் அதிகாரி என்ற தகுதியை உடையவருக்கு அல்லாமல் ஒரு நிர்வாக அதிகாரிக்கு, காவல் துறையைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்குவது முறைகேடானது. காவல் துறையின் கையிலே இந்தச் சட்டத்தைக் கொடுத்து, தவறான போக்கிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவர இருப்பதால் இதை வன்மையாக எதிர்க்கிறோம். இந்தச் சட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். எப்படியும் இதைக் கொண்டு வருவோம் என்று அரசு சொன்னால், எப்படியும் எதிர்ப்போம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை உறுப்பினர்கள் பேசும்போது இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்கிற நிலையிலே எதிர்ப்பதற்குக் காரணம் சட்டவிரோதமான காரியம் என்று

[திரு. அ. பொன்னையன்] [1985 ஜூலை 9

திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். ரெஸ்ஜூடிகேஷன்ஸ் என்று சொன்னார்கள். ஒரே குற்றத்திற்கு இரண்டு தண்டனையா என்று கேட்டார்கள். அவர்கள் தெளிவாக இந்தப் பிரிவைப் படித்திருப்பார்கள் என்று கூட கருதுகிறேன்.

"Whenever the Commissioner has reason to believe that any person in the City of Madras who has been convicted of an offence under section 135 of the Customs Act, 1962 (Central Act 52 of 1962) is likely again to engage himself in the commission of the offence for which he was convicted, the Commissioner may, by an order in writing signed by him, require such person to remove himself outside the said city and any district or districts or any part thereof contiguous thereto......"

The question of resjudication does not come here.

கள்ளக்கடத்தலில் ஈடுபடுகிறார் ஒருவர். அந்த ஒரு குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவர் மீண்டும் சில குறிப்பிட்ட தவறுகளைச் செய்து, கண்டுபிடிக்கப்படுகிறபோது, அவர் ஏற்கெனவே, செய்த குற்றங்கள் தெரிய வந்தால் அப்போது அவருக்கு இந்தத் தண்டனை கொடுக்கலாம் என்று சொல்வது ரெஸ்ஜூடிகேஷன் என்று வராது. அடுத்து, கமிஷனராக இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செய்ய முடியாது. ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசனில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

"......there are reasonable grounds for believing that such person is engaged in the commission of any offence involving force or violence to remove outside the city within such time as may be specified in that order......"

எனவே, அவர்களுக்கு ஆப்பர்சூனிட்டீஸ் தரப்பட வேண்டும், ரீசனபிள் அப்பர்சூனிட்டீஸ்க்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது, இதிலே நீதிமன்றத்திற்குச் செல்ல இடமில்லை என்று சொல்ல முடியாது.

......There must be reasonable opportunity. Always there is a Writ Jurisdiction. If there is an error apparent on the face of the record it can be adjudicated

எனவே, அந்த வகையில் சட்ட ரீதியாக தவறு எதுவும் இல்லை என்று தெளிவாக்க விரும்புகிறேன்.



1985 ஜூலை 9] [திரு. பொன்னையன்]

அடுத்து, திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது இன்னொன்றையும் சொன்னார்கள். இது ஜீவாதார உரிமைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்று சொன்னார்கள். இது குறித்து ஏற்கெனவே நீதிமன்றங்களில், உச்ச நீதிமன்றம் வரையில் சென்று, தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஏதோ இது தமிழ் நாட்டில் மட்டும்தான் கொண்டுவரப்பட்டிருப்பது போல மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுக்கு தகவல் கிடைக்காத காரணத்தால், குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். அது தவறு. இந்தச் சட்டம் ஏற்கெனவே டெல்லி போலீஸ் ஆக்ட், 1978, சென்ட்ரல் ஆக்ட் 34/78 நடைமுறையில் இருக்கிறது. அதைப் போன்று பாம்பே போலீஸ் ஆக்ட்,1951-க்கு திருத்தம் கொண்டு வரப்பட்டு, அந்தச் சட்டமும் நடைமுறையில் இருக்கிறது.

(முற்பகல் 11-00)

Hyderabad City Police Act and Mysore Police Act 1963 போன்ற எல்லா சட்டங்களிலும் இந்த ஷரத்து இருக்கின்றது. Exterment இதிலே Provide செய்யப்பட்டு இருக்கின்றது. உச்ச நீதிமன்றம் கூட ஒரு தீர்ப்பு வழங்கி இருக்கின்றது.

It is very clear. The observation in the Supreme court is relevant

அந்தத் தீர்ப்பினைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். ஜீவாதார உரிமையைப் பாதிக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், இதன் நோக்கமே கள்ளக் கடத்தல்காரர்களையும், கடல் பகுதியில் வாழ்பவர்கள் நாட்டு நலனுக்குப் புறம்பாகச் செயல்படுகின்ற போது அதைத் தடுத்து அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டு பிறகு மீண்டும் அவர்கள் வன்முறை போன்றவற்றில், ஈடுபட்டு நாட்டுக்குப் பாதகமாக நடக்கிற போதுதான் இதைப் பயன்படுத்த வேண்டும் என்றும் பல மாநிலங்களில் இது கொண்டுவரப்பட்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பிலே சொல்கிறபோது

There can be no doubt that the provision of Sec. 27 (1) of the Bombay Act...Was made in the interest of the general public and to protect them against the dangerous and bad characters of whose presence in a particular locality may jeopardise the peace and safety of the citizens.

The restrictions that this Law imposes upon the rights of fre movement of the citizen are reasonable and come within the purview of Clause 5 of Article 19 of the Constitution.

என்று தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. உச்சநீதிமன்றம் வரையில் சென்று 1973ஆம் ஆண்டு கூட உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கின்றது. எனவே, இது சட்ட ரீதியாகச் செல்லக்கூடிய ஒன்று என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

'' 1985-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ் நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985

•

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு.ப.பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினை அறிமுக நிலையிலேயே நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன். தனி அதிகாரிக்கு மீண்டும் 6 மாதம் மதுரை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் பதவி நீட்டிப்பு கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு ஜூலை வரையில் இப்போது இருக்கின்ற சட்டத்தின்படி அவர்கள் பதவியில் இருக்கலாம். ஆனால், மதுரையைப்



பொறுத்தமட்டில் சென்னையைப் போன்றோ அல்லது கோவையைப் போன்றோ இருக்கின்ற தனி அதிகாரிகள் இல்லை. அங்கே இருப்பவர்கள் கலெக்டர்தான். அவருக்கு அடிஷனல், பர்டன். ஒருவரே ஜில்லாவையும் பார்க்க வேண்டும்; மாநகராட்சி வேலையையும் பார்க்க வேண்டும். ஆனால், நீங்கள் இந்தப் பதவி நீட்டிப்பதற்கான காரணத்தைச் சொல்வது என்பது வினோதமாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன், முனிசிப்பாலிடிகள் போன்றவற்றிற்குத் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதன் காரணத்தால் அதாவது செப்டம்பரில் அந்தத் தேர்தல்கள் நடக்க இருக்கின்ற காரணத்தால் இந்த மாநகராட்சியினுடைய அதிகாரிகளின் பதவி மேலும் நீட்டிக்கப்படுகின்றது என்ற பொருளில் சொல்கிறார்கள். சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கின்றது, எனவே, நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்கிறோம், ஏனென்றால் சட்டமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது என்றா சொல்கிறோம்? எனவே, இங்கே சொல்லப்படுகின்ற காரணம் சரியானதல்ல. இப்படி அடிக்கடி ஒவ்வொரு காரணத்தைச் சொல்கிறார்கள். இப்போது கூட இங்கே பேசினார்கள் மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் எல்லாம் இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றது, பிரிவு இருக்கின்றது என்று ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிமுக நிலையிலே சட்ட முன்வடிவை எதிர்க்கின்றபோது சுருக்கமாகச் சில காரணங்களை மட்டும் சொல்லி எதிர்த்தால் போதும். விரிவாகப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

•

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கிருப்பது போன்ற ஆக்ட் மற்ற ஸ்டேட்டிலே இருக்கின்றது என்றெல்லாம் சொன்னால், மற்ற ஸ்டேட்டிலே ரீசன்டாக நடத்திருக்கின்றது. வெஸ்ட் பெங்காலில், கல்கத்தாவில் இருக்கக்கூடிய மாநகராட்சி, மகாராஷ்டிராவில் பம்பாயில் இருக்கக்கூடிய மாநகராட்சி போன்ற மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய மாநகராட்சிகளில் நடக்கக்கூடிய நல்ல காரியங்கள் எல்லாம் இங்கே செய்யப்படாமல் மற்ற ஸ்டேட்களில் மக்களுக்குப் பாதமாக செய்யப்படுகின்ற காரியங்களை மட்டும் இங்கே செய்வது என்று சொல்வது என்ன முறை? ஆகவே இதனை 6 மாத காலத்திற்கு என்று நீடிப்பதற்குப் பதிலாக 3 மாத காலத்திற்கு மட்டுமே அக்டோபர் 29 வரையில் மட்டுமே நீட்டித்துக் கொள்ளலாம். ஆனால் ஜனவரி வரையில் நீட்டிப்பது என்பது ஒரு சந்தேகத்தை அளிக்கின்றது. தேர்தல் நடக்கவேண்டிய முறையாக இது தெரியவில்லை. மேலும் எலக்டட் பாடி. என்றாலே இந்த ஆட்சியாளர்களுக்குப் பிடிப்பதே இல்லை..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவை ஏன் எதிர்க்கிறீர்கள் என்பதை மட்டும் சொன்னால் போதும். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமர வேண்டும்.

திரு. ஜெ. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியின் தேர்தலை நடத்தும்படியான கால அளவை 29-7-1985 லேயிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிக்கும்படியான நிலையிலே இந்தச் சட்டமுன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மதுரை மாநகராட்சியைப் பொறுத்த அளவில் அது கோவை மாநகராட்சியைப் போன்றோ அல்லது சென்னை மாநகராட்சியைப் போன்றோ உள்ள நிலைமையில் இல்லை, அந்த நகராட்சிக்கு ஸ்பெஷல் ஆபிசர்களை நியமிக்கப்பட்டிருக்கும் நிலை.

ஏற்கனவே அந்த மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வந்திருந்த கவுன்சிலர்களும் மேயர் அவர்களும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் அதைக் கலைத்துவிட்டு ஒரு தனி அதிகாரியை ஏற்படுத்தி நடத்தி வந்ததோடு, தொடர்ந்து அதற்கு தேர்தலை நடத்துவதற்கு பதிலாக அந்த தனி அதிகாரியின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே போகக் கூடிய நிலையை அரசு எடுத்திருப்பது சரியானது அல்ல.

ஏனென்றால் இங்கே சொல்லப்பட்டிருக்கக்கூடிய காரணம் 9-9-1985-ல் பஞ்சாயத்துக்களுக்கும், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்குப் தேர்தலை நடத்துவதற்காக அரசு முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது, என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பு கொடுக்கட்டும். அந்த 6 மாத காலத்திற்குள்ளாக, மதுரை மாநகராட்சிக்கும் தேர்தல் நடத்தப் போகிறோம் என்ற அந்த முறையிலே ஒரு அறிவிப்பு கொடுத்து, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்க அரசு யோசித்து இருக்க வேண்டுமே தவிர, கால நீடிப்பு மட்டும் கேட்பது சரியல்ல என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே இதுபோன்று பல முறை இந்தக் கால நீட்டிப்பு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள், மதுரை மாநகராட்சி சம்பந்தமாக. எனவே மீண்டும் மீண்டும் இப்படிப்பட்ட முறையிலே தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போவது சரியல்ல. தேர்தலுக்கு ஒரு நாள் குறிப்பிட்டு, அதிலே தேர்தலை நடத்த வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த தனி அதிகாரிகளின் காலத்தை நீடிப்பதற்கான சட்டத்தை நான் அறிமுக ஸ்டேஜிலேயே எதிர்க்கிறேன்.



திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மாநகராட்சிக்கு மேலும் 6 மாத காலம், அங்குள்ள தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியதேர்தல்களே பல ஆண்டுக் காலம் தொடர்ந்து அறிவிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டு கடைசியாக இப்போது 9-9-1985-ல் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இந்த மதுரை மாநகராட்சிக்கு மேலும் 6 மாத காலத்தை நீட்டிப்பது, தேர்தல் வருமா வராதா என்று மக்கள் மத்தியிலே அவநம்பிக்கையை ஊட்டுவதாக இருக்கிறதே தவிர, இன்னும் தெளிவாக விளக்கமாக தேர்தல் வரும், நடத்தப்படும் என்று உறுதியாக எண்ண முடியாத நிலையிலேயே தான் இருக்கிறது. மற்ற எதிர்க்கட்சிகளைப் பொறுத்த வரையில் தேர்தல் வரும் என்று எதிர்ப் பார்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில், அதுகுறித்து எந்த விதமான வேலையும் தொடங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், குழப்பம் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தெளிவாக இன்னும் 6 மாத காலத்திற்குள் மதுரை மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தப்படும் என்பதை, உறுதியாக அறுதியிட்டு தேதியை அறிவித்து, அன்று தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிப்பு கொடுத்தால், இந்த 6 மாத கால நீட்டிப்பை பற்றிக் கவலை இல்லை. அப்படி உறுதியாக தேதியை அறிவித்து அமைச்சர் அவர்களே அறிவிப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகளை வைத்துக் கொண்டேதான் ஆட்சியை நடத்தித் தீரவேண்டும் என்பது அரசினுடைய நோக்கம் அல்ல. புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் திட்டம் வைத்திருக்கிறது. தேதியை அறுதியிட்டு என்னால் சொல்ல முடியவில்லை என்றாலும், விரைவிலே தேர்தல் நடத்தப்படும் என்று மட்டும் தெரிவித்துக் கொண்டு, இந்த சட்ட முன் வடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவை ஏன் எதிர்க்கிறீர்கள் என்பதை மட்டும் சொன்னால் போதும். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமர வேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியின் தேர்தலை நடத்தும்படியான கால அளவை 29-7-1985 லேயிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிக்கும்படியான நிலையிலே இந்தச் சட்டமுன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மதுரை மாநகராட்சியைப் பொறுத்த அளவில் அது கோவை மாநகராட்சியைப் போன்றோ அல்லது சென்னை மாநகராட்சியைப் போன்றோ உள்ள நிலைமையில் இல்லை, அந்த நகராட்சிக்கு ஸ்பெஷல் ஆபிசர்களை நியமிக்கப்பட்டிருக்கும் நிலை.

ஏற்கனவே அந்த மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வந்திருந்த கவுன்சிலர்களும் மேயர் அவர்களும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் அதைக் கலைத்துவிட்டு ஒரு தனி அதிகாரியை ஏற்படுத்தி நடத்தி வந்ததோடு, தொடர்ந்து அதற்கு தேர்தலை நடத்துவதற்கு பதிலாக அந்த தனி அதிகாரியின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே போகக் கூடிய நிலையை அரசு எடுத்திருப்பது சரியானது அல்ல.

ஏனென்றால் இங்கே சொல்லப்பட்டிருக்கக்கூடிய காரணம் 9-9-1985-ல் பஞ்சாயத்துக்களுக்கும், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தலை நடத்துவதற்காக அரசு முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது, என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பு கொடுக்கட்டும். அந்த 6 மாத காலத்திற்குள்ளாக, மதுரை மாநகராட்சிக்கும் தேர்தல் நடத்தப் போகிறோம் என்ற அந்த முறையிலே ஒரு அறிவிப்பு கொடுத்து, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்க அரசு யோசித்து இருக்க வேண்டுமே தவிர, கால நீடிப்பு மட்டும் கேட்பது சரியல்ல என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே இதுபோன்று பல முறை இந்தக் கால நீட்டிப்பு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள், மதுரை மாநகராட்சி சம்பந்தமாக. எனவே மீண்டும் மீண்டும் இப்படிப்பட்ட முறையிலே தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போவது சரியல்ல. தேர்தலுக்கு ஒரு நாள் குறிப்பிட்டு, அதிலே தேர்தலை நடத்த வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த தனி அதிகாரிகளின் காலத்தை நீடிப்பதற்கான சட்டத்தை நான் அறிமுக ஸ்டேஜிலேயே எதிர்க்கிறேன்.





திரு. இரா. முத்தையா : நான் குறிப்பிடுவது, அன்றைய முதல் அமைச்சர் டாக்டர் பட்டம் பெற செல்கிறபோது, நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை, அங்கே ஒரு மாணவன் பிணமானான் என்ற அந்த நிகழ்ச்சியைத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர, அந்த மாணவனை இவர் தான் பிணமாக்கினார் என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி அங்கே நடைபெற்றது. இவர்கள் டாக்டர் பட்டம் பெறச் செல்கிறார்கள். அங்கே அவன் பிணமாக்கப்படுகிறான் என்கிற நிகழ்ச்சியைத்தான் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடக்கத்திலேயே அவர்கள் அப்படித்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். அதாவது முதல் அமைச்சர் செல்கிற நிகழ்ச்சியிலே இதைப் போன்று நடந்திருக்கிறது என்றுதான் ஆரம்பித்தார்கள்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பேச்சை நீங்கள் படித்துப் பார்க்கலாம். முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்காக ஒரு மாணவனை பிணமாக்கிவிட்டு, அந்த டாக்டர் பட்டம் பெற்றார் என்ற குற்றச்சாட்டு, இந்த அவையிலே ஏற்கனவே இடம் பெற்று இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எத்தனையோ முறை மறுக்கப்பட்டு இருக்கிறது. அது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல. இது வேண்டுமென்றே சொல்வதாக இருந்தால், வேண்டுமென்றே திரும்பச் சொல்வதாக இருந்தால், அதை ஆளும் கட்சி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த நிகழ்ச்சியை மட்டும் சொல்லுங்கள்.

திரு. இரா. முத்தையா : அது இங்கே பேசப்பட்டது. இன்றைக்குக் கூட நீங்கள் மறுக்கலாம். (குறுக்கீடு) அன்றைக்கு இங்கே பேசப்பட்டு இருக்கிறது. அதை நீங்கள் அன்றைக்கு ஆளுகிற கட்சியாக இருந்த நீங்கள் மறுத்து இருக்கலாம். (குறுக்கீடு) இங்கே பேசப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த அவையிலே பேசப்பட்டது.

திரு. க. அன்பழகன் : இந்த அவையிலே பேசப்பட்டது என்று சொன்னால், இதற்குப் பின்னாலே எடுக்கப்பட்ட முடிவோ அல்லது நீதிபதி தந்த தீர்ப்போ, அந்தக் கருத்துக்களை மதிக்காமல், இந்த அவையிலே குற்றச்சாட்டுக்களைச் சொல்லலாம் என்றால், ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டை இந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றிருப்பதை எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு இருக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11-10)

6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 15—காவல் துறை கோரிக்கை எண். 16 தீயணைப்பு பணிகள்—(தொடர்ச்சி).

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கோரப்பட்டுள்ள எங்களுடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிற கோரிக்கை எண். 15 காவல் துறை, கோரிக்கை எண். 16 தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகளுக்கு அரசு கோரியிருக்கிற தொகையில் எந்த விதமான வெட்டும் இல்லாமல் வழங்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவதற்கும், அதற்கான காரண காரிய விளக்கங்களை தெரிவிப்பதற்கும் இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இந்த அவையில் இதற்கு முன்னாலேயிருந்த கால கட்டங்களில் காவல் துறை மானியம் விவாதத்திற்கு வருகிறது என்று சொன்னால், அந்த விவாதங்களில் ஆளுகின்ற கட்சியினர் எந்தெந்த முறையில் இந்தத் துறையை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி வருகிறது என்பதையும், எதிர்க் கட்சிகளை அழுத்துவதற்கும், எதிர்க்கட்சிகளை மடக்குவதற்கும் எந்தெந்த வழிமுறைகளை சட்ட விரோதமாக கடை பிடித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பல்வேறு உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். அந்தக் கால கட்டங்களில் அப்படி அவர்கள் அந்தக் கருத்துகளை எடுத்துத் தெரிவிப்பது வழக்கமாக இருக்கும். பழைய சட்டமன்ற நடவடிக்கைகளைக் குறிப்புகளை புரட்டிப் பார்த்தால் அப்படிப்பட்ட பல்வேறு விவாதங்களை நாம் காண முடியும். இன்றைக்கு இந்த ஆட்சி பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு, எங்களுடைய ஒப்புயர்வற்ற தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு, அந்த நிலை மாறியிருக்கிறது.



இந்த மானியம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற நேரத்தில், நேற்று பேசியவர்களும், தங்கள் கருத்துக்களை தெரிவிக்கிறபோது, இந்தத் துறையினை ஆளுகின்ற கட்சி தங்களுக்குச் சாதகமாக இன்னென்ன முறைகளில் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றோ, அரசியல் ரீதியாக காவல்துறை பின்னணியில் இருந்து கொண்டு ஆளும் கட்சி அட்டகாசம் செய்கிறார்கள் என்றோ, அதிலும் குறிப்பாக, முதலமைச்சர் பின்னணியில் இருந்து, அல்லது இந்த ஆட்சியின் பின்னணியிலிருந்து, இன்னென்ன தவறுகளைச் செய்கிறார்கள் என்றோ யாரும் இதுவரையில் சுட்டிக் காட்ட முடியவில்லை.

அதுமட்டுமல்லாமல், அந்தக் காலக் கட்டங்களில் எல்லாம் அன்றைய ஆட்சியின் முதலமைச்சர்களே பல்வேறு முறைகேடுகள் இந்தத் துறையில் நடைபெறுவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்த உரையில் கூட பல்வேறு சம்பவங்களைப் பற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். முந்தைய கால கட்டங்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளைப் பற்றி குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதைப்போல நேற்றைய தினம் பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், தி.மு.க. உறுப்பினர்களும் சில நாட்களுக்கு முன்னாலே காமராஜர் மாவட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினைப் பற்றி கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிற நேரத்தில், இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னால் இந்த ஆளும் கட்சி அல்லது இந்த ஆட்சி அல்லது முதலமைச்சர் இந்த வகையில் இதனைத் தூண்டி விட்டிருக்கிறார்கள் என்ற வகையிலோ, அல்லது அவர்கள் பின்னணியில் இருந்திருக்கிறார்கள் என்றோ யாராலும் கருத்துக்களைக் கூற முடியவில்லை. அந்த அளவிற்கு இன்றைய ஆட்சி யாராலும் குறை காண இயலாத வகையில் செயல்பட்டு வருகிறது.

ஆனால் 1977ஆம் ஆண்டில் எங்களுடைய மாண்புமிகு, புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால், இங்கே ஆண்டவர்களால் என்னென்ன தவறுகள் நடைபெற்றன என்பதை இதே அவையில் பல்வேறு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பல்வேறு நகரங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளைப் பற்றியும், தடியடிப் பிரயோகங்களைப் பற்றியும், கண்ணீர்ப் புகை வீச்சுக்களைப் பற்றியும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அவையிலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அத்தனை நிகழ்ச்சிகளுக்குப் பின்னாலும், அன்றைக்கிருந்த ஆட்சியினர் பின்னணியில் இருந்தனர் என்பதை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய நிகழ்ச்சிகளை நாம் அறிவோம். குறிப்பாக, சொல்ல வேண்டுமென்றால் அன்றைக்கு இருந்த ஆட்சியினரின் கால கட்டங்களில் முகவை மாவட்டத்தில், இரண்டு பார்ட்னர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட ஒரு பகைமையுணர்ச்சி பெரிய

போராட்டமாக வெடித்த நேரத்தில், ஆட்சியே ஒரு தரப்பிற்கு சாதகமாக இருந்தது என்றக் குற்றச்சாட்டை இங்கே சொல்லி இருக்கிறார்கள். கண்ணைக் கட்டி ஐந்து பேர்களை காக்கை, குருவிகளைப் போல சுட்டு வீழ்த்திய நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். அதேபோல, தாய்த் தமிழ் வாழ்க என்று முழக்கமிட்ட மாணவச் சிங்கங்களை இராணுவத்தைக் கொண்டும், காவல் துறையினரைக் கொண்டும் சிட்டுக் குருவிகளைப் போல சுட்டு வீழ்த்திய நிகழ்ச்சிகளை இங்கே இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள்.

அந்த நேரத்திலே எல்லாம் ஆட்சியினர் இரும்புக் கரம் கொண்டு, நாங்கள் நசுக்குவோமே தவிர, வீணாக இருக்க மாட்டோம் என்றுதான் பதில் சொல்ல முடிந்தது. அதைப் போன்ற நிகழ்ச்சிகள் இன்றைக்கு இருக்கிறதா? என்பதைத் தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, இன்னும் ஒன்று நாம் அனைவரும் அறிவோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அன்றைய முதலமைச்சர் டாக்டர் பட்டம் பெறுவதற்காக ஒரு மாணவனை பிணமாக்கி, அந்தப் பிணத்தின் மீது நின்றுதான் டாக்டர் பட்டம் பெற....

திரு. க. அன்பழகன் : ஐ அப்ஜக்ட். துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ முறை இங்கே பேசப்பட்டு, மறுப்பு சொல்லப்பட்டு ஏற்கப்பட்டு இருக்கிறது. தவறான விவரத்தைத் தான் தொடர்ந்து வைப்பது என்றால், அதுவும் வேண்டும் என்று சொல்வதாக இருந்தால், அது இந்த அவைக் குறிப்பிலே இடம் பெறலாகாது என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை ஆளும் கட்சியின் சார்பிலே அப்படித்தான் சொல்ல வேண்டும் என்று கருதுவார்களேயானால், ஆதாரத்தோடு அவர்கள் நிருபிக்க முன்வரவேண்டும்.

திரு. இரா. முத்தையா : துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது காவல் துறை மானியத்தின் மீது இந்த அவையில் கடந்த காலங்களில் எதிர்க்கட்சியினர் எடுத்து வைத்த வாதங்களில் இதைப்போன்ற நிலைமைகள் சுட்டிக் காட்டப்பட்டு, எந்தெந்த முறைகளில் தவறுகள் நடைபெற்று இருக்கிறது என்ற நிலைமையைத்தான் அன்றைக்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். பேராசிரியர் அவர்கள், அன்றைய முதல் அமைச்சர் டாக்டர் பட்டம் பெறச் செல்லவில்லை, அப்படிப்பட்ட ஒரு மாணவன் பிணமாக்கப்படவில்லை என்று குறிப்பிட முற்படுகின்றாரா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு மாணவன் பிணமாகி இருக்கலாம். டாக்டர் பட்டம் பெறுவதற்காக அவனை பிணமாக்கி விட்டு, டாக்டர் பட்டம் பெற்றார் என்று சொல்வது இந்த அவையினுடைய குறிப்பிலே எந்தக் காலத்திலேயும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று அல்ல. அது உண்மையும் அல்ல.



திரு. இரா. முத்தையா : நான் குறிப்பிடுவது, அன்றைய முதல் அமைச்சர் டாக்டர் பட்டம் பெற செல்கிறபோது, நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை, அங்கே ஒரு மாணவன் பிணமானான் என்ற அந்த நிகழ்ச்சியைத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர, அந்த மாணவனை இவர் தான் பிணமாக்கினார் என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி அங்கே நடைபெற்றது. இவர்கள் டாக்டர் பட்டம் பெறச் செல்கிறார்கள். அங்கே அவன் பிணமாக்கப்படுகிறான் என்கிற நிகழ்ச்சியைத்தான் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடக்கத்திலேயே அவர்கள் அப்படித்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். அதாவது முதல் அமைச்சர் செல்கிற நிகழ்ச்சியிலே இதைப் போன்று நடந்திருக்கிறது என்றுதான் ஆரம்பித்தார்கள்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பேச்சை நீங்கள் படித்துப் பார்க்கலாம். முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்காக ஒரு மாணவனை பிணமாக்கிவிட்டு, அந்த டாக்டர் பட்டம் பெற்றார் என்ற குற்றச்சாட்டு, இந்த அவையிலே ஏற்கனவே இடம் பெற்று இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எத்தனையோ முறை மறுக்கப்பட்டு இருக்கிறது. அது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல. இது வேண்டுமென்றே சொல்வதாக இருந்தால், வேண்டுமென்றே திரும்பச் சொல்வதாக இருந்தால், அதை ஆளும் கட்சி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த நிகழ்ச்சியை மட்டும் சொல்லுங்கள்.

திரு. இரா. முத்தையா : அது இங்கே பேசப்பட்டது. இன்றைக்குக் கூட நீங்கள் மறுக்கலாம். (குறுக்கீடு) அன்றைக்கு இங்கே பேசப்பட்டு இருக்கிறது. அதை நீங்கள் அன்றைக்கு ஆளுகிற கட்சியாக இருந்த நீங்கள் மறுத்து இருக்கலாம். (குறுக்கீடு) இங்கே பேசப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த அவையிலே பேசப்பட்டது.

திரு. க. அன்பழகன் : இந்த அவையிலே பேசப்பட்டது என்று சொன்னால், இதற்குப் பின்னாலே எடுக்கப்பட்ட முடிவோ அல்லது நீதிபதி தந்த தீர்ப்போ, அந்தக் கருத்துக்களை மதிக்காமல், இந்த அவையிலே குற்றச்சாட்டுக்களைச் சொல்லலாம் என்றால், ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டை இந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றிருப்பதை எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு இருக்கிறது.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு பேசிய அவர்களுடைய கருத்தை இந்த அவை எந்த முறையிலே ஏற்றுக் கொண்டாலும் சரி, நான் இன்றைக்கு குறிப்பிட வந்தது, இந்த ஆட்சியின் மீது நேற்றும் சரி, இன்றைக்கு முன்னரும் சரி, இந்தக் காவல் துறை மானியத்தின் மீது, பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொல்கிற போது, எங்களுடைய முதலமைச்சரோ, அல்லது எங்களுடைய அமைச்சரவையிலே இருப்பவர்களோ, அல்லது எங்களுடைய கட்சிக்காரர்களோ, பின்னணியிலிருந்து ஒரு படுபாதகக் கொலைக் காரியத்திற்கு உடந்தையாக இருந்தது என்கிற அளவிற்கு இங்கே குறிப்பிட்ட ஆதாரத்தோடு சொல்லப்படவில்லை. ஆனால் பழைய காலத்தின் வரலாறுகளைப் பார்த்தால், இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் இங்கே பேசப்பட்டு இருக்கிறது என்பதற் காகத்தான் நான் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இங்கே எது வேண்டுமானாலும் பேசப்பட்டு இருக்கலாம். பேசப்பட்ட கருத்து பின்னாலே மறுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு மாறாக, இங்கே அன்றைய தினம் அப்படிச் சொல்லப்படவில்லை, அப்போது அப்படிச் சொல்லப்பட்டு இருக்கிற காரணத்தாலே, மோட்டிவ் ஏற்படுத்தி, முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பற்றி, தவறான முறையிலே எண்ணம் ஏற்படுத்துகிற முறையிலே அந்தப் பேச்சு ஏற்படுகிறது. வேண்டுமானால் நீங்கள் இதைப் படித்துப் பார்த்து, இதிலே எந்த மோட்டிவும் இல்லை என்றால், அது இடம் பெறுவதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. மோட்டிவோடு அந்தக் கருத்து இடம் பெறுகிற காரணத்தால், தவறான குற்றச்சாட்டு, மறுபடியும் இந்த அவையிலே இன்றைய தினம் பேசுவதன் மூலமாக நிலை நிறுத்த விரும்புவதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் நான் இருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது முகவை மாவட்டத்திலே கண்ணைக் கட்டிச் சுட்டார்கள். அதற்கு அரசு உடந்தையாக இருந்தார்கள் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் காங்கிரஸ் அரசு இருந்தது. திரு காமராஜ் அவர்கள் அன்றைக்கு ஆட்சி புரிந்தார்கள். அந்த அரசு உடந்தையாக இருந்தது, சம்பந்தப்பட்டு இருந்தது, நிரூபிக்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் அதிலுள்ள விளக்கங்களையும் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டாக பேசும்போது சரியான முறையில் பேச வேண்டும் என்பது என்னுடைய கருத்து.



திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசும்போது ஒரு குற்றச்சாட்டை எடுத்து வைத்து மறுக்கப்பட்ட பிறகு மீண்டும் அதை இங்கே எழுப்பலாமா என்று கேட்டார்கள். நான் அவருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆண்டு தோறும் ஒரே மாதிரியானக் குற்றச்சாட்டைத் திரும்பத் திரும்ப இந்த அவையிலே பல முறை எடுத்துச் சொன்னதை இந்த அரசு மறுத்து இருக்கிறது. மீண்டும் மீண்டும் இந்த ஆண்டு கூட சென்ற ஆண்டு சொன்ன குற்றச்சாட்டை, மறுக்கப்பட்ட குற்றச்சாட்டை அவர்கள் இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், அவர்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கள் இதுபோன்று செய்யாமல் தடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1957-ம் ஆண்டு முதுகுளத்தூர் தொகுதியில் நடந்த விஷயம் பற்றி இங்கே சொன்னார்கள். அன்றைய தினம் நானும் இந்த அவையில் இருந்தேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இருந்தார் கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களும் இந்த அவையில் இருந்தார்கள். அன்றைக்கு கண்ணைக் கட்டி சுட்டார் கள் என்பது அன்றைக்கே மறுக்கப்பட்டு இருக்கிறது. அன் றைக்கு ஆயிரக்கணக்கான அரிசன மக்களை நெருப்பில் எரித்து, சுட்டுக் கொல்லப்பட்ட நிலைமையில் தான் அதை அடக்குவதற் காக அன்றைக்கு இருந்த காங்கிரஸ் ஆட்சி அதை தடுக்கத் கடுமை யான நடவடிக்கை எடுத்தது தவிர, யாரையும் கண்ணைக் கட்டி சுடவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவங்கள் உண்மைகள், 'பேக்ட்ஸ்' சொல்லலாம். ஆனால், அதற்கு ஒரு ஒப்பீனியன் தன்னு டைய கருத்தை ஏற்று சொல்லுகிறபோது இந்தச் சிக்கல் ஏற்படு கிறது. சம்பவங்களைச் சொல்லலாம். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் முன்னால் முதலமைச்சர் டாக்டர் பட்டம் வாங்கப் போனார். அப்போது அங்கே ஒரு கலவரம் நடந்தது. அந்தக் கலவரத்தில் மாணவர் இறந்தார். "These are all facts" பேக்ட்ஸ்-ஐ சொல்லுவது என்பது வேறு. அதிலே ஒப்பீனியனைக் கொண்டு வரும்போது தான் இந்தப் பிரச்சினை வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் அந்த உண்மையை மட்டும் சொல்லியிருந்தால் அதை அனுமதிக்கலாம். அதில் தன்னுடைய கருத்துக்களை குற்றச்சாட்டாக சொல்லி யிருந்தால் அதைத் தாங்கள் பார்த்து என்ன தீர்ப்பு அளிக்கிறீர் களோ அதை ஏற்றுக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைப் பார்த்துச் செய்கிறேன்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சியை நான் குறிப்பிடுகிறேன். அங்கே ஒரு மாணவன் பிணம் ஆக்கப்பட்டான். அதற்கு பிறகு அன்றைய முதலமைச்சர் அங்கே டாக்டர் பட்டம் பெற்றார். அது பற்றிய விவரங்களை எல்லாம் இங்கே அந்தத் துறையின் விவாதத்தின் போது பேசப்பட்டு இருக்கிறது என்பதைத் தான் நான் சொல்ல வந்தேன்.

அதைப்போல அன்றைய ஆட்சியினுடைய உச்ச கட்டமான அத்துமீறலுக்கு ஒரு எடுத்துக் காட்டாக நடந்த ஒரு நிகழ்ச்சியினை, சம்பவத்தினை நாம் அனைவரும் அறிவோம். திருச்சியில் உள்ள கிளைவ் விடுதியில் பச்சிளம் பாலகர்கள், மாணவர்கள் மீது காவல்துறையினர் ஏவி விடப்பட்டு அங்கே பச்சை ரத்தம் பரிமாறிக் கொண்ட காட்சியை நாம் எல்லோரும் அறிவோம். அதைப்பற்றி இங்கே பேசப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன பின்னணி என்று சொன்னால், அந்த மாணவர்கள் என்ன தவறுகள் அங்கே செய்தார்கள். இன்றையதினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி பல்வேறு விவரங்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. அங்கே காவல்துறை அதிகாரிகளைப் பிடித்து வைத்துக் கொண்டார்கள், காவலர்களை பிடித்து வைத்துக் கொண்டார்கள், காவலர்களை வெட்டினார்கள் என்பனபோன்ற சம்பவங்களா என்று கேட்டால் இல்லை. அன்றைக்கு இருந்த ஆட்சியினர் அது போன்ற சம்பவங்கள் காரணமாக அன்றைக்கு போலீஸ் துறையினரை ஏவி, மாணவர்களுடைய பச்சை ரத்தத்தினை பரிமாறி இருந்தால், அதிலே நியாயம் என்று சொல்லி இருக்க முடியும். ஆனால், அன்றைக்கு நடந்தது எல்லாம் அந்த மாணவர்கள் ஒரே ஒரு கோஷத்தைப் போட்டார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். வாழ்க என்று சொன்னார்கள். இன்னொருவரை ஒழிக என்று சொல்லியிருந்து இருக்கலாம். ஆனால், வாழ்க என்று சொன்ன அந்த மாணவர்களை விட மாட்டோம் என்று காவல்துறையை ஏவி விட்டு அங்கே பச்சிளம் மாணவர்களுடைய பச்சை ரத்தத்தை பரிமாறியதை இந்த நாடு மறக்கவில்லை. அத்தனை பேரும் அறிந்து இருக்கின்றோம்.

அதுபோல எங்களுடைய மாவட்டம் போடியில் அன்றைக்கு எங்களுடைய தலைவர் அவர்கள் அன்றைக்கு கட்சியில் இருந்து நீக்கப்பட்ட மறுநாளே மாணவர்கள், பக்கத்தில் இருக்கின்ற சின்னமரத்துப் பட்டியில், நடந்த அநீதியை சுட்டிக் காட்டுவதற்காக போடியை நோக்கி வந்து கொண்டு இருந்தார்கள். போடியை நோக்கி வந்து கொண்டு இருந்த அந்த மாணவர்களை அன்றைக்கு காவல்துறையினர் சுட்டு, அடித்தார்கள். அது இந்த அவையில் பேசப்பட்டு இருக்கிறது. அதை இந்த நாடும் அறியும்.



அதுபோல பரமத்தி வேலூரிலே அன்றைய முதலமைச்சர் ஒரு நிகழ்ச்சிக்குச் செல்லுகிறார்கள். நிகழ்ச்சிக்கு செல்கின்ற முதலமைச்சரை அங்கே இருக்கிற மக்கள் உள்ளே விடமாட்டோம் என்று சொல்லும் அளவுக்கு அங்கே பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

அவர் உள்ளே வர முடியவில்லை என்கிற காரணத்திற்காக அந்த பரமத்தி வேலூரில் துப்பாக்கிச் சூடு நடத்தி, அந்தப் பரமத்தி வேலூரையே சுடுகாடு ஆக்கிய நிகழ்ச்சியை இந்த நாடு அறியும். நாமும் அறிவோம். இந்த அவையிலேயும் பேசப்பட்டு இருக்கிறது.

அதேபோல், கண்டமங்கலத்தில், வேலூரில், பாளையங்கோட்டையில், அன்றைக்குப் பச்சிளம் பாலகர்கள் எல்லாம் சுட்டு வீழ்த்தப்பட்ட நிகழ்ச்சியை இந்த நாடு அறியும். அரசியல் பின்னணியிலே நடந்த இந்தச் சம்பவங்களை இந்த அவையிலேயும் பேசி இருக்கிறார்கள். அதனை அனைவரும் அறிவோம்.

இவ்வளவு நிகழ்ச்சிகள் அன்றைக்கு நடந்து இருந்தாலும், அதைப் போன்ற நிகழ்ச்சிகள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எங்காவது நடைபெற்றிருக்கிறது என்று இங்கே நேற்று பேசிய உறுப்பினர் ஆகட்டும், அல்லது இனிமேல் பேசுகிற உறுப்பினர்கள் ஆகட்டும், சுட்டிக்காட்ட முடியுமா ?

எங்களுடைய முதலமைச்சருடைய பராக்கிரமத்தைக் காட்டுவதற்காக, எங்களுடைய முதலமைச்சருடைய ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக எங்காவது துப்பாக்கிச் சூடு நடத்தினோம் என்கிற நிகழ்ச்சியை எங்காவது சுட்டிக்காட்ட முடியுமா ? என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். அதைப்போல் எங்களுடைய ஆட்சியில் நடந்த ஒரே ஒரு துப்பாக்கிச் சூடு. . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்வதைவிட, உங்கள் கட்சியிலே அடுத்து பேசும்போது அவருடைய கருத்தை நீங்கள் உங்களுடைய விவாதத்திலே எப்படி ஈடுபடுத்தவேண்டுமோ, அப்படி ஈடுபடுத்துங்கள்.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, மாணவர்கள், ஒழிக என்று சொன்னதால், அந்த மாணவர்களை அடித்ததாகவும், பச்சை ரத்தம் பரிமாறியதாகவும் சொல்கிறார்கள், அதே போல் இந்த ஆட்சியில் காட்டமுடியுமா என்று அவர்கள் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். இதே போன்ற நிகழ்ச்சி, முதலமைச்சராலேயே நேரடியாக பாதிக்கப்பட்டவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பதிலாகச் சொல்ல முடியாது. பேசுவதை மறுத்துப் பேசலாம், இல்லை என்று சொல்லிவிட்டுப் போங்கள்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் அந்த மாணவர்கள் எல்லாம் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானார்கள் என்று சொன்னால், அவர்கள் சுட்டிக்காட்டுகிற நிகழ்ச்சிகளில் ஆங்காங்கே காவலர்களைப் பிடித்து வைத்துக்கொண்டார்கள், காவலர்களைக் கட்டி வைத்துவிட்டார்கள், காவலர்களை வெட்டினார்கள் என்பன போன்ற நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, அதற்குப் பின்னால் தவிர்க்கமுடியாமல் துப்பாக்கிச்சூடு நடந்தது என்று குறிப்பிடுவது போல் இல்லை.

அன்றைய தினம் அந்த மாணவர்கள் செய்த தவறு எல்லாம், புரட்சித் தலைவர் வாழ்க என்று சொன்னார்கள் ; இன்னொருவரைவேண்டுமானால் ஒழிக என்று சொல்லி இருக்கலாமோ, என்னவோ தெரியவில்லை ; அதற்காக பச்சிளம் ரத்தம் பரிமாறப்பட்டது என்று தான் சொன்னேன். அதிலே அவர் எந்த வகையிலே பாதிக்கப்படுகிறார் என்று தெரியவில்லை.

இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஒரு அரசியல் இயக்கத்தின் மீது இங்கே திட்டமிட்டு துப்பாக்கிச் சூடு, அரசியல் கட்சிகள் மீது, அரசியல் கட்சி ஊர்வலத்தின் மீது, அரசியல் கட்சி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடைபெற்றதா என்றால் ஒரே ஒரு சம்பவத்தைத் தான் சுட்டிக்காட்ட முடியும். அந்த ஒரே ஒரு சம்பவத்திலும் கூட துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானவர் ஆளுகிற எங்கள் கட்சியினரே.

அது 1980-வது ஆண்டு மதுரையிலே நடந்த தேர்தல் பிரச்சார ஊர்வலத்திலே துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானவர் எங்களுடைய கட்சியினரே என்கிற அளவுக்குத் தான் ஒரு நிகழ்ச்சியைத்தான் சுட்டிக் காட்ட முடியும்.

அந்த அளவுக்குத் தான், அரசியல் ரீதியாக, ஒரு இயக்கத்தின் மீதோ, ஒரு பகுதி மக்கள் மீதோ, இந்த ஆட்சி எந்தவிதமான அத்துமீறல்களையும் செய்திடவில்லை என்பதற்காகத் தான் இதனை எல்லாம் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், அன்றைய தினம் எங்களுடைய கட்சியினுடைய தலைவர்கள் எந்தந்த வழிகளில் எல்லாம் பழி வாங்கப்பட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்று இரண்டு நிகழ்ச்சிகளைக் சுட்டிக்காட்டுவதும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



எங்களுடைய கட்சியினுடைய அன்றைய பொருளாளராக இருந்த, ஆதி திராவிட மக்களுடைய தளபதியாக இருந்த, காலம் சென்றவர் எஸ். எம். துரைராஜ் அவர்கள் அன்றைக்கு செங்கல்பட்டிலே ஒரு ஆர்ப்பாட்டத்திற்கென்று சென்ற நேரத்தில், அவர் நடு ரோட்டிலேயே மறிக்கப்படுகிறார், குண்டர் களாலும், போலீஸ் குண்டாந்தடிகளாலும். அவருடைய மண்டை ஓடு பிளக்கப்படுகிறது. மண்டை ஓடு பிளக்கப்பட்டு உயிருக்குப் போராடுகிற நிலைமையில் அன்றைய தினம் எஸ். எம். டி. அவர்கள் பொது மருத்துவமனையிலே சேர்க்கப் படுகிறார்.

(முற்பகல் 11—30)

பொது மருத்துவமனையில் சேர்க்கப்படுகிற அவர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார். எந்த நேரம் என்ன ஆகுமோ என்ற நிலைமை. அந்த அளவுக்கு குத்துயிரும், குலையுயிருமாக அவர் அங்கே மருத்துவமனையில் கிடக்கிறார். வழக்கு அவர்களைத் தாக்கியவர்கள் மீது அல்ல. அவர் மீதே 307 பிரிவில் வழக்கு போட்டார்கள். அவருடைய மனைவி, மக்களைக்கூட அவரை மருத்துவ மனையிலே சென்று பார்ப்பதற்கு அனுமதிக்காமல் இருந்த நிலைமையெல்லாம் இருந்தது. அதைப்போன்ற நிலைமைகள் இன்றைக்கு எங்கேயாவது அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அன்றைய தினம் பழி வாங்குகின்ற .முயற்சிகள் நடந்தன என்பதை இந்த நாடே அறியும், இந்த அவையிலேயும் பேசப் பட்டிருக்கிறது. அன்றைக்கு எங்கள் தலைவர் மீது பல்வேறு கோர்ட்டுகளில், ஏறத்தாழ ஒன்பது வழக்குகளைப் போட் டிருந்தார்கள். அத்தனை வழக்குகளையும் சிரித்த முகத் துடனே சந்தித்தவர்தான் .எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவார்கள்.

ஒரு பொதுக் கூட்டத்தில் அன்றையதினம், இன்றைய தினம் தொழிலாளர் நல அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் திரு. கே.ஏ.கே. அவர்கள் ஒரு கருத்தைச் சொன் னார்கள். எங்களுடைய கட்சி நண்பர்கள் தலைவர்மீது கொண்டிருக்கின்ற பாசத்தையும், பண்பையும் எடுத்துச் சொல்வதற்காக ஒரு கருத்தைச் சொன்னார்கள். எங்களுடைய தலைவன் எதிரியின் தலையைக் கொண்டு வா என்று சொன்னா லும் கொய்து வரக்கூடிய ஆற்றல் மறவர்கள்தான் எங்கள் கட்சியினர் என்ற கருத்தைச் சொன்னார்கள். எங்கள் தலைவர் மீது எங்கள் கட்சியினர் கொண்டிருக்கின்ற பற்றைக்

குறிப்பிடுகின்ற கருத்துதான் அது. அந்தக் கருத்தைச் சொன்னதற்காக அவர்மீதே, அன்றைய முதலமைச்சருடைய தலையைக் கொய்து வருவேன் என்ற முயற்சியிலே ஈடுபட்டார் என்று சொல்லி 307 செக்ஷனின்கீழ் வழக்கு போட்டார்கள்.

அன்றைய முதலமைச்சர் அன்று எந்த ஊருக்குச் செல்வதாக இருந்தாலும் எங்கள் கட்சிகாரர்களை எந்தயிடத்திலேயும் வெளியே விட்டு வைக்க மாட்டார்கள். முகவை மாவட்டத்தில் மேற்குக் கோடியிலே இருக்கின்ற ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அவர் வருகிறார் என்றாலும்கூட, இராமேஸ்வரத்தில் இருக்கின்ற, இப்பொழுது இங்கே அமைச்சராக இருக்கிறார்களே மாண்புமிகு திரு. இராமசாமி அவர்கள்—அவர்கள், இராமேஸ்வரத்திலே இருப்பவர், அவரைக் கைது செய்வார்கள். இப்படி அவர் வந்து போகின்ற வரையிலே எந்த ஊரிலேயும், எந்தப் பிராந்தியத்திலேயும் அந்தப் பகுதிகளில் எங்கள் கட்சி நண்பர்கள் தெருவிலே நடமாட முடியாத நிலைமை ஏற்படும். ஆனால், இன்றைய முதலமைச்சர் அவர்கள் எங்கேயாவது செல்கின்றபொழுது எதிர்க்கட்சியினரை அந்த நிலைமைக்கு ஆளாக்க வைத்திருக்கிறோமா? கறுப்புக்கொடி காட்டுகிறோம் என்று சொன்னாலும்கூட, அந்த இடத்திற்கே சென்று இன்றைய முதலமைச்சரவர்கள், காரை விட்டு இறங்கி, என்னப்பா, ஏதாவது மனு இருக்கிறதா, கொடுங்கள் என்று கேட்டு வாங்கிச் செல்லுகின்ற நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

இவ்வளவையும் எதற்காக நான் சொல்கிறேன் என்றால், கடந்த காலங்களில் எதிர்க்கட்சியினர் மீது நேரடியாக இந்தத் துறையை ஏவிவிட்டு பழி வாங்கும் முயற்சிகள் பல்வேறு இடங்களிலே நடந்து கொண்டிருந்தன. அதைப்போன்ற சம்பவங்கள் எதையாவது இந்த ஆட்சியின்மீது குறிப்பிட்டு ஏதாவது கூற முடியுமா என்றால் இல்லை என்பதற்கு அடையாளமாகத்தான் நேற்றைய தினம் அருமை நண்பர் திரு. ரகுமான் கான் அவர்கள் பேசுகின்றபொழுது, பத்து முப்பது பெண்களின் பெயர்களைச் சொல்லி அந்த வழக்கு என்னவாயிற்று, இந்த வழக்கு என்னவாயிற்று என்றுதான் கேட்க முடிந்ததே தவிர, அதற்குப் பிறகு இன்றுவரையில் இன்றைய முதல்வரவர்கள் காவல் துறையைத் தூண்டி விடுகிறார்கள் என்றோ, காட்டு தர்பார் நடத்துகிறார்கள் என்றோ கூற முடிகிறதா என்று கேட்பதற்காகத்தான் நான் ஆரம்பத்திலே சொன்ன நிகழ்ச்சிகளைச் சொல்லி, இதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் துறையிலே உள்ளவர்கள் அரசியல் ஈடுபாட்டுடன் நடப்பதாக இங்கே கருத்து கூறப்பட்டிருக்கிறது. இந்தத் துறையிலே இருப்பவர்கள் ஏதாவது அரசியல் ஈடுபாட்டோடு இருப்பார்கள் என்றால் அதற்குச் சொல்கிறேன். இன்றைக்கு நாங்கள்





நேரடியாகப் பல்வேறு இடங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் தோழர்கள் பல்வேறு காவல் நிலையங்களிலே இன்றைக்குத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் தோழர்கள் பல்வேறு காவல் நிலையங்களிலே அடிக்கப்பட்டு இருக்கிறார்கள். எந்தெந்தக் கிராமங்களிலே எங்கள் கட்சியின் செயலாளர்கள் பல்வேறு காவல் நிலையங்களிலே அடிக்கப்பட்டு இருக்கிறார்கள் தெரியுமா? பச்சையாய் குத்தியிருக்கிறாய் பச்சை என்று சொல்லி அந்தப் பச்சையிலேயே அடித்திருக்கின்ற காவல்துறை அதிகாரிகளையும் நாங்கள் கண்டுகொண்டுதான் இருக்கிறோம்.

இத்தனை கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு ஆளுங் கட்சியிலே இருக்கின்ற நாங்கள், எங்கள் முதல்வரவர்களிடத்திலே முறையிடுகின்றபொழுது அவர்கள் எந்த அளவிற்குக் காருண்யத்தோடு காரியங்களை ஆற்றுகிறார்கள் என்று சொல்வதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன். எங்களைப் பார்த்து அவர்கள் சொல்கிறார்கள், நீ காயம்பட்டிருந்தாலும் பரவாயில்லை. நியாயத்திற்காகப் பாடுபடு; நீ உன்னை வருத்திக்கொண்டாவது ஊருக்கு ஊழியம் செய் என்று சொல்லுகின்ற அளவிற்கு இன்றைக்கு நடமாடுகின்ற ஏசுவாக, புத்தராக, காந்தியாக காட்சி அளிப்பவர்கள்தான் எங்கள் முதல்வர் அவர்கள். அந்த அளவிற்கு எங்கள் கட்சியினர் பாதிக்கப்படும்பொழுது கூட அதைப் பெரிதுபடுத்தாமல், காவல் துறையினரை இந்த அளவிற்கு அரவணைத்துச் செல்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்தக் காவல் துறை இல்லை என்றால் பாதிக்கப்படுகின்றவர்கள் சாதாரண பொது மக்களாகும். அப்படிச் சாதாரண மக்களுக்குப் பாதுகாவலர்களாக இருப்பவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையிலேதான் இன்றைக்குக் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசியல் ஈடுபாட்டின் காரணமாக எங்களுடைய கட்சியினர் பாதிக்கப்பட்டதைச் சொன்னேன்.

அதேபோல், தேர்தல் நேரமாக இருந்தாலுங்கூட, இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் எங்களுக்கு விரோதமாகப் பல்வேறு நேரங்களில் காரியங்களை ஆற்றியிருக்கிறார்கள். இருந்தாலும் அதையும் சகித்துக் கொண்டிருந்தோம். பழைய ஆட்சியாக இருந்திருந்தால் அவர்கள் இந்நேரம் சஸ்பென்ட் செய்யப்பட்டிருப்பார்கள், டிஸ்மிசுக்கு ஆளாக்கப்பட்டிருப்பார்கள், காராக்கிரஹத்திற்குச் சென்றிருப்பார்கள். என்னுடைய சேடப்பட்டி தொகுதியிலேகூட ஒரு இன்ஸ்பெக்டர் ஏதோ அவரே வேட்பாளராக நிற்பதைப் போல், வேட்பாளராக நின்றவரோடு சேர்ந்து கொண்டு, திறந்த ஜீப்பில் ஊர், ஊராக அவரையும் கைத் தாங்கலாக, வேட்பாளரைப் போல், அவரே சுற்றி, சுற்றி வந்தார்கள். பழைய ஆட்சியாக இருந்திருந்தால் அன்றைக்கே அவர் டிஸ்மிஸ் ஆகியிருப்பார். ஆனால், அவர் இன்றைக்குதான் எப்படியாவது, டி. எஸ், பி. யாக ஆகவேண்டுமென்று

ஆள் பிடிக்கிற நிலையில் அலைந்துகொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு சகிப்புத் தன்மையோடு இந்தத் துறையை அணைத்துக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் 3 முறை இந்த ஆட்சியை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், எங்கள் மீது குறை என்று சொல்கின்ற பொழுது சில சம்பவங்களை வேண்டுமானால், இந்த, இந்த இடத்தில் திருட்டு நடைபெற்றது, இந்த இடத்தில் கொலை நடைபெற்றது, இந்த, இந்த இடத்தில் கொள்ளை நடைபெற்றது என்பதைத் நான் சுட்டிக்காட்ட முடியுமே தவிர, எந்தச் சம்பவத்திற்கும் இந்த ஆட்சியும், இந்த முதலமைச்சரும் துளியாவது காரணமாக இருந்தார்கள் என்று சுட்டிக்காட்ட எந்தக் கட்சியினாலும் முடியாது. அந்த அளவுக்கு எங்களது உத்தமத் தலைவர் புரட்சித் தலைவர் இன்றைக்கு இந்தத் துறையை நேரடியாக நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரை விமர்சனம் செய்ய வேண்டுமென்றால், இத்தகைய குற்றச்சாட்டுக்கு ஆளாகாத யாராவது விமர்சனம் செய்யலாமே தவிர, வஞ்சனை, சூது, வாது, கள்ளங்கபடம் ஆகிய அத்தனைக்கும்உரித்தானவர்கள் எங்களுடைய முதலமைச்சரை விமர்சனம் செய்வதற்கு அருகதை அற்றவர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, அவருடைய தலைமையிலே இருக்கிற இந்தத் துறை இன்னும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, இந்தத் துறைக்கு அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்பும் தேவை என்று கூறி, இந்த மானியத்தை வரவேற்று முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடமை உணர்வோடு காரியம் ஆற்றிக் கொண்டிருக்கிற ஒரு இலாகாவாக, சட்டத்தைப் பாதுகாத்து பராமரித்து அமுலாக்குகின்ற ஒரு பொறுப்பிலே இருக்கிற ஒரு இலாகாவாக, தீயவர்களிடம் கடுமையாகவும் தூயவர்களிடம் கனிவாகவும் நடந்துகொள்கிற ஒரு இலாகாவாக, முதலமைச்சருடைய பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிற அந்தத் துறையினைப் பற்றி பேசுகின்ற வாய்ப்பினைத் தந்ததற்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலமாகப் பேரும் புகழும் பெற்றுவந்த ஒரு இலாகா, ஒரு துறை, இந்தப் போலீஸ் துறை என்று சொல்கின்ற காவல் துறை. காவலர்கள் மக்களுடைய நண்பர்கள் என்ற ஒரு திரைப்படம் கூட எடுக்கப்பட்டது இங்கே இருக்கிற பலருக்கு நினைவிலிருக்கக்கூடும். அப்படிப்பட்ட இலாகாவில் நிறைகளையும் குறைகளையும் சுட்டிக்காட்டுவது, குறைகளைச் சுட்டிக்காட்டுவதன் நோக்கம், அது நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது. அந்த நோக்கத்தோடு சுட்டிக் காட்டுவது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே இங்கே வீற்றிருக்கின்ற என்னுடைய கடமையாக அமையும். மக்கள் மன



சாட்சிப்படியே நடந்து விட்டார்கள் என்றால் காவலர்களும் தேவையில்லை, கடுமையான சட்டங்களும் தேவையில்லை. ஆனால், எந்த நாட்டிலேயும் எல்லோரும் தாமாகவே ஒழுங்கு, கட்டுப்பாட்டிற்குள் இருப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது என்ற காரணத்தாலேதான் காவலர்கள் தேவைப்படுகிறார்கள் ; சட்டங்களை மீறுகின்றவர்கள் கண்டிக்கப்பட வேண்டியதோடு மட்டுமல்லாமல், தண்டிக்கப்பட வேண்டுமென்ற நிலையும் ஏற்படுகிறது.

இங்கே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 4 கோடியே 80 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழகத்தில், புறக் காவல் நிலையங்களைக் கணக்கில் எடுக்கவில்லையென்றால், 965 காவல் நிலையங்கள் மட்டுமே இருக்கின்றன. 965 காவல் நிலையங்கள் மட்டும் இருக்கின்றன என்றால், ஏறத்தாழ 50,000 பேர்களுக்கு ஒரு காவல் நிலையம் இருக்கிறது. இன்னும் அதை வேறு வகையில் சொல்லப் போனால், தமிழகத்தில் இருக்கிற நகரசபைகள் 109, நகர பஞ்சாயத்து 607. நகரீயம் 13 ; ஒன்றியம் 378.

(முற்பகல் 11–40)

கார்ப்பரேஷன்களைச் சேர்க்காமல் இவைகளை மட்டும் சேர்த்தால் 1107. கார்ப்பரேஷன்களையும் சேர்த்தால் 1110 வருகிறது. ஆக ஒரு நிர்வாகத்திற்கு உட்பட்ட பெரிய அளவுக்கு மக்கள் தொகையைக் கொண்ட இந்த ஒவ்வொன்றுக்கும் ஒரு போலீஸ் நிலையம் என்ற அளவுக்குக் கூட இல்லை என்பதை இந்த இலாகாவில் இருக்கிறவர்கள் மனதிலே பதிய வைக்கவேண்டுமென்பது என்னுடைய நோக்கம். ஆயிரம் மக்களுக்கு ஒரு போலீஸ் என்பது இன்றைய சூழ்நிலையிலே, அதுவும் இப்போது குற்றம் இழைக்கிற வாய்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, கவர்ச்சிகரமான திரைப்படங்கள் வந்தது மட்டுமின்றி உள்ளே களவாடுவது எப்படி, கொள்ளையடிப்பது எப்படி என்று காட்டுகின்ற படங்களை எல்லாம் விநியோகிக்க உரிமை கொடுத்து, கள்ளம் இல்லாத உள்ளங்களிலே அதைப் பதியச் செய்கின்ற அளவுக்கு பெரிய அளவுக்கு வளர்ந்து அத்தகைய தீமைகளைச் செய்ய தூண்டுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மதுக்கடைகள் திறக்கப்பட்டு குற்றங்கள் அதிகமாக இருக்கிற நேரத்தில் ஆயிரம் பேர்களுக்கு ஒரு காவலர் என்பது போதுமா என்பதை அரசு சிந்திக்க வேண்டும் என்பதற்காக நான் இதனைக் குறிப்பிடுகிறேன்.

அது மட்டுமல்ல. ஏறத்தாழ 700 உதவி ஆய்வாளர் பதவிகள் இன்று நிரப்பப்படாமல் இருப்பதாகத் தகவல் சொல்கிறார்கள். இதிலே நான் ஏறத்தாழ என்று சொல்வதற்குக் காரணம் சரியான புள்ளிவிவரங்கள் இவ்வளவு இருக்கிறது என்று குறிப்பில் இல்லை என்பதற்காகத்தான்.

அப்படி என்றால் இவர்கள் மேற்பார்வையிடுகின்ற, பொறுப்பு வகிக்கின்ற காவல் நிலையங்களை இப்போது கண்காணித்து, பாதுகாப்பு அளிப்பது யார் ? காவல் நிலையத்திலே இருக்கிற ஹெட் கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகின்ற அந்தத் தலைமை காவலரா ? அல்லது பக்கத்து போலீஸ் நிலையத்தில் பொறுப்பிலே இருக்கிற ஆய்வாளர் அடுத்த போலீஸ் நிலையத்தின் பொறுப்பையும் ஏற்று செய்கிறாரா ? அப்படிச் செய்து கொண்டிருந்தால் ஏற்கெனவே நமக்கு காவலர்கள் போதாது. காவலர் போதாது என்று சொல்வதற்கு காரணம் இங்கே நம்முடைய அன்புக்குரிய நஞ்சப்பா அவர்கள் கொடுத்திருக்கிற விசாரணைக் கமிஷனுடைய தீர்ப்பு இருக்கிறது. டாக்டர் நடிகர் ராஜ்குமார் கலந்து கொண்ட திரைப்பட படப்பிடிப்பு கலவரத்தை ஒட்டி, அதிலே எழுந்திருக்கிற பிரச்சினையை விசாரிக்க தமிழக அரசு குழு போட்டு, ஒரு நபர் குழுவாக அது இருந்து, அந்த நீதிபதி கொடுத்திருக்கிற விசாரணைக் கமிஷன் தீர்ப்பு இருக்கிறது.

அவர் பாதுகாப்பு கேட்டபோது பாதுகாப்புக்கு அனுப்ப போதுமான ஆள் இல்லை என்று சொல்லப்பட்டு, பாதுகாவல் கொடுக்கப்படவில்லை. பாதுகாப்பு கொடுக்க முடியாது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு தருவோம் என்று சொல்லிவிட்டு தராமல் இருந்துவிட வில்லை. பாதுகாப்புக்கு ஆள் அனுப்புவோம் என்று சொல்லிவிட்டு அனுப்பாமல் இருந்துவிடவில்லை. எனவே, பாதுகாப்பு தருகிற சூழ்நிலை இல்லை, ஆள் இல்லை, உங்களுக்கு இன்று பாதுகாப்பு தர முடியாது என்று சொல்லியதை மீறி அவர் படப்பிடிப்பை நடத்தினார். ஆகையால் தமிழக அரசு அலுவலர்கள் மீது எந்த விதமான குற்றமும் இல்லை என்று விசாரணைக் குழு முடிவு வந்திருக்கிறது. ஆக, தமிழக அரசு அலுவலர்கள் எந்த வகையிலும் தவறு செய்யவில்லை என்று கூறி தீர்ப்பு வந்தபோதிலும் அவர் என்ன காரணத்தை அதற்குச் சொல்லியிருக்கிறார் என்றால் அங்கே அனுப்புவதற்கு ஆள் இல்லை என்பது.

அடுத்தாற்போல் நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்களில் குண்டும், குழியும், மேடும் பள்ளமும், உயர்வும் தாழ்வுமாக இருந்து கொண்டிருக்கிற பகுதிகளிலே ஆய்வாளர் ஒவ்வொருவருக்கும் வாகனம் கொடுக்க வேண்டுமென்று அந்த விசாரணைக் குழு தீர்ப்பு சொல்லியிருக்கிறது. நான் இதைக் கூறுவதற்குக் காரணம் நமக்கு காவலர்கள் போதுமான அளவுக்கு இல்லாது இருக்கும்போது நமது அமைச்சர் பெருமக்கள் போகிறார்கள், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதைப்போல வாரியங்கள் ஏராளமாக இருக்கிற காரணத்தாலே அந்த வாரியத் தலைவர்களுக்கு —அவர்கள் எல்லாம் இன்றைக்கு அமைச்சர்கள் அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்—பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பல பல விழாக்கள் நடந்து கொண்டிருக்கும். அங்கே பாதுகாப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது.





இத்தனைக்கும் பிறகு மிச்சம் இருக்கிறவர்கள், 50,000 போலீஸ்காரர்களிலே ஆயிரத்திற்கு ஒருவர் என்று இருப்பதிலே இவ்வளவு பேர் போய்விட்ட பிறகு மக்களுடைய பாதுகாப்பை எல்லாம் கவனித்து, கூப்பிட்ட குரலுக்கு ஓடுவதற்கு போதுமான ஆள் இல்லை என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

700 உதவி ஆய்வாளர்களுக்கு இனிமேல்தான் பயிற்சி கொடுக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஓராண்டு காலம் பயிற்சி, அகடமிக் பயிற்சி கொடுக்க வேண்டும். அதன் பிறகு 'பீல்டு ட்ரெயினிங்' களப் பயிற்சி அரை ஆண்டு காலத்திற்கு கொடுக்கப்பட வேண்டும். அப்படி ஒன்றரை ஆண்டு காலம் செலவிட்டால்தான் இவர்கள் எல்லாம் அவர்களுடைய பொறுப்பிலே வருவார்கள். ஆக, அவர்கள் எல்லாம் பொறுப்பிலே வரவேண்டுமென்றால் இன்னும் இரண்டு வருட காலம் தேவைப்படுகிறது. நான் இதை எல்லாம் சொல்லுகின்றபோது இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறவர்கள் மட்டுமல்லாமல் வெளியிலே கேட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதை செம்மைப் படுத்துவார்கள் என்ற நம்பிக்கையிலேதான் சொல்லுகிறேன்.

போலீஸ் பயிற்சி நிலையம் என்று கே. கே. நகரில் இருப்பது கடந்த சில ஆண்டுகளாகச் செயல்பட வில்லை. அங்கே பயிற்சிக்கு யாரும் போகவில்லை. ஆனால் அங்கே அதற்காக அமைக்கப்பட்டிருப்பவர்கள் அங்கே நீட்டிக்கப்பட்டு தொடர்ந்து இருந்து கொண்டு ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையினை மாற்ற வேண்டும்.

முன்பெல்லாம் என்ன செய்தார்கள் என்று சொன்னால் இந்தத் தலைமை அதிகாரி பொறுப்பிலே இருப்பவர்கள் ஆயுத போலீஸ் படையைப் பார்வையிட மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமையில் போனால் அங்கே போலீஸ் வேலைக்காகக் காத்திருப்பவர்களைப் பார்த்து, திடகாத்திரமானவர்களைப் பார்த்து, விருப்பம் உள்ளவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து 9 மாத கால பயிற்சி கொடுக்கப்பட்டு அந்த வகையில் அவ்வப்போது போலீஸ்காரர்களை சேர்த்துக் கொண்டே இருந்தார்கள். அது ஒரு கன்டினுயஸ் ,ப்ராசஸ் ஆக இருந்தது. அது ஒரு தொடர் நிலையாக இருந்தது. அப்படி ஒரு பயிற்சியாக அவர்களுக்கும் கொடுக்கப்பட்டு அவர்களிடத்திலேயிருந்து எடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. அது இப்போது இல்லை. எனவே அவர்களையும் நீங்கள் பார்க்கவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் தலைமைக் காவலர்களிலிருந்து சப் இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரலாம். அவர்கள் ப்ரமோஷனில் வரலாம் என்று சொன்னால் 30 விழுக்காடு மட்டும்தான் அப்படி வருவது என்றும் மற்ற 70 விழுக்காடு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அதாவது டைரக்ட்

ரெக்ரூட்மென்டாக இருக்க வேண்டும் என்றும் சொல்ல விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் பணி மூப்பு என்பதும் ஒரு தகுதியாக இருக்கலாமே தவிர பணி மூப்பே தகுதியாக, அது ஒன்றே தகுதியாக இருந்து விடக் கூடாது. அப்படி அது ஒன்றே தகுதியாக இருந்தால் திறமையும், உழைப்பும் நிச்சயமாக மதிக்கப்படவில்லை என்ற எண்ணம் வரும். ஆகவே 30 விழுக்காடு மட்டுமே ப்ரமோஷனில் வருவதும் மற்றவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதும் போலீஸ் இலாக்காவிற்கு மிக நல்லது என்று நான் கருதுகிறேன்.

சில நேரங்களில் மாற்றத்தைச் செய்கின்றபோது அது ஏற்றத்தைத் தருமா என்று பார்த்துத்தான் அந்த மாற்றத்தைச் செய்ய வேண்டும். சில நேரங்களில் பலருடைய கோரிக்கைகளை ஏற்றுத்தான் அரசாங்கம் கனிவுடன் செயல்படுகின்றது என்பது உண்மை. ஆனால் ஒரு பக்கம் நன்மை செய்கின்றபோது இன்னொரு பக்கம் தீமை வந்து விடக்கூடாது என்ற கவலையோடு காரியங்களைச் செய்ய வேண்டும்.

ஆர்டர்லி என்று சொல்லப்படுகின்றவர்கள் போலீஸ் படையிலே சேர்ந்து பயிற்சி பெற்றவர்கள், அதற்குரிய திறன் பெற்றவர்கள் பெரிய போலீஸ் அதிகாரிகளுக்குத் துணையாக இருந்தார்கள். அப்படித் துணையாக இருக்கக் கூடாது என்று சிலர் வாதிட்டார்கள். அப்படி வாதிட்டதற்குக் காரணம் ஒரு ஏவும் பணிபுரியும் அசிஸ்டென்டாக இன்னும் சொல்லப் போனால் ஏவல் பணியாளர்கள் போல் இருக்கிறார்கள் அவர்கள் என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது இன்னின்ன பணிகளைத்தான் அவர்கள் செய்ய வேண்டும், இன்னின்ன பணிகளை அவர்கள் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கலாம். ஆனால் இப்போது அதற்குப் பதிலாகக் காக்கிச் சட்டையே போடாத சாதாரண பணியாளர்களை மற்ற அலுவலகங்களில் இருப்பவர்கள் போன்ற பணியாளர்களை அங்கே நியமிப்பது என்பது போலீஸ் இலாக்காவிற்கு இருக்கின்ற மிடுக்கிற்கு உதவி செய்வதாக இல்லை. மிடுக்கு என்று சொல்வதற்குக் காரணம் போலீஸ் இலாக்காவிற்கு அந்த மிடுக்கு இருக்க வேண்டும்என்று நான் விரும்புகிறேன். ஆகவே அந்தக் காக்கிச் சட்டை போட்ட அவர்கள் துணையாக இருக்கும்போது எப்போதாவது தேவைப்பட்டால் அவர்கள் அந்தப் போலீஸ் பயிற்சி பெற்றவர்களாக இருக்கும்போது அவர்கள் அந்த போலீஸ் பணியைச் செய்ய முடியும். ஆனால் சாதாரண மனிதன் அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தால்—அவர்கள் அந்த ஏவல் வேலையைத்தான் செய்வார்களே தவிர வேறு எந்த வேலையையும் அவர்களால் பார்க்க முடியாது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இராணுவத்தில் ஆர்டர்லி என்பதை ஒழிக்கவில்லை. இராணுவத்திலே இன்னும் அந்த முறை இருந்து கொண்டு இருக்கின்றது.



இராணுவத்தில் இருக்கின்ற சிறப்பான சில அம்சங்களை போலீஸ் இலாக்கா பின்பற்ற வேண்டும் என்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். இராணுவத்தில் இருப்பவர்கள் அங்கே யங் ஆர்மி பெட்டாலியன் என்று ஒன்று வைத்திருக்கிறார்கள் அப்படி யங் ஆர்மி பெட்டாலியன் என்று சொன்னால் இராணுவத்தில் வேலை செய்பவர்களின் குழந்தைகளுக்கு, இளம் சிறார்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். அவ்வாறு பயிற்சி கொடுப்பதன் மூலம் நல்ல இராணுவ வீரர்களாக அவர்கள் உருவாகி வருகின்ற அதே நேரத்தில் அவர்களுக்குப் படிப்பும் உண்டு; மற்ற மாணவர்களைப் போல படிப்பும், பரிட்சையும் உண்டு. ஆனால் அது ஒரு தனி பிரிவாக இருந்து அவர்களுடைய குழந்தைகளுக்கு அந்தப் பயிற்சி கொடுப்பதன் காரணத்தால் அவர்களிடத்திலே இருந்து நிறைய ஆட்களை இராணுவத்திற்கு எடுக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதுபோல் யங் போலீஸ் பெட்டாலியன் ஒன்றை உருவாக்கிட தமிழகத்தில் இருக்கின்ற நமது அரசு முயல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இராணுவம் ஒரே இடத்தில் குவித்து வைக்கப் பட்டிருப்பதால், ஒரே இடத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருப்பதால் அங்கே அப்படிப்பட்ட பயிற்சியைக் கொடுக்க எளிதாகஇருக்கின்றதுஎன்று ஒரே வரியில் உதறித் தள்ளாமல் எங்கெங்கே அதிகமாகக் காவலர்கள் இருக்கிறார்களோ எந்தெந்த இடத்திலே அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில் அந்தப் போலீஸ்காரர்களுடைய பிள்ளைகளுக்கு யங் போலீஸ் பெட்டாலியன் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பயிற்சியை நடத்தினால் அவர்களுடைய குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு இருக்கின்றது என்பது மட்டுமல்ல அந்தச் சூழ்நிலையில் அவர்கள் வளர்ந்து வருகின்ற நேரத்தில் நல்ல போலீஸ்காரர்களாக இருப்பார்கள்.

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது தமிழகத்தில் கூட ஒன்றிரண்டு கல்லூரிகளில் இராணுவப் பயிற்சி கொடுக்கின்ற ஒரு பட்டம் இருக்கின்றது. அதை பி. எஸ். ஸி. டிஃபன்ஸ் என்று சொல்லுகிறார்கள். பி. எஸ். ஸி. டிஃபன்ஸ் என்று சொல்லி மூன்றாண்டுக்காலப் பட்டப்படிப்பு கொடுத்து பட்டம் கொடுக்கின்ற நிலை இருக்கின்றது.போன ஆண்டு வரையில் அது பி. ஏ. ஆக இருந்தது.இந்த ஆண்டிலேயிருந்து அதனை பி. எஸ். ஸி. பி. டி. யாகக் கொடுக்கிறார்கள். அதைப்போலவே நம்முடைய போலீசுக்குஅப்படி ஒரு பயிற்சி கொடுக்கின்ற பிரிவை பட்டப்படிப்பிலே சேர்த்து பி. எஸ். சி. பி. என்ற பட்டம் கொடுக்கின்ற வகுப்பினை தொடங்குவதில் தவறு இல்லை என்று சொல்லி அந்த முயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் போலீஸ் இலாக்காவிற்கு நல்ல ஆட்கள் கிடைப்பார்கள் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1985 ஜூலை 9

(முற்பகல் 11-50)

அதேபோல என்.சி. சி. யிலே நேவி விங் என்று இருக்கிறது. நாவல் விங் என்று பெயர். இன்பெஃன்டரி விங் இருக்கிறது. ஏர்போர்ஸ்ஸுக்கு விங் இருக்கிறது. அதாவது என். சி. சி. யிலே கடற்படைக்கு ஒரு பிரிவு வைத்திருக்கிறார்கள். ஆகாயப்படைக்கு ஒரு பிரிவு வைத்திருக்கிறார்கள். தரைப் படைக்கும் ஒரு பிரிவினை வைத்திருக்கிறார்கள். அதேபோல போலீஸ் படைக்கும் ஒன்றை வைக்கலாமே. அப்படி போலீஸ் படைக்கு ஒன்றை வைப்பதன் மூலம் அதிலிருந்து அவர்கள் போலீஸ் காரர்களாக வரவேண்டும் என்று விரும்பினால் அவர்கள் அந்தப் பதவியிலே வருவதற்கு உதவியாகவும் இருக்கும். நமக்கும் நல்ல காவலர்கள், ஒழுக்கம் உடைய, சிறப்புடைய நல்ல கட்டுமஸ்தான காவலர்கள் கிடைப்பதற்கு ஒருவாய்ப்பாக இருக்கும் என்பதினால் சொல்கிறேன்.

அடுத்து ஆயுத போலீஸ் படையிலே இருக்கின்றவர்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு பிறகாவது நல்ல வகையிலே பதவி உயர்வு பெற்று அங்கேயிருந்து சட்டம் ஒழுங்கை பராமரிக்கின்ற எப்போதும் போல் இருந்துக் கொண்டிருக்கின்ற போலீஸ் இலாக்காவிற்கு வரவேண்டும் என்று ஒரு மரபு மீறப்பட்டு 18 வருஷம் 20 வருஷம் ஆனாலும் கூட அவர்கள் ஆயுத போலீஸ் ஆகவே இருந்துக் கொண்டிருக்கிறார்கள், என்ற குறையை அவர்கள் ஆதங்கத்தோடு எங்களிடம் வந்து சொல்லுகிறார்கள். இங்கே இருக்கிற அதிகாரிகளும், அரசாங்கமும் அதை அணுகிப் பார்த்து செய்ய வேண்டியவற்றை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, மேலை நாடுகளிலே நோயாளிகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்குக் கூட போலீஸ் காரர்கள் துணையிருக்கிறார்கள். முன்னாலும் பின்னாலும் போலீஸ் வேன் போய்க்கொண்டிருக்கிறது. அந்தப் போலீஸ் வேன்கள் சங்கு ஒலியை எழுப்பிக்கொண்டிருக்கிறது. எப்படி ஒரு தீ அணைப்புப் படை புறப்பட்டுப் போகிறதோ அப்படியே நோயாளிகளையும் கூட கொண்டு போகிறார்கள். விரைந்து கொண்டு போவதற்காக கொண்டு போகிறார்கள். இருதய நோயாளி போன்றவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும் போது காலதாமதம் ஆகிவிடக்கூடாது என்பதற்காக, ஒரு நோயாளிக்காக ஆம்புலன்ஸை கூப்பிடுகிற நேரத்திலே போலீசும் அங்கே போய்ச் சேர்ந்து விடுகிறது. முன்னாலே போலீஸ் வேன் பிறகு ஆம்புலன்ஸ் செல்ல, அதற்குப் பின்னாலும் போலீஸ் வேன் இருக்கிறது. அந்தப் போலீஸ்வேன்களில் சங்கு ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆட்கள் எல்லாம் ஒதுங்கி வழிவிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். ஒருவனுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு அப்படி வழி விட்டு ஒதுங்கிக்



கொள்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்த்து நம்முடைய போலீஸ் மற்றவர்களுக்கு உதவுகின்ற வகையிலே விரைந்து செயல்படுகின்ற வகையிலே இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று சிந்தித்துப்பார்த்துச் செயல்படவேண்டும்.

அதே நேரத்தில் போலீஸ்காரர்களுக்கே போதுமான மருத்துவமனைகள் இல்லை, எல்லா வசதிகளும் கொண்டு போலீஸ்காரர்களுக்கு என்று தனி மருத்துவமனைகளை அரசாங்கம் அளித்திருக்கிறது. ஆனால் அது போதுமானதாக இல்லை. இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல வண்டி வாகனங்களையும் அதிகப்படுத்த வேண்டும். வண்டி வாகனங்களை அதிகப்படுத்தி ரோந்து சுற்றுவதற்கு என்றே ஒரு தனிப் பிரிவை வைக்க வேண்டும். அது ரோந்து சுற்றிக் கொண்டேயிருக்கவேண்டும். எங்கு பார்த்தாலும் திடீர் என்று போலீஸ் வரக்கூடும் என்ற ஒரு எண்ணம் வரவேண்டும். அவர்கள் சந்து வழிகளிலேதான் நிற்பார்கள். 4 சாலைகள் கூடுகின்ற இடத்திலே தான் நிற்பார். அந்த வரிகளை விதிக்கின்ற இடத்திலேதான் நிற்பார் அந்தத் இடத்திலேதான் அவர்கள் காரியங்களை ஆற்றுவார்கள் என்ற நினைவு யாருக்கும் இருக்கக்கூடாது. தமிழகத்திலே எந்த மூலை முடுக்கு ஆனாலும் எந்த நேரத்திலும் போலீஸ்காரர்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று சொன்னால், போலீஸ் இலாக்காவிற்கும் ஆட்கள் அதிகம் வேண்டும். விரைந்து ஓடுகின்ற வாகனங்களும், நல்ல வண்டிகளையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கு உரிய நவீன விஞ்ஞானக் கருவிகளையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

அதேபோல சிறுவயது குற்றவாளிகள், அவர்களை மனோ தத்துவ ரீதியிலே ஆராய்ந்து அவர்கள் ஏன் அந்தக் குற்றங்களை செய்கிறார்கள் என்று பார்ப்பதற்கு என்றே உரிய ஆய்வோடு கூடிய தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புவது, அதுவும் மிகுந்த அக்கறையோடு சொல்கிறேன். நீங்கள் கேட்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எந்தத் துறையாக இருந்தாலும் அந்த துறையிலே ஒரே ஒரு தலைவர் தான் இருக்க வேண்டும். அது போலீஸ் துறையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தத் துறையாக இருந்தாலும் சரிதான். அதற்கு என்று ஒரே ஒரு தலைவர்தான் வேண்டும். முதலிலே ஒரே ஒரு ஐ. ஜி. தான் இருந்துக் கொண்டிருந்தார்கள்.

பழைய நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது தேவசகாயம் போன்றவர் அருள் போன்றவர் ஒரே ஐ. ஜி. யாக இருந்துக் கொண்டு இந்த தமிழகம் முழுவதையும் செம்மையாகவும் சிறப்பாகவும், மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படக்கூடிய அளவுக்கும் கூட நடத்தி வந்ததை நாம் கண்டிருக்கிறோம். அப்படி தகுதி வாய்ந்த பரம்பரையில் வந்த மிகச்சிறந்த அதிகாரிகள் இப்போதும் இருந்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம்மிலும் கூட இப்போதும், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இவர்கள் தமிழ்நாட்டு அதிகாரிகள் என்று பெருமைபடத் தக்க வகையில் சொல்லுகின்ற அளவுக்கு திறமை படைத்த அதிகாரிகள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதிகாரிகளில் பலர் திறமையோடு இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிற நான், அந்த அதிகாரிகளுக்கு எல்லாம் ஒரே பெயர்களோடு கூடிய பல பதவிகளை கொடுக்க வேண்டும் என்பதில் மட்டும் ஒப்புக் கொள்ள முடியவில்லை. 4 ஐ.ஜி.க்களைப் போட்டிருக்கிறோம். எதற்காக ? அதற்குப் பிறகு டி.ஜி.பி. என்று பதவியை போட்டோம். அதிலாவது ஒன்றோடு நிறுத்தியிருக்கக்கூடாதா ? அதிலேயும் இரண்டை நாம் போட்டிருக்கிறோம். அந்த டி.ஜி.பி. இந்தப் பகுதிக்கு , இந்த டி.ஜி.பி. அந்தப் பகுதிக்கு என்று இருப்பபது சரியானது அல்ல. எல்லாவற்றையும் ஒருமைப் படுத்தி ஒரு கோபுர அளவில் கொண்டு போகிறோம் என்றால், அதாவது கீழே சாதாரணக் காவலர்கள் இருப்பார்களேயானால், மேலே போக போக, அது உச்சிக்குப் போகிற நேரத்தில் கோபுரத்திற்கு ஒரு முனைதான் இருக்கலாமே தவிர, இரண்டு முனைகள் இருந்தால் அது கோபுரமாக இருப்பதற்கு வாய்ப்பே இல்லையே. தகுதி வாய்ந்தவர்களை ஐ.ஜி. ரேங்கிலே வைப்பதைக் கூட நான் தப்பாக கருதவில்லை. அந்தப் பதவியினுடைய அந்தஸ்திலே அவர்களை வைப்பதிலே கூட தப்பு என்று சொல்லவில்லை. ஆனால் அந்தப் பதவியிலேயே வைத்து விடாதீர்கள் என்பது தான் என் வேண்டுகோள்.

இப்போது நம்முடைய சீப் செக்ரட்டரியை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய அந்தஸ்த்திலே அதிகாரிகள் 2, 3 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் சீப் செக்ரட்டரி என்று ஒருவர் தான் இருக்கிறார்கள். அதைப் போலவே நம்முடைய போலீஸ் இலாகாவிலேயும் ஒரு தலைவர்தான் என்று சொல்லுகிற சூழ்நிலையை உருவாக்குகிறபோது தான் அது ஒன்றுபட்டு வரும் நிலையிலே சிறப்பான முறையிலே இயங்கும் என்ற காரணத்திற்காக உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் எல்லாம் நீங்கள் சிந்தித்து செயல்பட வேண்டும் என்று.

இன்றைக்கு இருக்கிற நிலையில் போக்குவரத்தைப் பற்றி குறிப்பிட வேண்டுமென்றால் இந்த ஆண்டு விபத்தில்லாத ஆண்டு என்று வைத்திருக்கிறார்கள். விபத்தில்லாத இந்த ஆண்டில் வருகின்ற வழியில் ஆயிரம் விளக்குப் பகுதியில் பார்ப்போமேயானால் இந்த ஆறு மாத காலத்திற்குள் 183 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்ற தகவல் தெரிய வருகிறது. சென்ற ஆண்டு 383 பேர்கள் விபத்துகளில் இறந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு ஆறு மாத காலத்திற்குள் 183 பேர்கள் இறந்திருக்கிறார்கள். விபத்தில்லாமல் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிற இந்த ஆண்டிலே விபத்துக்கள் அதிகமாகி வருகின்றன. இன்றைக்கு பலர் குடித்து விட்டு வாகனங்களை ஓட்டுகிறார்கள்



நான் கூறுவதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் போக்குவரத்துத் துறை முழுக்க முழுக்கசெம்மைப்படுத்த வேண்டிய துறை. அந்தப் போக்குவரத்துத் துறையிலே என்னென்ன விதிமுறைகளை வைத்திருக்கிறார்களோ, அந்த விதிமுறைகளை எல்லாம் கண்காணிக்கிற அளவிற்கு கூட போலீஸ்காரர்கள் இல்லை. அந்த அளவிற்குக் கூட அவர்களிடம் ஆட்கள் இல்லை. ஆட்கள் இல்லாத காரணத்தால் ஒவ்வொன்றாக நாம் பார்க்கலாம், எவை எவை மீறப்படுகிறதென்று.

முதலில் எடுத்துக் கொண்டால், நடுச் சாலையில் யாரும் பஸ்களை நிறுத்தக் கூடாது. அப்படியென்று விதிமுறையில் இருக்கிறது. ஆனால் நடுச் சாலையில் தான் பஸ்கள் நிற்கும். யாரும் ஏனென்று கேட்பதில்லை. குடித்துவிட்டு யாரும் ஓட்டக் கூடாது. பலர் அதைத் தான் செய்கிறார்கள். நடக்கும், தடுப்பதற்கு வழி இல்லை. சீருடை இல்லாமல் யாரும் பொது வண்டிகளை ஓட்டக்கூடாது. ஆனால் ஓட்டுவார்கள். கேட்பதற்கு வழி இல்லை. அதேபோல ராங் சைடிலே போய் ஓவர் டேக் பண்ணக் கூடாது. பண்ணுவார்கள், யாரும் அதைப் பொருட்படுத்துவதில்லை. அதேபோல இரவு நேரத்திலே விளக்கை ஒளியைக் குறைத்து, அதிகப்படுத்தி, ஒளியைக் குறைத்து, எதிரில் வருகிறவர்களுக்கு வழியை விட்டு, அதற்குப் பிறகு இவன் வழியிலே ஒளியைப் பெருக்கிக் கொண்டு போக வேண்டும். யாராவது அப்படிச் செய்வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?

அடுத்து, விளக்கு என்றால் பாதி பகுதியை கறுப்பு அடித்து வைத்திருக்க வேண்டுமே, யாராவது வைத்திருக்கிறார்களா ? நடுவில் பொட்டு வைப்பதைப் போல கறுப்புப் புள்ளி வைத்திருக்க வேண்டுமே, யாராவது வைத்திருக்கிறார்களா ? இவைகள் எல்லாம் போலீஸ் இலாக்காவிற்கு கறுப்புப் புள்ளியாக வந்து விடக்கூடாது என்பதற்காக எடுத்துச் சொல்கிற ஒன்று. குறை சொல்வதற்காக அல்ல. அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாத காரணத்தால் எத்தனை எத்தனை விபத்துகள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது ? அதைப் போல சில வண்டிகள் புகைவிட்டன என்று சொன்னால் குண்டு விழுந்ததைப் போல புகை விடுகின்றன. அந்தப் புகை வந்ததென்றால் சாலையில் வேறு யாரும் வண்டியே ஓட்ட முடியாது. அந்த அளவிற்கு புகை வருகிறது. நேற்றைக்கு கூட தொலைக் காட்சியிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். பம்பாயில் ஒரு கருவியை வைத்துக் கொண்டு, மானோ ஆக்சைட் மூன்று விழுக்காட்டிற்கு மேலே வராமல் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு ஒரு கருவியை வைத்து சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மானோ ஆக்சைட் மூன்று சதவீதத்திற்கு மேலே வரக்கூடாது என்று அங்கே சொல்லி வருகிற போது, நம்முடைய வண்டிகள் எல்லாம் புகையைக் கக்கிக் கொண்டு போவதைப் பார்த்தால், ஏதோ ராக்கெட் விடுவதை போல் ஒவ்வொரு பஸ்ஸும் ஓடிக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவைகளை எல்லாம் அவர்கள் தடுக்கவில்லை. காரணம் என்னவென்றும் தெரியவில்லை.

[திரு. குமரி அனந்தன்] [1985 ஜுலை 9

இன்னொன்று, அந்த ட்ராபிக் ரூல்சை வாங்கிப் படித்தேன். அதிலே போட்டிருக்கிறார்கள், பாஷ்ஹாரன், ஏர் ஹாரன் அடிக்கக் கூடாது என்று. இப்படி பாஷ்ஹாரன், ஏர் ஹாரன் அடிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பது அரசாங்கம் சரி, அரசாங்கம் வைத்திருக்கிற வண்டிகளில் எத்தனை வண்டி களில் பாஷ்ஹாரன் இல்லாமல் இருக்கின்றன? கார்ப்பரேஷன் வைத்திருக்கிற் வண்டிகளில் எத்தனை வண்டிகளில். ஏர் ஹாரன் இல்லாமல் இருக்கின்றன ? சில கார் ஓட்டுநர்கள் ஸ்டியரிங்கில் கைவைத்தால்அழுத்தியது அழுத்தியது தான். அடுத்து, நிறுத்துகிற வரையில் கையை எடுப்பதே இல்லை. அது வரைக்கும் யாருடைய காது பாழ்படுகிறது ? உங்களுக்குத் தெரியும்.

நான் சில செய்திகளைச் சொல்லி எல்லாமே வெளி நாடுகளில் இருப்பதைப் போல இருக்க வேண்டுமென்று விரும்புகிறவன் அல்ல. இங்கே ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்றைக்கு 1985 ; 2000 ஆண்டுகள் வரையில் தொடர்ந்து இந்த நாய்ஸ் பொலுஷன் இருக்குமானால், இந்த ஒலி அலறல் தொடருமானால் , நமக்குப் பிறக்கிற குழந்தைகள் எல்லாம், பல குழந்தைகள், ஏன் இன்னும் சொல்ல வேண்டுமென்றால், 90 விழுக்காடு குழந்தைகள் செவிட்டுக் குழந்தைகளாகத் தான் பிறக்குமென்று அவர்கள் எச்சரிக்கை விடுத்தப் பின்னாலும்கூட, நாம் அதனை தடுத்து நிறுத்தவில்லை என்றால் என்ன பொருள்?

10 மணிக்கு மேலே ஜப்பானில் விமானம் பறக்கக் கூடாது. ஏனென்றால் குடிமக்களுக்கு காதிற்கு கேடிருக்கிறது. அதைப் போல நெடுஞ்சாலைகளில் அக்வாஸ்டிக் பானல்ஸ் என்று சொல் கிற, சத்தத்தைக் கட்டுப்படுத்தி, உள்ளே அமுக்கி வைத்துக் கொள்கிற, சத்தத்தை வெளியே விடாமல் வைத்துக் கொள்கிற பெரிய பெரிய சுவர்களை எழுப்பி இருக்கிறார்கள். நம்மால் அப்படியெல்லாம் செய்ய முடியுமென்று சுருதி நான் சொல்ல வில்லை. நீ இந்த ஹார்னை அடிக்காதே என்று சொல்ல வேண் டாமா ? இந்த ஹார்னை அடிக்காதே என்று சொல்வதற்குரிய காரணம் என்ன வென்றால், சாதாரணமாக ஐந்தடி தூரத்திலே நின்று மனிதன் பேசுவது கேட்கிறதென்றால், அது ஒலிக் குறிப்பின் அளவிலே 30 டெசிபிள் என்று சொல்லப்படுகிறது. ஒரு மனிதன் தாங்குவது 100 டெசிபிள்தானே தவிர, அதற்கு மேலே இல்லை. ஐந்தடி தூரத்திலே பேசுவது 30 டெசிபிள் என்றால், 100 டெசிபிளுக்கு எத்தனை அடி இருக்க வேண்டும் ? நாம் அடிக்கிற ஹார்ன் எத்தனை அடி கேட்கிறது ? அதேபோல நாம் காலை சட்டசபையில் இவைகளை பேசவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டே வருவோம். அப்போது பஸ்ஸில் டேப் ரெக்கார்டரைப் போடுவார்கள்.



1985 ஜுலை 9] (திரு. குமரி அனந்தன்)

(நண்பகல் 12-00)

எல்லோரும் கேட்கின்ற வகையிலே போடுகிறார்கள். வேண் டுபவர் காதுகளிலே மட்டும் கேட்கின்ற கருவிகளை மட்டும் அவர்கள் போட்டு கேட்டுக் கொள்ளட்டும். எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் கன்னியாகுமரியிலேயிருந்து தொடங்கி, திருத்தணி வரை கேட்டுக் கொண்டே போவதுதான் என்றால் என்ன பொருள் ? வந்து இருப்பவர்களை எல்லாம் நிர்ப்பந்தப், படுத்துவதற்கு நாம் யார் ? எனக்கு விருப்பம் இல்லை, ஐயா நான் சிந்திக்க வேண்டும், நான் தூங்கவேண்டும், அனுமதிக்க வேண்டுமா, வேண்டாமா ? இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் எல்லாம் நாம் மற்றவர்களுக்காகவோ. அல்லது யாருக்கோ போடுகிறார்கள் என்பதற்காகவோ, உடன்பட்டு விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

அதைப் போலவே, தீயணைப்புப் படையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. இந்த தீயணைப்புப் படைக்கு நல்லவாகனங்கள் வேண்டும். அதோடு இந்த காருக்கு எண்கள் கொடுக்கும் உரிமை இப்போது ஆர்.டி.ஓ. ஆபிசில் இருக்கிறது. இருக்கட்டும். ஆனால் உடனடியாக யார் யாருக்குஎன்னென்ன எண்கள் கொடுக்கப் பட்டது என்ற விவரங்களை போலீசாருக்குச்சொல்ல வேண்டும். ஏன் போலீஸ் இலாக்காவிற்குச் சொல்ல வேண்டும் என்றால, ஹிட் அன்ட் ரன் என்று வந்ததுஎன்றால் கண்டுபிடிக்க அவர் களுக்கு எளிதாக இருக்கும். அதைச் செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழகத்தைப் பொறுத்தவரையில் போலீஸ் இலாக்கா நன் றாக இருக்கிறது என்று சொன்னாலும், சில இடங்களில் அதிக மான வழக்குகளைப் போட்டு இருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்கிறேன். 1972 ஆம் ஆண்டினுடைய ரிப்போர்ட்டை கையிலே வைத்திருக்கிறேன். அதிலே பிரேக்-ஆப் டீட்டெயில்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இதனால் இவ்வளவு வழக்கு, இத னால் இவ்வளவு வழக்கு, இதனால் இவ்வளவு வழக்கு, இதிலே இத்தனை கண்டுபிடிக்கப்பட்டது, இதிலே இத்தனை இடங்களில் சொத்து, மீட்கப்பட்டது என்று, இப்படிப்பட்ட புள்ளிவிவரங் களை நீங்கள் தரவில்லை. நீங்கள் கொடுத்திருக்கின்ற முறை யைப் பார்த்தால், வழக்குகள் மிகவும் குறைவாக பதிவாகி இருப்பது போல் தெரிகிறது. ஆனால் இந்த விருதுநகரிலே மட்டும், எனக்குத் தெரிகிறது. 317, 331, 341, 307, 335, 336, 379, 147, 148, 149, 452, 436 மற்றும் 427 என்று எப்படி குறுக்கெழுத்துப் போட்டியிலே எண்களை மாற்றி மாற் றிப் போடுகிறாமோ, அதைப்போல் எண்ணிக்கையை போடு கிறார்கள். காமராஜருடைய உறவினர்ராஜாக்கனி என்றுசொல் கிற நாட்டாமை, அந்த ஊரிலே செல்வாக்கு பெற்ற மனிதர். அந்த மனிதர் மீது திருட்டுக் குற்றம். பொய் வழக்கு போடு

கிறார்கள். இப்படிப் போட்டதற்குப் பிறகும், புள்ளிவிவரம் குறைவாக இருக்கிறது என்று சொன்னால், கோளாறு எங்கேயோ இருக்கிறது. என்ன காரணத்திற்காக சில இடங்களில் மட்டும் அதிகமான வழக்குகள் வருகின்றன.

தேர்தல் முடிந்ததற்குப் பிறகு விருதுநகரிலே மட்டும் இத்தனை வழக்குகள் வருவானேன். தேர்தலிலே ஒருவர் தோற்று விட்டார் என்று சொல்வது எல்லோருக்குமே மகிழ்ச்சி அளிக்காத ஒன்றுதான். ஆனால் நான் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். அகில இந்தியாவிலே புகழ் பெற்று, புகழ்க் கொடி பறந்து கொண்டிருந்த, குமரியிலே காலை வைத்து, விந்தியத்திலே உடலை வைத்து, இமயத்திலே தலையை வைத்து, உலகெலாம் புகழ் பெற்ற காமராஜ் அவர்கள் தேர்தலிலே தோல்வியுற்ற நேரத்திலே கூட விருதுநகரிலே குழப்பங்கள் வரவில்லை. ஆனால் ஏதோ ஒன்று நடந்தது என்பதற்காக, அங்கே குழப்பங்கள், கலவரங்கள், பொய் வழக்குகள் வருமானால், நமது கனிவுமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதைப் பார்க்க வேண்டும் என்றும், அந்தப் பெரிய மனிதர் அதற்குக் காரணமாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக்கொண்டு, தமிழகத்தினுடைய போலீஸ் இலாக்கா உலகப் புகழ் பெறவாழ்த்தி, விடைபெறுகின்றேன்.

*திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக போலீசார் மிகத் திறமையாகச் செயல்பட்டு, ஸ்காட்லாந்து யார்ட் என்ற நிறுவனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து பேசுகின்ற அளவிற்கு புகழ் வாய்ந்தவர்களாக இருந்தது ஒரு காலம், அந்தக் காலத்திலே தமிழக போலீஸ் இலாக்காவிலே ஒரே ஒரு ஐ.ஜி. இருந்து, அவருடைய தலைமையிலே தான் செயல்பட்டுக்கொண்டு வந்தது. ஆனால் இப்போது 6 டி.ஜி.பி. க்கள் தலைமையிலும், 7, 8 ஐ.ஜி.க்கள் தலைமையிலேயும் அது செயல்பட்டாலும், தமிழகத்திலே குற்றங்கள் மிகவும் அதிகமான நிலையில், சட்டம் ஒழுங்கு இல்லாத நிலைமை இருந்து வருகிறது. மற்ற துறைகளுக்குக் கொடுப்பதைப்போல கொள்கைக் குறிப்பு என்று கொடுக்காமல், இந்தக் காவல் துறைக்கு மட்டும் ஆய்வுரை என்று கொடுத்திருக்கிறார்கள். எனவே இந்த அரசைப் பொறுத்தவரையிலும், காவல்துறையின் கொள்கை என்ன, என்பதைப் பற்றி எங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, அந்தக் காலத்திலேயிருந்து இந்தக் காலம் வரை, சூப்பர்வைசிங் கேட்டகரியில் உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கைத்தான் அதிகமாகிக் கொண்டு வருகிறதே தவிர, அதிகாரிகளின் கீழ் மட்டத்தில் இருந்து பணியாற்றுகிற அதிகாரிகளுடைய உத்தரவுகளை நிறைவேற்றுகின்ற போலீஸ் காவலர்



களின் எண்ணிக்கை 1935-ல் என்ன இருந்ததோ, அதேதான் இன்றைக்கும் இருக்கிறது. உயர் அதிகாரிகள் தேவைக்காகத்தான் இந்த ஆர்டர்லிகள், மற்றவர்கள் இருக்கிறார்களே தவிர, மக்களுக்குத் தேவையான காலத்திலே, மக்களுடைய விருப்பத்திற்கு அவர்கள் அழைக்கும்போது வருவதற்கு எந்த ஒரு ஸ்டேஷனிலும் போலீஸ் அவெயிலபிளாக இல்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

அடுத்து, இந்த அரசு 1979-க்குப் பிறகு சப்-இன்ஸ்பெக்டர்
களை நேரடியாக செலக்ஷன் செய்யவில்லை என்று அறிகிறேன்.
இது ஒரு தவறான செயலாகும். வருடா வருடம் சப்-இன்ஸ்
பெக்டர்கள் டைரக்ட் ரெக்ருட்மென்ட் என்ற விதத்திலே
எடுக்கவேண்டும் என்று இருக்கும்போது, கடந்த 6 ஆண்டுக்
காலமாக எடுக்கவில்லை. அவுட் ஆப் சீனியாரிட்டி என்ற
முறையிலே வயதானவர்கள், ஆன் தி வெர்ஜ் ஆப் ரிடையர்
மென்ட் என்று இருப்பவர்கள்தான் இன்று பல பகுதிகளிலே,
உள்ள போலீஸ் ஸ்டேஷன்களிலே சப்-இன்ஸ்பெக்டர்களாக இருக்
கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக் கொண்
டால், டைரக்ட் ரெக்ரூட்மென்ட் சப்-இன்ஸ்பெக்டர்கள்,
3 பேர்கள் அல்லது 4 பேர்கள்தான் இருக்கிறார்கள். மற்ற
வர்கள் எல்லாம், 50, 52 வயதானவர்களாக, 55 வயதான
வர்களாக இருக்கிறார்கள். அவர்களால் வழக்கை தெளிவாக
புரிந்து கொள்ள முடியவில்லை. வழக்குகளின் மீது நடவடிக்கை
எடுக்க தெரியவில்லை. இன்னும் அதிகமாக சொன்னால்
கோர்ட்டுகளில் இஷ்யூ செய்த Non-bailable Warrants
கூட அவர்களால் நிறைவேற்ற செய்ய முடியாத நிலையில்
பல போலீஸ் நிலையங்கள் இருக்கின்றன. ஏன் நம்முடைய
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பத்திரிகை ஆசிரியர்
பால்ராஜ் மீது கொடுத்துள்ள வாரண்டு கூட இன்னும் நிறை
வேற்றப்படவில்லை. அந்த அளவுக்கு போலீசார் திறமை
இருக்கிறது. அவர்கள் மக்கள் பிரச்சினையை தீர்க்க தெரி
யாதவர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு திருடர்கள்,
தவறு செய்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது.
அவர்கள் விஞ்ஞான முறையை கையாளுகிறார்கள். அதை
தடுக்கவோ, அல்லது குற்றவாளிகளை பிடிக்கவோ நம்முடைய
போலீஸ் அதிகாரிகள் டைரக்டாக பீல்டில் இருக்கக்
கூடிய அதிகாரிகள் தகுதி உள்ளவர்களாக திறமை
உள்ளவர்களாக இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

அது மட்டும் அல்ல, போலீசாரை மக்கள் மதிக்கவேண்டும்.
மக்கள் போலீசாரை மதிக்கும் அளவுக்கு போலீசார் நடந்து
கொள்ளவேண்டும். அது தமிழகத்தில் இன்று எந்த அளவுக்கு
இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எல்லா இடத்
திலும் பணம் இருப்பவர்கள், வசதியாக இருப்பவர்கள், பதவி
யில் இருப்பவர்கள் தங்களுக்கு வேண்டிய காரியங்களை செய்து
கொள்ளக்கூடிய சூழ்நிலை தான் இருக்கிறதே ஒழிய அப்பாவி

மக்களை காப்பாற்றும் நிலையில் இல்லை. உதாரணமாக எடுத்துக் கொண்டால் குடந்தையில் 2 அதிகாரிகள் இருக்கிறார்கள். நீங்கள் போலீஸ் துறைக்கு பல கோடி ரூபாய் செலவழிக்கிறீர்கள். தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரையில் அவர்கள் பொறுப்பில் விட்டால் அவர்களே அந்த தஞ்சையில் உள்ள அனைத்து அதிகாரிகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும் சம்பளம் கொடுக்கக் கூடிய அளவுக்கு வசதியாக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள் தவறுசெய்து வருகிறார்கள். அதை பலயிடங்களில் எடுத்துச் சொல்லியும், மனுக்கள் அனுப்பியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சருக்கு பண்ருட்டியைச் சேர்ந்த நகை வியாபாரிகள் எங்கள் பகுதியில் உள்ள கிரைம் இன்ஸ்பெக்டர் மீது மனு அனுப்பினார்கள். அது கடைசியாக வந்த மனு ஜூன் மாத கடைசியில். அதற்கு முன்பாக நூற்றுக்கணக்கான மனுக்கள், நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் குறித்து அந்த தனிப்பட்ட நபர் மீது கூறப்பட்டும் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் மக்களுக்கு விரோதமாக, வியாபாரிகளுக்கு விரோதமாக தவறு செய்பவர்களுக்கு உடந்தையாக இருந்து அந்தப் பகுதி மக்களை மிகவும் கொடுமைப்படுத்தி வருகிறார் என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பாலான போலீஸ் அதிகாரிகள் சிவில் கேஸ்களில் புகுந்து இரு தரப்பினரையும் கூட்டி வைத்து சமாதானம் பேசுகிறோம் என்ற முறையில் தாங்கள் வசதி அடைகிறார்களே ஒழிய கிரிமினல் கேஸ்களில் மற்ற வழக்குகளில் பெரும்பாலான நேரத்தை செலவழிப்பது இல்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு முன் காலத்தில் எல்லாம் இரவிலே பீட் போலீஸார் வருவார்கள். இப்போது பீட் போலீஸார் வருவது இல்லை. நான் இருக்கும் அண்ணா நகர் பகுதியில் சுமார் 20 வீடுகள் இருக்கின்றன. அங்கே அனைத்து வீடுகளிலும் திருடு போயிருக்கிறது அல்லது 'Attempt to commit theft' என்ற நிலை இருக்கிறது. என் வீட்டில்கூட கடந்த 21-8-1984 அன்று திருடு போய் அதை தெரிவித்து இன்னும் போலீஸ் துறையால் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவே நாங்களே விஜிலன்ஸ் கமிட்டி வைத்து இரவிலே ரோந்து செல்லக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். பீட் ஏன் போடவில்லை என்று காரணம் கேட்டால், எங்களிடம் தேவையான காவலர்கள் இல்லை, அதனால் எங்களால் சரியாக நிறைவேற்ற முடியவில்லை. நகர் மிகவும் விரிவு அடைந்து விட்டது, அதனால் ரோந்து செல்ல முடியவில்லை என்று போலீசார் சொல்கிறார்கள். நகர்



விரிவு அடைந்து விட்டது, மக்கள் தொகை பெருகிவிட்டது அதை ஒத்துக் கொள்கிறோம். அதற்கு தகுந்த அளவு போலீஸ்காரர்கள் இருக்கவேண்டாமா? அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த கவர்னர் உரையிலே நடைப்பெற்ற பொது விவாதத்திலே நான் அப்போதே கூறினேன், திருவாரூரிலே அரசியல் காரணமாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு தோழரின் சினிமா கொட்டகை அடித்து நொருக்கப்பட்டு அந்த அதிர்ச்சியில் சினிமா கொட்டகை உரிமையாளர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் ஆஸ்பத்திரியில் ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு இருக்கிறார்கள். அதன் மீது 3 மாதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று மார்ச் மாதத்தில் சொன்னேன். இன்று நாம் ஜூலை மாதம் 9 ஆம் தேதியில் இருக்கிறோம். இந்த தேதி வரையில் இந்த வழக்கின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்றால் எந்த அளவுக்கு அந்த ஊர் போலீஸார் இருந்து வருகிறார்கள் என்பதை பார்க்கவேண்டும். இது மிகவும் வருத்தத்தை தரக்கூடிய செய்தியாகும்.

மேலும் கள்ளுக்கடை, சாராயக் கடைக்கு பிரான்ச் கடை வைக்கக்கூடாது என்று சொல்கிறார்கள், புரகிபிஷன் விங்கில் இருப்பவர்கள். ஆனால் குடந்தையில் சோழன் மாளிகை கள்ளுக் கடைக்கு அரியபுரத்தில் ஒரு பிரான்ச்சும், பட்டீஸ்வரன் சாராயக் கடைக்கு முழையூரில் ஒரு பிரான்ச்சும் அனுமதித்து இருக்கிறார்கள். அவர்களுடைய அனுமதியின் பேரிலேயே இங்கே நடந்து வருகிறது. அந்த அளவுக்கு போலீசாரின் போக்கு இருப்பது வருந்தத்தக்கது.

அதோடு போலீசாருக்கு குறை இல்லாமல் இல்லை குடந்தை போலீஸ் காலனி கட்டி 100 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். சுகாதார வசதியோ, காற்று வசதியோ இல்லாமல் போலீசார் மிகவும் தொல்லைப்படுகிறார்கள்.

(பிற்பகல் 12-10)

பி.டபிள்யூ.டி. டிபார்ட்மென்டோ அதைப்பற்றி கவனிப்பதே இல்லை. போலீசார் இல்லங்கள் அனாதை இல்லங்களாக, மிகவும் கேவலமாக இருக்கிறது.

அரசு மலிவு விலையில் ரேஷன் கொடுத்து வந்தது, இப்போது 50 சத விகிதம் தான் கொடுக்கப்படுகிறது. அதுவும் மாற்றப்படவேண்டும். போலீசாருக்கு தேவையான அளவுக்கு ரேஷன்கள் கொடுக்கப்படவேண்டும்.

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1985 ஜூலை 9

போலீசாருக்குக் கொடுக்கப்படும் வாகனங்களைப் பொறுத்த வரையிலும், வாகனங்கள் பழுதடைந்த நிலையில், சரிப்படுத்தப் படாமல் பயனளிக்க லாயக்கில்லாமல் இருக்கின்றன. அவற்றை பழுது பார்ப்பதற்கான செலவு போலீஸ் ஸ்டேஷன்களே செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஸ்டேஷனரி கூட சப்ளை செய்யப் படவில்லை என்று சொல்கிறார்கள். ஸ்டேஷனரி போன்றவை போலீசாருக்குத் தேவைப்படுவதால்தான் நாங்கள் இது போன்ற காரியங்களைச் செய்கிறோம் என்று கூட, தவறை ஜஸ்டிஃபை பண்ணி சில போலீசார் கூறுகிறார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டும்.

கும்பகோணத்திற்கென்று வழங்கப்பட்ட டிராஃபிக் சிக்னல், மற்ற கன்ட்ரோல் சாதனங்கள் தஞ்சைக்கு மாற்றப்பட்டு, கும்ப கோணத்திற்கு கிடைக்கவில்லை. புதிய டிராஃபிக் சிக்னல்கள், மின் சாதனங்கள் குடந்தைக்குத் தேவை. அதை அரசாங்கம் கவனித்துச் செய்யவேண்டும்.

கும்பகோணம் பகுதியில் திருப்பனந்தாள், திருவிடைமருதூர் பகுதிகளிலே, இனக் கலவரங்கள் மிக அதிகமாக நடந்து, பல கொலைகள் நிகழ்ந்து விட்டன. எனவே, அந்தப் பகுதிகளில் இனக் கலவரங்களின்போது மட்டும் அழைக்கப்படும் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ், ஆர்ம்ட் போலீஸ் பெட்டாலியனை கும்ப கோணத்திலேயே நிறுத்தி ஒரு கன்ட்ரோல்ரூமை அமைத்து, எப் போது குழப்பம் ஏற்பட்டாலும், கவனிக்கக்கூடிய அளவுக்கு ஒரு கன்ட்ரோல் ரூமை ஏற்படுத்த வேண்டும், என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

எனவே, 4 பெட்டாலியன் கம்பெனி ஆர்ம்ட் போலீஸ்-ம் இரண்டு பெட்டாலியன் ஸ்பெஷல் போலீஸ்-ம் குடந்தையில் இருக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

தமிழகம் முழுவதும் எடுத்துக் கொண்டால், போலீஸ் ஸ்டே ஷன்கள் மிகவும் குறைவாக இருக்கின்றது. போலீஸ் ஸ்டேஷன் கள் மிகவும் நீண்ட தூரத்திலே இருக்கின்றன. அதை மாற்றி போலீஸ் ஸ்டேஷன்களை தேவையான இடங்களிலே அமைக்க வேண்டும்.

கும்பகோணம் தொகுதியில் பட்டீஸ்வரத்திலும், திருவிடை மருதூர் தொகுதியில் வேப்பத்தூரில் அல்லது கதிராமங் கலத்திலும் போலீஸ் ஸ்டேஷன் மிகவும் தேவை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கட்சி யிலேயே இன்னும் மூன்று பேர் பேச இருக்கிறார்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள்.



1985 ஜூலை 9]

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** போக்குவரத்தைக் கண்காணிக்க 25 கிலோ மீட்டருக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும்.

தீயணைப்புத் துறையிலே, போலீஸ் துறை பற்றிய மானியத் தில் குறிப்பிட்டது போல், தீயணைப்பு மென்கள், ஃபயர் மென் கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். எனவே, ஃபயர் மென் களை புதிதாக ரெக்ரூட் பண்ணி, புது வாகனங்களும் அவர் களுக்குக் கொடுக்க வேண்டும்.

குடந்தைக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டியும் வேண்டும். திரு விடைமருதூர் தாலுகாவாக உயர்த்தப்பட்ட பிறகும், அங்கே ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் இல்லை. ஆகவே, அங்கே பயர் சர்வீஸ் ஸ்டேஷன் வேண்டும், என்று கேட்டுக் கொண்டு, தந்த சந்தர்ப்பத்திற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

**திரு. பி. முசிறிபுத்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவர் மூன்றா வது முறையாக இன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, காவல் துறை மானியத்தை இந்த மன்றத்திலே சமர்ப்பித்து இருக் கிறார்கள்.

இந்த மானியத்தின் மீது எதிர்க்கட்சியினர்கள் எல்லாம் பேசி இருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் எடுத்துப் பேசி யிருக்கிறார்கள்.

நான் பேச விரும்புவது, இன்றைக்கு இந்தக் காவல்துறை என்கிற இந்தப் பெயரே சரியானதாக எனக்குப் படவில்லை. என்ன காரணம் என்று சொன்னால், போலீஸ் என்று சொல்கிற போது வருகிற அச்சம், காவல் என்று சொல்கிறபோது வருவ தில்லை.

காவல் வருகிறது என்றால், கள்ளச்சாரயம் காய்ச்சுகிறவன் அவனுக்கு வருகிறது காவல் என்று நினைக்கிறான். வேறு சட்ட விரோதமான காரியங்களைச் செய்கிறவர்கள், அவர்களுக்கு வருவதாக நினைக்கிறார்கள். ஆக, இந்தப் போலீஸ் என்பதிலே இருக்கிற அழுத்தம், பயம், இந்தக் காவல் என்பதிலே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடிப் பேசி, இதிலே ஒரு அழுத்தமான ஒரு பெயரை வைப்பதற்கு நீங்கள் யோசிக்கவேண்டும் என் பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
P: Polite O: Obedience L: Love I: Intelligence C; Courage
E: Efficiency அது தான் போலீஸ்.

ஆனால், இன்றைக்கு காவல் வருகிறது என்று சொல்கிற நிலைமை. நான் எல்லாம் சின்னப் பிள்ளையாக இருக்கிறபோது என்னுடைய பாட்டி சோறு ஊட்டுகிறபோது, 'டேய் தின்கிறாயா, இல்லையா, போலீசைக்கூப்பிடவா ?' என்பார்கள். உடனே ருசியாக இருக்கிறதோ இல்லையோ, முழுங்கி விடுவேன். இப்போது போலீஸ் வருகிறது என்றால், உட்கார்ந்து இருக்கிறவன் கூட எழுந்திருக்க மாட்டேன் என்கிறான்.

அந்த மாதிரி நிலைமைகள் அளவுக்கு, அப்படி காவல் வருகிறது என்று சொன்னால், ஒரு பய உணர்வு தரக்கூடிய நிலையில் இந்தத் துறைக்கு ஒரு பெயர் வைப்பதைப் பற்றி மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. குமரி அனந்தன் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள், டி.ஜி.பி. இரண்டு மூன்று பேர்கள் இருக்கிறார்களே, ஐ.ஜி.க்கள் இரண்டு, மூன்று பேர்கள் இருக்கிறார்களே என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மதிப்பிற்குரிய மோகன்தாஸ் அவர்களின் தலைமையிலே துப்பறியும் பிரிவினர் இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மத்திய அரசாங்கத்திலே வைத்திருப்பதைப்போல, இந்தக் காவல் துறைக்குச் சம்பந்தமில்லாமல் 5,000 பேர்களைக் கொண்ட, காவல் துறை பயிற்சி பெற்றவர்கள் அவர்களுடைய நேரடிக் கவனத்திலே, அவர்களுடைய நேரடிக் கண்ட்ரோலிலே வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வைத்துக்கொண்டு, இந்தத் தமிழகத்திலே உள்ள யாராக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அல்லது பொதுவாழ்க்கையிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, அல்லதுவேறு வேறுதுறைகளிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, ஏற்கனவே உள்ள காவல்துறை அதுபற்றிய நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், விரைவாக, நேரடியாகத் தகவல்களை அனுப்புவதற்கு, காவல் துறை சம்பந்தப்படாமல் ஒரு காவல் துறையைத் தன்னுடைய நேரடிக் கவனத்தில் முதலமைச்சரவர்கள் வைத்துக்கொள்வது என்பது சிறப்பாக இருக்கும். இப்படிப்பட்ட பயிற்சி பெற்ற 5,000 பேர்களை, அந்தந்த மாவட்ட அளவிலே இருக்கின்ற காவல் துறை அதிகாரியின் தொடர்பு இல்லாமல், வேறு காவல் துறை அதிகாரிகளின் தொடர்பு இல்லாமல், நேரடியாக, எப்படி சி.பி.ஐ. வருகிறது என்றாலே எப்படிச் செய்கிறார்களோ, அதைப் போன்று மாநில அளவிலேயும், காவல் துறை சம்பந்தப்படாமல், பயிற்சி பெற்ற ஐயாயிரம் பேர்களை முதலமைச்சரவர்கள் தன்னுடைய நேரடிகன்ட்ரோலில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திரு. ரகுமான்கான் அவர்கள் நேற்றைக்குப் பேசும்பொழுது சொன்னார்கள், பார்த்தீர்களா பட்டியலை, ஷோபா கதை என்னவாயிற்று, மீனா கதை என்னவாயிற்று என்று கதையெல்லாம் சொன்னார்கள். ஐந்து கோடி மக்கள் உள்ள நாட்டில் குற்றங்கள் எவ்வளவு இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஏதோ நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு தான் ஊரிலே குற்றங்கள் நடந்துவிட்டதைப்போல அவர்கள் பேசினார்கள். களவாடல் என்பது, இன்றைக்கு கண்ணகி கதையே, சிலப்பதிகாரமே, கோப்பெருந்தேவியின் சிலம்பை யாரோ திருடிவிட்டான் என்ற அடிப்படையிலேதான் எழுந்தது. எனவே, களவாடல் என்பது தொடர்ந்து சமுயதாயத்தில் நடக்கிறது. ஆனால் இது போன்ற குற்றங்களில் அதைத் தடுத்து நிறுத்துவது நம்முடைய காவல் துறையின் வேலை.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக் காவல் துறை ஒரு பெரிய நற்பெயரோடு விளங்கி வந்திருக்கிறது. அந்த நற்பெயர் எப்பொழுது பழுதுபட்டது தெரியுமா? 1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ஆம் தேதி, ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள். தமிழ்நாட்டிலே எம்.ஜி.ஆர். மன்றங்கள் எத்தனை இருக்கின்றன. எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர்கள் எங்கெங்கே வேலைபார்க்கிறார்கள், இவர்களையெல்லாம் எப்படியெல்லாம் கவனிக்கலாம் என்பதுகுறித்துத் தாக்கீது அனுப்புங்கள் என்று கேட்டார்கள். அன்றைக்கு அவர்கள் அரசியல்வாதிகளாக ஆக்கப்பட்டார்கள்.

அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவரவர்கள் பொங்கி எழுந்தது 1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ஆம் தேதி, அதற்குப் பிறகு காவல் துறை எப்படிப் பயன்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். உலகத்திலேயே, இந்தியாவிலேயே அப்படிப் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். ஆனால், அந்தநாள் முதலமைச்சரவர்கள் அல்லது மற்ற அமைச்சர்கள் பேசுகின்ற கூட்டங்களுக்குக் காவல் துறையினர் மப்டி போலீசாராகப் போய், மொபைல் ஆபீசாகச் செயல்பட்டார்கள். அவர் பேசுகிறார். பத்து லோடு ஆடியன்ஸ் அனுப்புங்கள் என்று சொல்லி பத்து லோடு ஆடியன்ஸ் அனுப்பப்பட்டார்கள். ஏனென்றால் கூட்டம் போட்டால் கேட்பதற்கு ஆள் வரவில்லை என்பதால் காவல் துறையினர் மப்டியில் சென்று அப்படிக் கூட்டங்களை நடத்தியவர்கள் எதிர்க்கட்சியினர்.

கற்பழிப்பு பற்றியெல்லாம் சொன்னார்கள். ஷோபா வழக்கைப்பற்றி ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சபையிலே சொன்னார்கள். அடையார் பிரேமா வழக்கில் நானே கொண்டுவந்து அதுபற்றிய உண்மை நிலையை இந்தச் சபைக்குத் தெரிவிக்கிறேன். நாளைக்கே வந்து சொல்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஆண்டுகள் நான்கு ஆகின்றன. அவர் ஏன் மௌனமாகிவிட்டார்? எங்கே பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது? எதனால் மௌனமாகிவிட்டார்? ஏன் அதைச் சொல்ல [illegible] யோசித்துப் பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 12.20]

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, ஏன் மௌனமாகிவிட்டார் என்று கேட்கிறார். (குறுக்கீடு) மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீனாவைப் பற்றி பேசியதாகச் சொன்னார்கள். நான் மீனாவைப் பற்றி பேசவில்லை. ஏற்கனவே நடைபெற்ற பல கொலை வழக்குகளில் கண்டு பிடிக்கப் படாமல் இருப்பது குறித்து, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே விசாரணை நடக்கிறது, விரைவில் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுவார்கள் என்றுஉறுதி அளித்தார்கள். எனவே, அது பழைய கதை அல்ல, பழைய சம்பவம். முதல் அமைச்சரே ஒத்துக் கொண்டு அதைப்பற்றி விளக்கம் தருகிறேன் என்று சொல்லியது குறித்து ,அது என்னவாயிற்று என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன்.

அடுத்து ஒன்று சொன்னார், இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கு சம்பந்தமாக என்ன என்று ஏற்கனவே இந்தப்பிரச்சினை குறித்து பேசப்பட்டு நான் பதில் சொல்லியிருக்கிறேன். சபைக் குறிப்பேட்டிலேயே இருக்கிறது. உறுப்பினர் அதைப் படித்து விட்டு வந்தால் சிறப்பாக இருக்கும்.

**திரு. பி. முசிறி புத்தன் :** கற்பழிப்பு என்று இரண்டொரு சம்பவங்களைச் சொன்னார்கள். காவல் துறையினர் செய்த தவறுகளைச் சொன்னார்கள். நாங்கள் அதற்கு உடன்பாடானவர்கள் அல்ல. இன்றைக்கு அந்தத் துறை தலைவர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், டூட்டி நேரத்தில் இருக்கிற காவல் துறையினர் கண்டிப்பாக மது அருந்தக் கூடாது என்று இருக்கிற விதியை, கடுமையாக அவர்கள் அவ்வப்போது பரிசோதிக்கவேண்டும். டூட்டி நேரத்தில் அப்படி இருப்பார்களேயானால் அவர்களுக்கு எத்தகைய சக்தி இருந்தாலும், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கற்பழிப்பு என்பது காவல் துறையினர் என்று அல்ல, நாட்டிலே யார் அதில் ஈடுபட்டாலும் அதை நான் ஒத்துக் கொள்ளக்கூடிய நிலைமையிலே இல்லை. ஆனால், அவர்களுடைய தலைவரே ஒரு கதை எழுதியிருக்கிறார். என்ன கதை என்றால், ஒரு ஹெட்கான்ஸ்டபிள், மனைவி இழந்தவர், வயது வந்த பருவ மங்கை வீட்டிலே இருந்தாள். அவள் ஹெட் கான்ஸ்டபிளுக்குப் பொங்கி போட்டுக் கொண்டிருந்தாள். அந்த ஹெட் கான்ஸ்டபிள் ஒரு நாள் நள்ளிரவு மகளையே கற்பழித்து விட்டான் என்று ஒரு கதை 'வாழ முடியாதவர்கள்' என்ற தலைப்பில் வெளியாகியிருக்கிறது. அது மாதிரி கதைகள் எல்லாம் வெளியே வந்தால், சில நேரங்களிலே, இந்தப் பக்கத்திலே வேண்டாம், வேறு பக்கத்திலே கொஞ்சம் டெஸ்ட் பண்ணிப் பார்க்கலாம் என்று கூட நினைக்கக் கூடும்.





அது மட்டுமல்லாமல், ரமணி அவர்கள் பேசும்பொழுது லாக் அப்பிலே இருக்கிறவன் செத்துப் போனான், அது மாதிரி குற்றங்கள் பெருகியிருக்கின்றன என்று ஒரு பக்கத்திலே சொன்னார்கள். குற்றவாளிகளைக் காவல் துறையினர் அழைத்துப் போனால் எப்படி விசாரிப்பது ?

நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், கிரைம் என்று சொல்கிற குற்றம் விசாரிக்கிற காவல் துறைக்கு இன்னும் அதிக அதிகாரம் தரப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்ன காரணம் என்றால், விசாரிப்பதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. அந்த முறையை அவர்கள் இன்னமும் கடுமைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். விசாரிக்கப்படுபவர்களை அடிக்கக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். நான் கேட்கிறேன். விஷ ஊசி போட்ட வைத்தி, 9 பேர்களைக் கொன்ற ஜெயப்பிரகாஷ், போன்றவர்களை எல்லாம் 'வாங்க, நீங்கதான் ஜெயப்பிரகாஷா, நீங்கதான் விஷ ஊசி வைத்தியா, எத்தனை பேர்களைக் கொன்றீர்கள் என்று சொல்லுங்கள் என்று மாலை போட்டு கேட்டால் சொல்வார்களா? இது என்ன சமரச சன்மார்க்க மடமா? போலீஸ் ஸ்டேஷன் அல்லவா ? இதற்கு ஒரு முறை இருக்கிறது. நீங்கள் ஒரு பக்கம் என்ன சொல்கிறீர்கள். அடிக்கிறார்கள். இந்த மாதிரி அடிக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். இன்டர்நேஷனல் போலீஸ் எப்படி நடந்துகொள்கிறது? நீங்கள் நிறைய சினிமா படங்கள் பார்க்கிறீர்களே, இன்டர் நேஷனல் போலீஸ் இந்த மாதிரியா அடிக்கிறார்கள்? நம்முடைய போலீஸ் பயப்படுகிறது. அவர்கள் அடிப்பதைப் போல, நம்முடைய போலீஸ் அடிப்பதில்லை. ஏனென்றால், குற்றவாளிகள் எந்தக் கட்சியிலாவது இருக்கிறார்கள். சமூக விரோதிகளைக் கட்சிகளிலே சேர்ப்பதை நிறுத்துங்கள். அதை நீங்கள் கேட்கிறீர்களா ?

குமரி அனந்தன் இருக்கிறார் இங்கே. ஒரு பையன் மனோகரன் என்று பெயர். திருச்சியிலே இருந்தான். வீட்டுக்கு அடங்கவில்லை. கள்ளச் சாராயம் விற்றான். பிளாக் டிக்கட் விற்றான்; அவனை வீட்டை விட்டு வெளியே தள்ளி விட்டார்கள். அவன் போய் சினிமா கொட்டகையிலே படுத்துக் கொண்டான்; இரவில் வால் போஸ்டர் ஒட்டுவான்; அப்படி ஒரு நாள் வால் போஸ்டர் ஒட்டி விட்டு மீதி வால் போஸ்டரை வைத்து விட்டு, படுத்துக் கொண்டான். நன்றாகக் குடித்திருந்தான். சிம்னி விளக்கு பக்கத்திலே இருந்தது. படுத்து இருந்தவன் பக்கத்திலே இருந்த விளக்கை காலாலே தட்டிவிட்டான். வால் போஸ்டர் எல்லாம் எரிந்து, பழைய வேஷ்டி எல்லாம் சேர்ந்து எரிந்து, அவனுக்கும் தீக் காயம் பட்டது. உடனே ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் சேர்த்தார்கள். அங்கே அவன் உயிர் போய் விட்டது.

உடனே அங்கே என்ன நிலைமை என்றால் குமரி அனந்தன் கட்சியைச் சேர்ந்தவர் போய் தொண்டா, தோழா, என்றார். எங்களுடைய தொண்டன் போய்விட்டானே என்றார். உடனே அன்பில் தர்மலிங்கத்தை அங்கே கலைஞர் அனுப்பி, சொல்கிறார். ஆகா? மனோகரா? நீ போய்விட்டியே! இது அடுக்குமா? என்னுடைய தியாக சீலனை இப்படிச்செய்துவிட்டார்களே என்கிறார். உடனே இரண்டு பேருக்கும் சண்டை வந்து, குமரி அனந்தன் அவரோடு எடுத்த போட்டோவை காட்டுகிறார். அடுத்தவர் கலைஞருடன் எடுத்த போட்டோவைக் காட்டுகிறார். நிலைமை என்னவென்றால் மனோகரன் தியேட்டருக்கு யார் யார் வருவார்களோ அவர்களோடு எல்லாம் சேர்ந்து போட்டோ எடுத்திருக்கிறான். சண்டை போட்டு, கடைசியில் அன்பில் டெட்பாடியைக்கொண்டுபோய்விட்டார். அவர்கொஞ்சம் வலுத்தவர். உடனே தலைவர் போய் பேசுகிறார். நம்முடைய மனோகரன், நம்முடைய கண்மணி எந்த காரியத்திலே ஈடுபட்டு சென்றாரோ அந்தக் காரியத்தை நாம் எல்லாம் தொடர வேண்டும் என்று சொல்கிறார். இப்படி இருந்தால் நாம் எப்படி குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முடியும்? கிரிமினல்களை கட்சியில் சேர்த்துக்கொள்வது, கள்ளச் சாராயம் காய்ச்சுபவனை கட்சியில் சேர்த்துக் கொள்வது என்ற நிலைமை இருந்தால் இப்படித்தான் இருக்கும். இந்த நிலைமை இருக்கக்கூடாது. அப்படிப்பட்டவர்களை கட்சியில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. ஒருவர் சொல்கிறார். அவர் இப்படி, அப்படி என்று, கட்சியில் சேர்த்துக்கொள்கிறார்கள்.

நான் கூட ஒருவரை கட்சியில் சேர்க்க வேண்டுமென்று சொன்னேன். பம்பாயில் இருந்து ஒரு பெரியவர் வந்தார். எங்களுடைய தலைவரிடம் அழைத்துச் சென்றேன். எங்கள் தலைவர் முசிறிபுத்தன் சொன்னார் என்றால் கேட்கமாட்டாரா? கடைசியில் அது வேறுமாதிரி ஆகிவிட்டது. அவர் யார் சொன்னாலும் கேட்பதில்லை. எங்கெங்கோ போனார், எப்படியோ ஆகிவிட்டது. அதேமாதிரி இந்த மனோகரன் வீட்டுக்கு அடங்காத பிள்ளை, வீட்டைவிட்டு வெளியேறினான். வால்போஸ்டர்ஸ் ஒட்டினான். எப்படியோ வாழ்ந்தான். அவனுடைய டெட்பாடிக்கு இப்படிச் சண்டை.

ஒரு குற்றம் நடக்கிறது. கிரைம் பிராஞ்ச் வந்து விசாரிக்கிறது. யாராவது ஒருவன் செத்துவிட்டானா உடனே காவல் துறைமீது பாய்கிறார்கள். அடிக்கும்போது இடம் பார்த்து ரைட், லெப்ட் என்று பார்த்து அடிக்க மாட்டார்கள். குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்காக அடிக்கிறார்கள். ஹவுஸ் பிரேக் பண்ணுகிறவனையும், பிக்பாக்கெட் அடிக்கிறவனையும் பார்த்து, 'வாங்கய்யா, நீங்கள்தான் ஹவுஸ் பிரேக் பண்ணினீர்களா, நீங்கள்தான் பிக்பாக்கெட் அடித்தீர்களா' என்று விசாரித்துக்கொண்டிருக்க மாட்டார்கள், அப்படி விசாரிக்க முடியாது. அப்படி விசாரித்தால் குற்றத்தைக் கண்டு பிடிக்க முடியாது.





ஒரு பகுதியிலே ஹவுஸ் பிரேக் நடந்திருக்கிறது என்றால் உடனே அந்தப் பகுதியிலுள்ள ஹவுஸ் பிரேக் பண்ணுகிறவர்களுடைய லிஸ்ட் வைத்திருப்பார்கள், அதை எடுத்து வைத்துக் கொண்டு. விசாரிப்பார்கள். பிக்பாக்கெட் அடித்திருக்கிறார்கள் என்றால் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பிக்பாக்கெட் அடிப்பவர்களுடைய லிஸ்ட் காவல் துறையில் இருக்கும். எந்த எந்த பகுதியிலே யார், யார் இருக்கிறார் என்ற விவரம் தெரியும். உடனே அந்தப் பகுதியில் இருப்பவர்களை அழைத்து வருவார்கள். அவர்கள் காவல் நிலையத்திற்கு வரும்போது ''வாங்கய்யா, உட்காருங்கள். நீங்கள்தான் பிக்பாக்கெட் அடித்தீர்களா'' என்று கேட்டுக்கொண்டிருக்கமாட்டார்கள். கிட்டே வந்தவுடனே 'போயா உள்ளே' என்று இரண்டு அறை விடுவார்கள். சாதாரண கான்ஸ்டபிளே இப்படி அறைகிற போது உள்ளே இருக்கிற ஏட்டு எப்படி போடுவார் என்று தெரியாது.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றங்கள் செய்பவர்களை அல்லது தவறு செய்பவர்களை சார்ஜ்ஷீட் போட்டு, தண்டிக்கிற உரிமை நீதி மன்றத்திற்குத்தான் இருக்கிறதே தவிர காவல் துறைக்கு அல்ல. தவறு செய்தவர்கள் என்று அழைத்து வந்து போலீஸார் அடித்து, உதைப்பதை ஆளும் கட்சியினர் வரவேற்கிறார்களா அல்லது இப்படிப்பட்ட. ஒரு திருத்தத்தைச் சட்டத்திலே கொண்டுவர ஆளும் கட்சி முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. முசிறிபுத்தன் :** திரு. அன்பழகன் எப்படி விசாரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்? நான் சொன்ன மாதிரி, 'வாங்கய்யா, வந்து உட்காருங்கள்' என்று சொன்னால்போலீஸ் நிலைமை எப்படி இருக்கும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். உரிக்காத வாழைப்பழம் மாதிரி கொண்டு குற்றவாளிகளை உட்கார வைத்தால். எவிடன்ஸ் எப்படி கிடைக்கும்? சாம, பேத தான, தண்டம் என்பதுவரை வந்தால்தான் உண்மையைச் சொல்வான். திரு. சித்தன் அவர்களைக் கேளுங்கள், சொல்வார். எப்படி குற்றவாளிகளை விசாரிப்பது என்று இன்டர்நேஷனல் விதி இருக்கிறது. திரு. அன்பழகன் தினமும் இங்கிலிஷ் படம் பார்க்கிறார். அதிலே எப்படி விசாரணை செய்கிறார்கள் என்பது தெரியும். எப்படி அடிக்கிறார்கள்? கன்னம் எல்லாம் பிஞ்சுபோகிறமாதிரி அடிக்கிறார்கள். நம்முடைய நாட்டில் காந்தி, வினோபா, குன்றக்குடி அடிகளார் போன்றவர்களை அப்படியா அடிக்கிறார்கள்? உண்மையிலேயே குற்றவாளி என்று யாரை சந்தேகப்படுகிறார்களோ அவர்களை, பிக்பாக்கெட் அடிப்பவர்களைத்தான் அடித்து, உண்மையை வரவழைக்கிறார்கள். யார், என்ன செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க அவர்களுடைய ரேகையை வைத்து, சொல்லிவிடுகிறார்கள். சென்னை அல்லது வேலூருக்கு ரேகையை அனுப்பினால் சொல்லிவிடுகிறார்கள். யார் அந்தக் குற்றத்தைச் செய்தார் என்பது தெரிந்துவிடும்.

கர்நாடகத்தில் பாருங்கள், மானேஜரை கட்டுப்போட்டு விட்டு. பணத்தைக் கொண்டு போய்விட்டான். அதைஎப்படி கண்டு பிடித்தார்கள்? 'வாருங்கள், நீங்கள்தான் மானேஜரைக் கொன்றீர்களோ' என்று கேட்டால் உண்மையை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? இப்படி விசாரித்தால் அவன் எப்படி ஒத்துக்கொள்வான்? யாரை எப்படி நடத்த வேண்டுமோ அப்படி நடத்தினால்தான் உண்மை தெரியும். இல்லை என்றால் உண்மை வராது.

(பிற்பகல் 12-30)

ஆக அவர்களைச் சுதந்திரமாகச் செயலாற்றுவதற்கு நாம் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறபோது எங்களை மட்டும் வைத்துச் சொல்லவில்லை. அத்தனை பேர்களும் அவர்களுக்கு அனுசரணையாக இருந்தால்தான், ஏற்கெனவே இந்தக் காவல்துறைக்கு இருந்த பெயர் கிடைக்கும். ஆளவந்தார் கொலை நடந்தபோது, ராயபுரத்திலே தலை கிடந்தது. செங்கோட்டையிலே முண்டம் கிடந்தது. ராயபுரம் கடற்கரையிலே தலை கிடந்தது. அந்தத் தலைக்கும் செங்கோட்டையிலே டிரங்கு பெட்டியிலே கிடந்த முண்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை எவ்வளவு எளிதாகக் கண்டுபிடித்திருக்கின்றது காவல்துறை? அப்படிப்பட்ட காவல்துறைக்கு குறிப்பாக அரசியல்வாதிகள் மதிப்பளிக்கவேண்டும். மாண்மதுரை திரு. அன்பழகன் அவர்கள் மீது கூட வழக்கு இருந்தது பழைய சட்டமன்ற உறுப்பினர் திரு. உக்கிரபாண்டியன் அவர்களின் மீது கூட வழக்கு இருந்தது. எங்கள் ஆட்சியில் கூட எங்கள் மீதெல்லாம் வழக்கு இருந்தது. இன்றைக்குக் கூட, வழக்குகள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் நீங்கள் யாரும் குறுக்கிடாதீர்கள் நிர்வாகத்தில் என்று. அதை அவர் சொன்னதுதான் போதும், காவல்துறைக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு எங்களால் போக முடிகிறதா? போக முடியவில்லை. அங்கே போக முடியவில்லை. நாங்களே போக முடியவில்லை என்றால் கட்சிச் செயலாளர்கள் எப்படிப் போவார்கள்? கட்சிச் செயலாளர்கள் சென்றால் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? புரட்சித்தலைவர் அவர்கள் ஸ்டேஷனுக்கு வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கட்சிக்காரர்கள் வரவேண்டாம், சரி, பீப்பிள்ஸ் ரெப்ரசன்டேட்டிவ் நாங்கள் போனாலும் இதுதான் பதில்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் இதனை ஒழுங்குபடுத்திச் செய்திருப்பதால் இந்த சின்ன தவறுகள் எல்லாம் இல்லாமல் இருக்கின்றது. அதை எல்லாம் மறந்திருக்கிறார்கள். அடுத்து பொய் வழக்கு பற்றிப் பேசினார்கள். நம்முடைய தோழர்கள் எல்லாம் பேசினார்கள்.



பொய் வழக்கு போடுவதில் இந்தியாவிலேயே கருணாநிதி கட்சி மாதிரி ஒரு. பெரிய எக்ஸ்பர்ட் இருக்க முடியாது. அவ்வளவு பெரிய திறமை படைத்தவர்கள் கருணாநிதி கட்சிக்காரர்கள். தலைவருடைய பையன்—நேராநேரத்தில் அவனுக்குக் கல்யாணம் செய்திருந்தால் அவன் தெருவுக்குத் தெரு போகமாட்டான், பஸ் ஸ்டாண்டுக்குப் போக மாட்டான், கடற்கரைக்குப். போகமாட்டான். அவன்பாட்டுக்கு வீட்டோடு கிடப்பான். அப்படி நேராநேரத்தில் கல்யாணம் பண்ணாமல் விடப்பட்டதன் காரணத்தால் அவன் எங்கோ போய் காதல் பண்ணினான். அந்தப் பெண்ணும் மனம் ஒப்பி சரி, நல்ல பையன்தான் காதலிக்கலாம் என்று சொல்லி இரண்டுபேரும் காதலித்தார்கள். இது தெரிந்தது, உடனே ராத்திரியோடு ராத்திரியாக அந்தக் காதலியை வீட்டிலேயிருந்து காணோம். எங்கேடா என்று சொன்னால் தலைவரே ஏற்காட்டிற்குக் கொண்டுபோய் வைத்து—என்ன பண்ணினார்கள் என்று கேட்காதீர்கள்—அந்தப் பெண்ணை விசாரித்தார்கள். உடனடியாக அப்புறம் திருப்பி அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் அந்தப் பையன் விடுவதாக இல்லை. எந்தக் குற்றமும் செய்யாத அந்தப் பெண்ணுக்குக் கடைசியில் காதலித்த ஒரே குற்றத்திற்காக பிராத்தல் கேஸ் போட்டு அனுப்பினார்கள்.

அந்த மாதிரி எவ்வளவோ பொய் வழக்கு, போட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் மேல் வழக்கு போட்டார்கள், எங்கள் கட்சித் தோழர்கள் மீது போட்டார்கள். ஏறத்தாழ 1977—லே நாங்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கிற வரைக்கும், அதன் பிறகு 1980ஆம் ஆண்டு வரையிலும் நாங்கள் சந்தித்த வழக்குகள் கிட்டதட்ட 20 ஆயிரம் வழக்குகளுக்கு மேல் இருக்கும். எங்கே பார், திரும்பிய பக்கம் எல்லாம் வழக்குகள் என்று இருந்தன.

இன்னும் ஒன்று சொல்கிறேன். மற்றவர்கள் மீது போட்ட வழக்குகளைப் பற்றிச் சொல்லவில்லை என்றாலும் என்மீதே 9 கேஸ் கன்டினுவசாக இருந்தது. ஒரு கேஸ் வினோதமான கேஸ் என்பதற்காகச் சொல்கிறேன். 1973-லே ஒரு படம்—சமையல்காரனோ அல்லது பிள்ளையோ பிள்ளையோ எது என்று தெரியவில்லை—திரையிடப்பட்டது. அன்றைக்கு ராத்திரி 2 மணிக்கு என்னைத் தேடினார்கள். நான் கிடைக்கவில்லை. காலையில் 5 மணிக்கு வந்து என்னை அரஸ்ட் பண்ணினார்கள். நான் என்ன விஷயம் என்று கேட்டேன். நீ, ரொம்ப ஒர்ஸ்ட் என்று சொன்னார்கள். சரி என்று சொல்லி வெளியே வந்து பார்த்தால் 3 டிவிஷன் போலீஸ், 4 சப் இன்ஸ்பெக்டர்கள், ஏ. சி. டி. சி. இவ்வளவு பேர்கள் நிற்கிறார்கள். ஏதோ வால்கார்ட் டான்ஸ் ஆடியவர்களைப்பிடிப்பது மாதிரி பிடிக்க வந்தார்கள். நான் எங்கே ஓடிவிடப் போகிறேன்? அவ்வளவு பெரிய போலீஸ் படையை வைத்து என்னைப் பிடித்தார்கள்.

**வெளியில்** வந்து என்னய்யா விஷயம் என்று கேட்டார். நேற்று சாயந்திரம் 6 மணிக்கு சென்னையில் வெலிங்டன் தியேட்டருக்குப் பக்கத்திலே—எந்த இடம் பாருங்கள், அதுவும் மாலை 6 மணிக்கு—கஜேந்திரா ஓட்டல், புகாரி ஓட்டல், பிலால் ஓட்டல்கள் எல்லாம் இருக்கும் இடத்திலே, சாயந்திரம் 6 மணிக்கு நான் பெரிய வீச்சு அறிவாளை கையிலே வைத்துக் கொண்டு கருணாநிதியினுடைய ** ** என்பவரை, அவர் பார்ப்பதற்கு நம்முடைய பொன்னுசாமி மாதிரி இருப்பார் ....
(குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கருணாநிதி கட்சி என்று சொன்னார். அது தவறு, திராவிட முன்னேற்றக் கழகம்—அது ஒன்று. இரண்டாவது, கலைஞர் இங்கு சபையில் இல்லை. அத்தோடு கருணாநிதியினுடைய ** என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னால் அவரைப் பற்றிய ஒரு தவறான அபிப்பிராயம் எல்லோர் மனத்திலேயும் புகுத்தப்படும். அவரைப் பேச வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த முறை அனுமதிக்கப்படுமானால், சம்பந்தப்படாதவர்களைக் குறித்து பேசப்படுமானால், எதிர் காலத்தில் எங்கள் பக்கத்திலும் அது பின்பற்றப்படும். ................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கருணாநிதியின் நண்பர் என்று சொல்லட்டும். அதற்கு பதிலாக சொன்னவைகளை நீக்கிவிடுகிறேன்.

திரு. பி. முசிறிபுத்தன் : சரி, நண்பர் என்று சொல்லுகிறேன். அவருடைய நண்பரை நான் வீச்சு அறிவாளைக் கொண்டு, இடையிலே அதைச் செருகிக் கொண்டு, அண்ணா சிலை வைத்திருக்கிற அந்த இடத்திலே சென்னை மவுண்ட் ரோடிலே, அந்த நண்பர் காரை விட்டு இறங்கி பிலால் ஓட்டலுக்குப் போக காலை வைத்ததும், நான், ''டேய் வேணு, உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்'' என்று கத்திக் கொண்டு அவரை நோக்கி ஓடினேன்—அவர் உடனே முசிறிப்புத்தன் வீச்சறிவாளோடு துரத்துகிறான், ஐயோ ஆபத்து என்று சொல்லி, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு பக்கமாக அவர் ஓட நான் ஓட, நான் ஓட அவர் ஓட, கடைசியில் அவர் ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குள் போய் ஒளிந்துக் கொண்டு விட்டதனால் அவர் கொஞ்சம் தப்பி விட்டார், இல்லையென்றால் வேணு செட்டியாரை நான் தீர்த்திருப்பேன் என்று சொல்லி, அந்தக் கேஸை என் மீது போட்டார்கள். அதை விசாரிக்க வந்தவர் எனக்குத் தெரிந்தவர்தான். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கும் தெரிந்தவர்தான்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவர் கேட்டார் என்ன செக்ஷனிலே இவரை பிடித்துக் கொண்டு வந்தீர்கள் என்று. செக்ஷன் 307 என்றும் இன்னும் என்னென்னவோ செக்ஷன்களைச் சொன்னார்கள். அவர் சொன்னார். முசிறிபுத்தன் அண்ணனை உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். அவர் எறும்பைக் கூட மிதிக்க மாட்டார். வேகமாக வார்த்தைகளிலே பேசுவார், எழுதுவாரே தவிர, அவர் ஒன்றும் செய்யமட்டார் என்று சொன்னார், ஆனாலும் அவர்கள் இல்லை இல்லை வழக்குப் போடவேண்டும் என்றார்கள். நம்முடைய போலீசை விட்டு இன்னும் சரியாக இந்தக் கேஸை விசாரிக்கச் சொல்லுங்கள் என்று சொன்னார். பிறகு வழக்கும் போடப்பட்டது. பிறகு அட்ஜெர்ன்மெண்ட், அட்ஜெர்ன்மெண்ட் என்று தள்ளியும் போடப்பட்டது. எதற்கு சொல்லுகிறேன் என்றால் இந்த மாதிரி 7, 8 பொய் வழக்குகளை என் மீது போட்டார்கள். ஆகவே எப்படி பொய் வழக்குகளைப் போட வேண்டும் என்பதை நீங்கள்தான் தமிழகத்திலே முதன் முறையாகச் சொல்லிக் கொடுத்தீர்கள். நீங்கள் வளைத்து விட்ட அந்தப் பழக்கங்களை புரட்சித் தலைவர் அவர்கள் நிமிர்த்தி நிமிர்த்திப் பார்க்கிறார்கள். கொஞ்சம் நிமிர்த்தி இருக்கிறோம்.

அடுத்து வழக்கறிஞர்களைப் பற்றி இந்த அவையிலே பேசினார்கள். நண்பர் ரமணி அவர்கள் கூட பேசினார்கள். வக்கீலுக்கு, லாயருக்கு என்ன பெயர்? வழக்குரைஞர்கள் என்றுதான் பெயர். ஆனால் வழக்கறிஞர்கள் என்று சொல்வதே பழக்கமாகப் போய் விட்டது. வழக்கறிஞர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நானும் இப்போது வழக்கறிஞர் என்றே சொல்லிவிட்டேன், அது பழக்க தோஷம்— ஆனால் வழக்குரைஞர் என்றுதான் சொல்ல வேண்டும். பி.ஏ., பி.எல்., படித்துவிட்டு, வழக்கறிஞர் என்று போட்டுக் கொள்கிறார்கள். வேண்டுமானால் என். சி. ராகவாச்சாரி, ஜி. இராமசாமி போன்றவர்கள் வழக்கறிஞர் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் வக்கீலுக்குப் படித்துவிட்டதனாலேயே வழக்கறிஞர் என்று சொல்லிவிட முடியுமா? எங்கள் ஊரிலே இரண்டு மூன்று பேர்கள் இருக்கிறார்கள். கோர்ட்டுக்கே போவது இல்லை.

ஆனால் வக்கீலுக்குப் படித்துவிட்டதனாலேயே அவர்களைக் கூப்பிட்டு விசாரிக்கக் கூடாது என்று சொல்லுகிறார்களே, விசாரிக்கக் கூடாதா? விசாரித்தால் என்ன? விசாரிப்பதிலே என்ன தப்பு. இப்போது நம்முடைய கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் இங்கே இல்லை. சட்டப் படிப்பிற்காக நிறைய ஏற்பாடுகள் பண்ணியிருக்கிறோம். எங்கே பார்த்தாலும் வழக்குரைஞர்கள், ஹைகோர்ட்டுக்குப் போனால் 4 ஆயிரம், 3 ஆயிரம் பேர்கள் வழக்குரைஞர்கள் இருப்பார்கள். பார்த்தாலே பரிதாபமாக இருக்கும், ஏனென்று சொன்னால் அவர்களில் 100 பேர்களுக்குத்தான் வழக்குகள் இருக்கும். மற்றவர்கள்—நேற்று நடந்த வழக்கு என்னவாயிற்று அது ஒன்றும் உருப்படாது. எம்.ஜி.ஆர். சமாச்சாரம் தெரியுமோ என்று சேம்பரில்

உட்கார்ந்துக் கொண்டு பேசிக் கொண்டு இருப்பார்கள். நான் தெளிவாகவே சொல்கிறேன். வழக்குரைஞர்கள் திர்க்கமான அறிவை உடையவர்கள்தான். அவர்களே சில கிரிமினல் குற்ற வாளிகளுக்கு எப்படி மாட்டிக் கொள்ளாமல் குற்றங்களை செய்ய வேண்டும் என்று சொல்லித் தருகிறார்கள். நம நாட்டில் வழக்குரைஞர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் கூட சில வழக்குரைஞர்கள் இருக் கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

வக்கீல்கள் சில குறிப்பிட்ட குற்றவாளிகளுக்கு, ''நீ போய் செஞ்சிட்டு வாடா'' என்று சொல்கிறார்கள். தடயம் போலீ சுக்கு எங்கே கிடைக்கும்? போலீசுக்கு தடயம் கிடைக்காத வகையில் எப்படி கிரிமினல் குற்றத்தைச் செய்ய வேண்டுமோ, அப்படிச் செய்வதற்கு சில வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள். இல்லையென்று யாரும் மறுக்க முடியாது. கீழ் கோர்ட், இல்லை என்றால் மேல் கோர்ட், அதுவும் இல்லையென்றால் ஹைகோர்ட் என்று அவர்கள் சொல்லி அனுப்புகிறார்கள்.

திருடி விட்டு வருகிற சாமான்களை— சில வழக்கறிஞர்களை எனக்குத் தெரியும்—எங்கேயாவது 20 பவுன், 25 பவுன் என்றால், தென் மாவட்டத்தில் ஒரு வழக்கறிஞர், திருடிய உடனே அவரிடத் தில் வந்து பாதியை கொடுத்து விடுவார்கள். அப்பீல் செய் வதற்கும், பெயில் எடுப்பதற்கும் மற்றவைகளுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று. அவருக்கு ஒரு ட்ரேட், இவனுக்கு ஒரு ட்ரேட். இதை எப்படி தடுப்பது? ஆகவே வழக்கறிஞர்கள் பிரச்சனையிலே சிறிது யோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இந்தத் துறை சிறப்பான முறையிலே பயன்படுவதற்கு, நல்ல முறையில் தொடர்ந்து நடைபெறுவதற்கு முதலமைச்சர் அவர் கள் நிறைய ஊக்கத்தைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொன்னதைப் போல, அவர்களுடைய திறமையை வளர்ப்பதற்குத்தான் அவ்வளவு போஸ்ட்டுகளும். தகுதியின் அடிப்படையில் தான் அவர்களுக்கு சந்தர்ப்பம் தர வேண்டுமென்று செய்கிறார்கள். அவர்கள் பெரிய மனமுள்ளவர்கள். அவருக்கு பகைவனுக்கும் அருளக் கூடிய இதயம் இருக்கிறது. ஆகவே காவல் துறையினர் நலமாக இருக்க வேண்டும், அந்தத் துறை ஏற்றத்தோடு இருக்க வேண்டும் என்று அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். நான் முன்பே கேட்டுக் கொண்டதைப் போல, இந்தத் துறையிலே ஒரு பிரிவிலே இருக்கிற ஒருவர் கிரிமினல் பிரான்சுக்கு மாற்றப் படுகிறார் என்றால், அடுத்த மூன்று மாதங்களில் லா அண்ட் ஆர்டருக்கு மாற்றப்படுகிறார்கள். அங்கேயிருந்து சிறிது நாட்



களில் ட்ராபிக்குக்கு மாற்றப்படுகிறார்கள். ஆகவே மூன்று வருடமாவது ஒரு துறையிலே இருந்தால்தான் அதில் அவர்கள் தெளிவு பெறுவார்கள். ஆனால் அவர்கள் அடிக்கடி மாற்றப்படு கிறார்கள். அதற்குப் பதிலாக குற்றங்களைக் கண்டுபிடிப் பதற்கு நல்ல தேர்ச்சி பெற்று திறமையாக இருக்கிற இளைஞர் களை, முறையான காவல் துறை பயிற்சி தந்து திறமையானவர் களைக் கொண்டு தேர்வு செய்ய வைத்து, அவர்களை தன்னுடைய நேரடிப் பார்வையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி கூறி, நான் சார்ந் திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை வைக்க விழைகிறேன். நேற்றைய தினம் பேரவை யின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள், தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும், இளை ஞர் சமுதாயத்தின் இணையற்ற தலைவருமாக இருக்கிற அருமைத் தலைவர் தங்கபாலு அவர்களைப் பற்றி குறிப்பிட்டு, அவர் மீது போடப்பட்ட மோசடி வழக்கு என்னவாயிற்று என்று கேட்டார்கள். அவர் மீது தொடுக்கப்பட்ட மோசடி வழக்கு தவறானது என்றும் அந்த வழக்கிற்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லையென்றும் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது என்பதை பேரவைக்கும், மாண்புமிகு உறுப்பினருக்கும் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியினு டைய இளைஞர் பிரிவு தலைவராக இருக்கிற தங்கபாலு அவர்கள் மீது சீட்டிங் கேஸ் ஒன்றை தமிழ்நாடு கவர்ன்மெண்ட் பைல் பண்ணியிருந்தது. அதுகுறித்து உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள். நீதிமன்றத்திலே அந்த வழக்கு தள்ளுபடியாகி விட்டது என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது அதிகாரப்பூர்வமான தகவலா? அதற்கு தீர்ப்பு இருக்கிறதா? என்பதை இந்தச் சபைக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும் அல்லது அரசாங்கமே வழக்கை திரும்பப் பெற்று விட்டதா? அல்லது நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட் டதா? ஏனென்றால் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், செஷன்ஸ் கோர்ட், அடுத்து ஹைகோர்ட் மூலம் அப்பீல் வழியாக வந்ததா என் பதையெல்லம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களே, ஒரு வழக்கறிஞர் என்பதால் அதை பற்றி அவர்கள் நீதிமன்றத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தரக் கூடாது. இப்படி சொல்வது சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவருக்கு கிடைத்தத் தகவலைச் சொல்லி இருக்கிறார்கள்.. அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால் யாராலும் பேச முடியாது, உறுப்பினர் சொல்வது நீதிமன்றம் என்று தான் சொல்கிறார்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் மேலிடம் கூட, Mr. Gulam Nabai Azad, the then President of the Indian Youth Congreess and present Minister of State for Parliamentary Affairs has stated in his statement on 22 July, 1983 as follows.

In the Press statement Mr. Gulam Nabai Azad the President of Indian Youth Congress said that the news regarding the Tamil Nadu Youth Congress President Thangabalu is wrong. The Indan Youth Congress, after a top level enquiry found that all the charges levelled against the President of Tamil Nadu Youth Congrees are false and baseless. Therefore there is no question of changlng the State Leadership of Tamil NaduYouth Congress என்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைமை தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆகவே இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறி, காங்கிரஸ் கட்சியின் தலைமை மீது களங்கம் கற்பிக்க விழைகிறார்கள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் கூட, கலைஞர் அவர்கள் செய்யாத மோசடி உண்டா? என்று சொல்லிவிட்டுப் போகலாம். அப்படி நாங்கள் சொல்லவில்லை. எனவே இந்தப் போலீஸ் மானியத்தின் மீது நான் பேச விழைகிறேன். 1982ஆம் ஆண்டு உயர் அதிகாரிகள் கொண்ட குழு காவல் துறையை நவீனப்படுத்தவேண்டும் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையினுடைய குறிப்புகள் என்ன ஆயிற்று என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மேலும் காவல் துறையில் இருப்பவர்களுக்கு வாரம் 2 நாள் விடுமுறை அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல அவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று பல்வேறு உறுப்பினர்கள் பேசினாலும் கூட, இந்த இரண்டு நாள் ஓய்வு ஊதியத்தை அதிகமாக அவர்கள் சம்பளத்திலே கூட்டிக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.



அடுத்து மொபிலைசேசன் ட்யூடி. என்று காவல்துறையிலே இருப்பவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வேலை பார்க்கும்போது, அவர்களுக்கு 4.50 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை அதிகப்படுத்தி, 15 ரூபாய் அல்லது 20 ரூபாய் கொடுத்தால், நலமாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

அதைப்போல மினிஸ்டிரியல் ஸ்டாப் என்று சொல்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படி இருக்கின்ற காரணத்தால் காவலர்களுடைய இங்கிரிமென்ட், அர்ரியர்ஸ் சரியாகப் போடுவதற்கு வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். மேலும் ஏ.ஜி. ஆபிசிலேயிருந்து 6 லட்சம் ரூபாய் சஸ்பென்ஸ் அக்கவுண்ட்டிலே வைத்திருந்ததைப் பற்றி ரிமார்க் அனுப்பி இருக்கிறார்கள். அதைப்பற்றி அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் போலீசினுடைய கூட்டுறவு செசைட்டி என்கிற ஒரு அமைப்பை 1982-லே ஆரம்பித்தார்கள். அதிலே அந்த அமைப்பிலே ஊழல் நடைபெற்றது என்று சொல்லி, அதைக் கலைக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் அந்த பன்ட்ஸ் பிடிக்காமல் அவர்களுக்கு நல்ல வாய்ப்பு தராமல் இருக்கிறது என்பதையும் நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மேலும் நம்முடைய மத்திய அரசும், தமிழக அரசும் சேர்ந்து நம்முடைய ஐ.ஜி.பி. நரசிம்மன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தார்கள். போலீஸ் துறையிலே இருப்பவர்களை ஸ்கில்ட் லேபர் என்ற ஒரு தலைப்பிலே கொண்டு வர வேண்டும் என்று விரும்பினார்கள். தமிழகத்திலே அவர்கள் பல்வேறு துறைகளிலே செயலாற்றுகிறார்கள். அவர்களை ஸ்கில்ட்டு லேபராக ஆக்கி, அவர்களுக்கு சிறந்த ஊதியங்களைக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் பதிவு செய்கிறார்கள். குற்றவாளியை கண்டுபிடிக்கிறார்கள். நீதிமன்றத்திலே கொண்டு வந்து சேர்க்கிறார்கள். எனவே அவர்கள் இதுபோன்ற பல்வேறு துறைகளிலேயும் அவர்கள் பணி செய்கின்ற காரணத்தால் அவர்களை ஸ்கில்டு லேபராக ஆக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவர்கள் வாழ்கின்ற வீடுகள் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. அந்த வீடுகளைச் செம்மைப்படுத்த வேண்டும். மேலும் 100 வீடுகளுக்கு ஒருமீட்டர் என்று வைத்திருக்கிறார்கள். பொது மீட்டராக காவலர்கள் இல்லத்திலே இருப்பவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான வகையிலே மின்சாரத்தை பயன்படுத்துவார்கள். ஒருவருக்கு 20 யூனிட் என்று வைத்திருக்கிறார்கள். எனவே இதற்கு மேலும் பயன்படுத்துபவர்களுக்கு தனியாக மீட்டர் வைத்தால், அவர்கள் மின்சாரத்தை பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும், அரசாங்கத்திற்கும் சிக்கனமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் போலீஸ் துறையிலே ஹவுசிங் ஸ்கீம் என்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் இதுவரையில் நன்றாகச் செயல்படுகிறதா? இதிலே செய்வதற்கு என்னென்ன திட்டங்களை அரசு வைத்திருக்கிறது என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் நம்முடைய போலீஸ் துறையை தனித் தனி அங்கமாகப் பிரித்து அதைச் செம்மைப்படுத்தினால், நன்றாக இருக்கும். உலகப் புகழ் பெற்ற ஸ்காட்லாந்து யார்ட் போலீசிலே கூட அவர்கள் தனித் தனிப் பிரிவை வைத்து இருக்கிறார்கள். பாதுகாப்பு மற்றும் கலவரம் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், அங்கே தனித் தனிப் பிரிவு இருப்பதைப் போல, இங்கேயும் ஒவ்வொரு துறைக்கும் நாம் தனிப் பிரிவு வைத்தால், அது நன்றாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் 'கொள்கிறேன்.

மேலும் காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் பல குற்றங்களைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டும், அதற்குத்தகுந்த சட்டங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அவர்களுக்கு குறைந்தபட்சம் 15 ஆண்டுக்காலம் ஆகிறது. இந்தியன் பினல் கோட் போன்றவற்றைத் தெரிந்து கொள்வதற்கு அதிக காலம் ஆகிறது. அந்தச் சட்டங்களைப் பற்றி அவர்கள் தெளிவாக அறிவதற்கு முன்னாலே அவர்களுக்கு புரேமோசன் கொடுத்து, அவர்கள் சரியான போலீஸ் இன்வெஸ்டிகேசன் செய்வதற்கோ அல்லது விட்னஸ் சரியாக வைத்துக்கொள்வதற்கோ கூட வாய்ப்பு கொடுக்காத அளவில் அவர்கள் வழக்கு மன்றங்களிலே சென்று, வழக்குகளைப் போடுவதால், அவைகளுக்கு நீதிமன்றங்களிலே ஒரு தொய்வு ஏற்படுகிற நிலையை நாம் பார்க்கிறோம்.





(பிற்பகல் 12-50)

போலீஸ் துறையோடு சேர்ந்த பயிற்சி நிலையங்களை உருவாக்க வேண்டும். அந்த பயிற்சியை சரியான முறையில் கொடுத்து அவர்கள் மேலும் நல்ல முறையிலே தொழிலை செய்வதற்கு வேண்டிய பொறுப்பான அறிவினை ஊட்ட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி ஆனந்தன் அவர்கள் குறிப்பிட்டது போன்று அதற்கான கல்வியை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தமிழக அரசின் ஆணை எண். 2357-ன் மூலமாக 1983 ஆம் ஆண்டு எல்லா குளிர் சாதன திரை அரங்குகளிலும் தான் இயங்கி கருவியை Recording type electronic indicator என்ற ஒரு கருவியை பொருத்த வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் எல்லா திரை அரங்குகளிலும் அதை பொறுத்துவது இல்லை. ஆனால் கட்டணத்தை மட்டும் உயர்த்திக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் திரைப்படம் ஆரம்பிக்கும்போது ஏ.சி. போடுகிறார்கள். பிறகு அதை நிறுத்தி விடுகிறார்கள். இந்த சூழ்நிலையை காவல்துறை "நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய தமிழகத்தில் திருமணம் ஆன 2 மாதங்கள் 2 மாதங்களுக்குள் மருமகள் சாகடிக்கப்படுகின்ற கொடுமைகள் தமிழகம் முழுவதும் பார்க்கிறோம். மாமியார்களும் மற்றும் இருக்கின்ற உறவினர்களும் சேர்ந்து அந்த பெண்ணை கொடுமைப் படுத்தும் தீயப் பழக்கத்தை காவல்துறையினர் உடனடியாக கண்டுபிடித்து கடுமையான தண்டனை வழங்கவேண்டும் என்று பணிவன்போடுகேட்டுக் கொள்கிறேன். மனைவி என்று வருகிறவளும் தாயை துறந்து, தந்தையை துறந்து, சுற்றத்தை துறந்து கணவனின் ஒரு முழு கயிற்றுக்காக வருகிற அந்த உத்தமியை சாகவிடாமல் தமிழ்நாட்டினுடைய காவல் துறை அதிகமான அளவில் கண்காணிக்கவேண்டும்.

மேலும் நம்முடைய பெண்களை காதலிப்பதாக சொல்லி காதலித்து இளைஞர்கள் அந்த கன்னிகளை விபசார விடுதியில் விற்று விடுகின்ற கொடுமையை நிச்சயமாக காவல்துறையினர் கண்காணிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் போலிச்சாமியார்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த சாமியார்களுடைய நடவடிக்கைகளை நாம் நிச்சயமாக கண்காணிக்க வேண்டும்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1985 ஜூலை 9

மேலும் நம்முடைய ஓட்டல்களில் நள்ளிரவில் ஆபாசமான, நிர்வாண நடனங்கள் நடத்தப்படுவதை காவல்துறையினர் அறிந்தும் அறியாமல் இருக்கிறார்கள் என்ற ஒரு உணர்வினை சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் காவல்துறையில் சிறப்பாக பணியாற்றுகிறவர்களுக்கு மெடல்கள், விருதுகள் வழங்கப்படுவதை விடுத்து அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்து செம்மையாக காக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீ அணைப்புத் துறையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்ளுகிறேன். தீ அணைப்புத் துறையில் இருப்பவர்களுக்கு எந்தவிதமான வீட்டு வசதியும் இல்லை. மேலும் அந்தத் துறையில் பரிசு பெற்று சிறப்பாக பணி ஆற்றுபவர்களுக்கு அவர்களுக்கு தலைமை வழங்கவில்லை. காவல்துறையில் இருந்து தான் இவர்களுக்கு தலைமை போடுவதாக சொல்லுகிறார்கள். மேலும் ஒயர்லஸ், டெலிபோன் போன்ற சாதனங்களை இயங்குகின்ற அந்த அதிகாரிகளுக்கு, அந்த தீ அணைப்பு வீரர்களுக்கு அதிகமான ஊதியத்தை சிறப்பாக வழங்க வேண்டும் என்று கேட்டு, இந்த காவல்துறை மானியத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன் வைக்கப்பட்டு இருக்கின்ற காவல்துறை ஆய்வு அறிக்கை மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு சில விமர்சனங்களை முன் வைக்க விரும்புகிறேன். இங்கே முன்வைக்கப்பட்டுள்ள குறிப்பை ஆய்வு அறிக்கை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் என்ன ஆய்வு நடத்தப்பட்டு இருக்கிறது என்பதை உள்ளே புரட்டிப் பார்க்கும்போது ஒரு விவரமும் இல்லை. ஒரு விமர்சன பூர்வமாக தமிழ்நாட்டில் இயங்கிக்கொண்டு இருக்கிற காவல் துறையின் செயல்பாட்டைப் பற்றி ஒரு மதிப்பீடு இதில் இல்லை. காவல்துறை தமிழ்நாட்டில் இயங்குவதற்கு உரிய கொள்கை அடிப்படைகள் ஆய்வு அறிக்கையில் இல்லை. எனவே இதை ஆய்வு அறிக்கை என்று சொல்வது பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. இங்கே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் குறிப்பிட விரும்புவது ஏதோ காவல்துறையை அவர்களுடைய வேலைகளை கண்டனம் செய்து குறைசொல்ல வாய்ப்பாக இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. காவல் துறைக்கு இருக்கக்கூடிய பொதுவான பிரச்சினைகளையும் நாங்கள் உணருகிறோம். அது தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக உரிய காலத்தில் போராடியவர்கள் போராடிக்கொண்டு இருக்கிறவர்கள் என்ற முறையிலேயும், அதே நேரத்தில் காவல்துறையினர் சமுதாயத்திலே வகிக்க வேண்டிய பொறுப்பு மிக்க தன்மையின் அவசியத்தை கருதி சில பிரச்சினைகளை முன் வைக்க விரும்புகிறேன்.



1985 ஜூலை 9] [திரு. கு. சுப்பராயன்]

குடிநீரிலே சாக்கடைநீர் கலந்து விட்டால் எவ்வளவு கேடு விளையுமோ அது போல இந்த காவல் துறையிலே சில சமுதாய விரோதிகளுக்கு இணைப்பு ஏற்படுகிற போது சமுதாயம் கொடுமையாக பாதிக்கப்படுகிறது என்பதற்கு உரிய சில விவரங்களை நாம் நடைமுறை அனுபவத்தில் உணர்ந்து இருக்கிறோம்.

இந்த ஆய்வு அறிக்கையிலே பொதுமக்களின் உயிர், உரிமை மற்றும் உடமை ஆகியவற்றுக்கு பாதுகாப்பு அளிப்பது அரசின் அடிப்படைக் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கைப் பேணிக்காப்பது, குற்றங்களைக் கட்டுப்படுத்தி அகற்றுவது காவல்துறையின் மிக முக்கியமான இரு கடமைகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சமத்துவ சமுதாயத்தை உருவாக்க அரசு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் காவல்துறை அரிய கருவியாக பயன்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது. நடுவுநிலை தவறாமல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால், இவற்றை எல்லாம் கேட்கிறபோது, தேனைப் போல் இனிக்கிறதே தவிர வாழ்க்கை அனுபவம் இனிக்கவில்லை என்பதை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காவல்துறையைப் பற்றி ஆளுகிற கட்சியைச் சேர்ந்த அருமைக்குரிய நண்பர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை முன் வைத்தார்கள். சூடுபட்டவர்களுக்கு ஏற்படுகிற துடிப்பு சூடு படாதவர்களுக்கு ஏற்படாது என்பதில் நாங்கள் ஆச்சரியப்படவில்லை. ஆளுகிற கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அப்படிப் பேசினார்கள் என்பது குறித்து எங்களுக்கு வருத்தமும் இல்லை. ஏனெனில் அவர்களுக்கு அத்தகைய அனுபவமில்லை.

பாரதி சொன்னான் 'தாளத்திற்கோர் தடையுண்டாயின்—கூளம் கூளம் கூளம். நாதத்திற்கோர் நலிவுண்டாயின்—சேதம் சேதம் சேதம்' என்று. ஆகவே, காவல்துறை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது, என்னென்ன கடமையைச் செய்யப் போகிறது என்று ஆய்வு அறிக்கையின் பூர்வ பீடிகையிலே சொல்லப்பட்டு இருக்கிறதோ, அவற்றை நடைமுறையில் நிறைவேற்றவில்லை என்பதை தமிழ்நாட்டின் பல்வேறு சம்பவங்களை எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆய்வு அறிக்கையின் கொள்கை அறிவிப்புகளையும் காவல் துறையின் நடவடிக்கைகளையும் இணைத்துப் பார்த்தால் மேற்கண்ட பாரதியின் கவிதை வரிதான் நினைவுக்கு வருகிறது. காலத்தின் அருமை கருதி அந்த விஷயங்களின் உள்ளே நான் போக விரும்பவில்லை.

அதே போல், இங்கே ஒரு கருத்து திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது: காவல்துறை தாக்கத் தான் செய்வார்கள். அடிக்கத்தான் செய்வார்கள்: அடிக்கத் தான் வேண்டும்: என்பது போன்ற கருத்தை ஒரு பொறுப்புள்ள பேரவையிலேயே சொல்லப்படுவதற்காக நான் பெரிதும் வருத்தப்படுகிறேன். நாகரிக உலகம் உண்மையிலேயே வேதனை அடைய வேண்டிய நிகழ்ச்சி தான் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சமீபத்திலே டெல்லி ஐகோர்ட்டு ஒரு தீர்ப்பு வழங்கியது அந்தத் தீர்ப்பு ஒரு தற்கொலை செய்ய முயன்ற ஒரு குற்றவாளிக்காக வழங்கப்பட்ட தீர்ப்பு— அதிலே என்னசொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஏனென்றால், இன்றைய நிலைமையில் குற்றங்களைத் தடுக்கிற நடைமுறைகள் எப்படி இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் முசிறிபுத்தன் அவர்கள் சொன்னது போல், இருக்க முடியாது, இருக்கக்கூடாது. அத்தகைய கருத்துக்களை இந்த மாநில அரசின் கொள்கையாக இருக்கக்கூடாது. என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிபுத்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிரிமினல் குற்றவாளிகளை, தொடர்ந்து குற்றம் செய்பவர்களை காவல் துறையினர் எப்படி விசாரிக்க வேண்டும் என்பதற்கு அவர் ஏதாவது ஒரு வழிமுறையைச் சொன்னாரானால், அது பற்றி யோசிக்கலாம்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிரிமினல் குற்றவாளிகளை எப்படி விசாரிக்க வேண்டும் என்று சுப்பராயன் தீர்ப்பு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு சட்ட விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த சட்ட விதிகளின் அடிப்படையிலே தான் விசாரணை செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். அண்ணல் காந்தியடிகளைக் கொன்றுவிட்டான் என்பதற்காக உடனேயே கோட்சேயை அரசு சுட்டுக் கொன்றுவிடவில்லை.

திரு. பி. முசிறிபுத்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆதரவோடு நடைபெறுகிற ஆட்சி என்று நினைக்கிறேன், மேற்கு வங்கத்திலே ; அவருடைய கட்சியைச் சேர்ந்த நம்பூதிரிபாட் அவர்கள் கேரளாவிலே முதலமைச்சராக இருந்து இருக்கிறார்.. அவர்கள் கட்சியும் ஆண்டு இருக்கிறது. அங்கே, கிரிமினல் குற்றவாளிகளையும் கொலையாளிகளையும் எப்படி காவல் துறையினர் விசாரித்தார்கள் என்பதற்கு ஏதாவது தகவல் இருந்து சொன்னாரானால், நாம், அதை யோசனையாக ஏற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது.





திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்திற்கே வழிகாட்டுகின்ற முன் உதாரணமான ஆட்சி எங்கள் ஆட்சி தான் என்று கூரை மீது ஏறி அடிக்கடி கூவிக் கொண்டிருக்கிற அண்ணா தி.மு.க. நண்பர்கள் நல்ல முன் உதாரணங்களை என்றைக்கும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் போல் தெரிகிறது. நல்ல முன் உதாரணத்தை ஏன் நீங்களே உருவாக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.. இப்படிக் கேட்டு விட்டதனாலேயே, மேற்கு வங்கத்திலே எல்லாம் இப்படித் தான் நடக்கிறது என்ற முடிவுக்கு வருவதற்கான ஆதாரங்கள் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (குறுக்கீடு).

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்லி ஹைகோர்ட் கொடுத்த தீர்ப்பு :—குற்றங்கள் களையப்பட வேண்டும் ; ஆனால் குற்றங்களைக் களைவதற்கு எத்தகைய வழிமுறைகள் கைக்கொள்ளப்படவேண்டும் என்றால் இத்தகைய ஹிம்சை வழிமுறைகள் அல்ல. மனிதத் தன்மை இருக்க வேண்டும் : சமூக உணர்வு இருக்க வேண்டும். நாகரிகப் போக்கு கொண்ட குற்றத் தடுப்புப் பார்வை காவல்துறைக்கு இருக்க வேண்டும் '' என்று நான் சொல்லவில்லை. டெல்லி ஐகோர்ட் வழங்கிய தீர்ப்பு. அந்தத் தீர்ப்பை உரியவர்களின் சிந்தனைக்கே நான் விட்டு விடுகிறேன். குறிப்பாக இங்கே நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

எங்கள் ஆட்சியில் அத்தகைய தவறில்லை, முன்பு நடந்தது. நாங்கள் அப்படிப்பட்ட தவறுகளுக்கு இரையாகவில்லை, என்றெல்லாம் சொன்னார்கள். நான் ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—00)

கோவை மாவட்டத்திலே வீர கேரளம் என்ற ஒரு பகுதியில் திம்மநாயக்கன் நகரில் ஸ்டேன்ஸ் மில்லிலே பணியாற்றக்கூடிய திரு ராமசாமி என்ற தொழிலாளி, கடந்த 22—5—1985-ஆம் தேதி இரவு பத்து மணிக்குப் படுகொலை செய்யப்பட்டார். யார் குற்றவாளி என்று, சம்பந்தப்பட்ட கொலை செய்யப்பட்டவரின் மகன் எழுத்து பூர்வமாகக் தொண்டாமுத்தூர் காவல், நிலையத்திலே புகார் கொடுத்தும்கூட இந்த நிமிஷம் வரையில் சம்பந்தப்பட்ட அந்தக் குற்றவாளி கைது செய்யப்படவில்லை. ஆனால், கொலை செய்யப்பட்டவரின் இரண்டாவது மகனைக் காரிலே கடத்திக் கொண்டு அவினாசி வரையில் கொண்டுசென்று, என் மீது புகார் கொடுக்கக்கூடாது என்று அதே ஊரைச் சேர்ந்த மிராசுதார் நடராசன் என்பவரும் அவரைச் சார்ந்தவர்களும் மிரட்டி, அடித்து பயமுறுத்தியிருக்கிறார்கள். இது குறித்தும் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. உரிய அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்

தும் கூட நடவடிக்கை இல்லை என்றால் இதுதான் மக்களின் உயிரையும் உரிமையையும் காக்கும் மங்களகரமான போக்கைக் காட்டுகின்ற உதாரணமா? இப்படிப்பட்ட நிலையில் உயிர் பாதுகாக்கப்படுகிறதா? பொது மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய அக்கறை அரசுக்கு இருக்குமேயானால் கொலைக் குற்றவாளிகளைப் பாதுகாக்காமல் உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்பதை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன். அவர் ஒரு மிராசுதாரர். எனவே, மிராசுதாரரிடத்திலே இந்தச் சட்டம் பாய்வதில்லை; ஏழை மக்களின் எலும்பை முறிக்கப் பிரயோகப்படுத்துகின்ற சட்டம், பணம் படைத்தவர்களின்மீது பாய்வது இல்லை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் மணியகாரப்பாளையம் பகுதியில் ஏறக்குறைய ஓராண்டுக் காலத்தில் நான்கு கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இந்தக் கொலைகள் குறித்து அப்பகுதி மக்களால் புகார்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், இன்றுவரைக்கும் குற்றவாளிகள் மீது நடவடிக்கை இல்லை.

அதைப் போல, திருவையாறு வட்டாரத்தில் சாமானியப்பட்ட ஒரு தாய்—ஒரு சப் இன்ஸ்பெக்டரால் தனக்கு வேண்டியவர்களுக்கு சலுகை செய்ய வேண்டுமென்பதற்காக அப்பெண், அவருடைய கணவன், மகன் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். சட்ட விரோதமாக காவல் நிலையத்தில் வைத்து நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் மீது புகார் செய்யப்பட்டும் இன்று வரையில் நடவடிக்கை உண்டா என்றால் இல்லை. இது குறித்தும் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் லாக்கப்பில் இறந்ததைப் பற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள் சில குற்றங்களை முன் வைக்கின்றபொழுது ஆளுகின்ற நண்பர்கள் வெகு சூடான முறையில் எதிர் கருத்துக்களை, வாதங்களை முன்வைக்கிறார்களே தவிர அவற்றில் நடைபெற்றிருக்கின்ற உண்மைகளைப் பற்றி அக்கறை செலுத்துகிறார்களா? நீங்கள் ஆய்வுரையிலே சொல்லுகின்றீர்கள், மக்களின் உயிரைப் பாதுகாக்கின்ற கடமை இந்த மாநில அரசுக்கு உண்டு என்று.

காரைக்குடியிலே சோலை என்ற 20 வயது இளைஞன் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திலே அடைக்கப்பட்டு, மயக்க முற்ற நிலையில் மதுரை மருத்துவமனைகளில் மரணம் அடைந்துவிட்டார். ஆனால், காக்கா வலிப்பினாலே மரணம் அடைந்ததாக அவனைப் பெற்றவர்களிடமிருந்து நிர்ப்பந்தம் செய்து எழுதி வாங்கிவிட்டது போலீஸ். பசு வதைக்காகக் குரல் கொடுக்கிறோம்.





ஆனால், இப்படி காவல் துறையில் மனிதர்கள் வதைக்கப்படுகிறார்கள்—காவல் நிலையங்களின் சித்திரவதை முகாம்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. காவல் நிலையங்களில் பல சித்திரவதைகள் நடைபெறுகின்றன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் கடந்த காலத்தில் பலர் காவல் துறையால் பாதிக்கப்படவில்லையா? அவர்கள்மீது பொய் வழக்கு போடப்படவில்லையா? கடந்த காலத்தில் இவர்கள் தாக்கப்படவில்லையா? தாக்கப்பட்டார்கள். நான் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் சொல்ல விரும்புவது, காவல் துறையின் அடிப்படைக் கொள்கைகளை மாற்ற வேண்டும்; காவல் துறையின் பயிற்சி முறை அடியோடு மாற வேண்டும்; மக்களை அடிப்பதற்கே அவர்களுக்கு இன்றைக்கும் கற்றுக்கொடுக்கப்படுகிறது; ஒரு பொம்மையை எதிரே வைத்து அதை மனிதர்களாகக் கருதி அதை அடிக்கின்ற முறையில் மக்களை அடிப்பதற்கே பயிற்சி கொடுக்கலாமா? இந்த நாகரீக உலகத்தில் இத்தகைய பயிற்சி முறை மாற வேண்டாமா? பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட கோட் இன்று வரையில் நீடிக்கிறதே, நிலைக்கிறதே. அது மாற்றப்பட்டால்தான் நல்லது. அவர்களுக்குத் தரப்படுகின்ற பயிற்சி முறையில் மனிதத்தன்மை நிறைந்த முறையில் மாற்ற வேண்டும். இங்கே கூட ஆய்வுரையிலே இந்த அரசு சொல்லியிருக்கிறது, அறிவியல் கருவிகள் காவலருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக. அறிவியல் கருவிகள் மட்டும் போதாது. அறிவியல் கருத்துக்களும் வேண்டும்; மனிதாபிமானத் தன்மையோடுகூடிய அறிவியல் கருத்து வேண்டும். அறிவியல் கருவிகள் குற்றங்களைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், வளர்ந்து வருகின்ற இன்றைய நாகரீக உலகத்திற்குப் பொருத்தமுள்ள, மனிதாபிமானமுள்ள அறிவியல் கருத்துக்களால்தான் இந்த முறை மாறும். அப்படி மாற்றுவதற்குரிய நடைமுறை இந்தக் கொள்கை அறிக்கையிலே இல்லை என்பதை நான் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உடிஹூர் பற்றி முன்னரே நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்திலே டி. கல்லுப்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பரமசிவம் என்பவரும், காஜா மொகைதீன் என்பவரும் நியாயம் கேட்கச் சென்றதற்காக போலீசார் காவல் நிலையத்திலேயே தடிகொண்டு தாக்குதல் செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு வருகிறவர்களை தாக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்?

பொய் வழக்குகளைப் பற்றி நண்பர்கள் சொன்னார்கள். போலீஸ் என்ன செய்யும்? நியாயம் கேட்கப் போனால், போலீஸ் நிலையத்தைத் தாக்க வந்ததாகக் கூட பொய் வழக்கு போடுவார்கள். காரியாப்பட்டிக்கு அருகே துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. ஆளுங்கட்சி நண்பர்கள்கூடச் சொன்னார்களே, துப்பாக்கிச் சூட்டைப்பற்றி. என்ன காரணத்தினால் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது? நான் திருடவில்லை என்று சொன்னாலுங்கூட, திருட இந்தப் போலீஸ் நிர்பந்திக்கிறதா? திருட்டுத் தொழிலையே விட்டுவிட்டவர்களைக்கூட, இவர்களுக்கு மாதந்தோறும் வழக்கு வேண்டுமென்பதற்காக இவர்களுடைய பிடரியைப் பிடித்து திருட உந்தித் தள்ளுகிறதா? குற்றவாளிகளை கண்டிக்கிறார்களே, குற்றத்தை இயல்பாகக் கொண்டவர்கள் யாராவது பிறக்கிறார்களா? குற்றத்தை இயல்பாகக் கொண்ட மனிதன் உண்டா? குற்றத்தைச் செய்யவில்லை என்றால் நீ வாழ முடியாது என்று நிர்ப்பந்திக்கிற, குற்ற உணர்வைத் தூண்டுகிற இந்தச் சமூகந்தான் குற்றவாளி. ஆகவே, சமுதாயம் குற்றம் செய்யத் தூண்டுகிறது என்கிறபொழுது அந்தக் குற்றத் தடுப்பு முறைகளிலே மாற்றங்கள் வரவேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இராஜபாளையத்தில் சுப்புராஜ் காட்டன் மில் தொழிலாளர்கள் சங்கத்தில் சேர்ந்ததற்கு இந்தக் காவல் துறையின் பங்கு என்ன? காவல்துறை முதலாளிகளுக்கு ஆதரவாகத்தான் செயல்படுகிறது. பயன்படுத்தப்படுகிறது. சங்கத்தில் சேர்ந்ததற்காக 95 தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்தால், உண்ணாவிரதப் பந்தலிலேயே, பட்டப்பகலில், முதலாளிகளின் ரௌடிகள் புகுந்து சோடா பாட்டில் வீசுகிறார்கள்! உள்ளே இருக்கிறவர் தாக்கப்படுகிறார், காயம் அடைந்திருக்கிறார். இது குறித்து, இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்திலே புகார் கொடுத்தால், எஸ். ஐ. யாரோடு இருக்கிறார்? முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு, தொழிலாளர்களுக்கு எதிராக வழக்குப் போடுகிறார்! இராஜபாளையத்தில் நடந்திருக்கிறது. இது நியாயம் தானா? இத்தகைய பொய் வழக்குகள் போடப்படுவது தடுக்கப்படவேண்டாமா? இடம்மாறிப் போய், ஆளுகிற கட்சியிலே இருக்கிறோம் என்பதால், இந்தக் காவல் துறையை நீங்கள் நியாயப்படுத்தக் கூடாது. காவல் துறையின் தனிப்பட்ட அதிகாரிகள் மீது எனக்கு வெறுப்பு இல்லை. தனிப்பட்ட நபர்கள் மீது வெறுப்பு இல்லை. அடிப்படையிலேயே, இந்தக் காவல் துறையின் செயல் முறைகளை அதற்குரிய அடிப்படைகளை மாற்ற வேண்டும். அந்த அடிப்படைகளை மாற்றுவதற்குரிய கொள்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.





காவலர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் முறைப்படி வழங்கப்படவில்லையென்பதை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கேயே பேரவைக்கு காவலர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். காவலர்களுக்கு நியாயம் வழங்குவதாகச் சொல்கிற இந்த அரசு, பேரவையைச் சுற்றி பாதுகாக்கிற காவலர்களுக்கு நியாயம் வழங்கியிருக்கிறதா? அவர்களுடைய கோரிக்கைகளைக் காது கொடுத்து கேட்டிருக்கிறீர்களா? ஓவர் டைம் செய்தால், சம்பளம் ரூ. 7 தானா? இது நியாயம் தானா? சட்டம் அப்படித் தான் சொல்கிறதா? ஓவர் டைமிற்குரிய சட்ட விதிகள் என்ன?

அதே போல் உணவுப் பொருள் வழங்குகிறீர்கள். உணவுப் பொருள் வழங்குவது என்பது பிரச்சார உத்திதானே தவிர, தேவைக்கு போதுமானதோ, தரமானதோ அல்ல. பேரவைத் துணைத் தலைவர் அனுமதித்தால் அவர்களுக்கு வழங்குகிற அரிசியைக் கூட நான் பேரவையில் காண்பிக்கத் தயார். அவ்வளவு நாறிக் கிடக்கிறது. இத்தகைய மோசமான அரிசியைத் தானே அந்தக் காவலர்களுக்கு இன்றைக்கு வழங்குகிறீர்கள். இது மாற்றப்படவேண்டும்.

அவர்களுக்குரிய மெடிக்கல் அலவன்ஸ் இன்றைக்கு வழங்கப்படவில்லை. வாரத்தில் எல்லோருக்கும் 2 நாள் விடுமுறை. ஆனால் காவலர்கள் வாரம் முழுவதும் தொடர்ந்து பணி புரிய வேண்டுமா? ஆகவே, இவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று சொல்லி, இதோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வரும் எங்களது இதய தெய்வமாகிய மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்பிலே இயங்கி வருகிற காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் இன்றைய தினமும் இந்த மானியக் கோரிக்கைகளின் கொள்கைக் குறிப்பேடுகளின் மீது இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் கருத்துக்களை எல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சகோதரர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசினார்கள். அதற்கு முன்னாலே, எங்கள் அணியைச் சேர்ந்த அருமை அண்ணன் முசிறியார் அவர்களும், அதற்கு முன்னாலே எங்கள் இயக்கத்திலே இருக்கிற மாண்புமிகு

உறுப்பினர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும் இன்னும் பலபேர்களும் பேசினார்கள். எதிர்க்கட்சியிலே கிட்டத் தட்ட 9 ஆண்டுக்காலம், அல்லது, குறிப்பாகச் சொல்ல வேண்டு மேயானால், 7½ ஆண்டுக் காலம் ஆட்சி நடத்திய, மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஆட்சி இயங்கிய காலத் தில், இங்கே நடந்த பலவற்றை உறுப்பினர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-10)

அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அதாவது எங்கள் அணியைச் சேர்ந்தவர்கள் பல கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டி, இங்கே குறிப்பாக எடுத்து வைத்தார்கள். அதற் குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் திரும்பத் திரும்ப அது செக்கிழுப்பதுபோல ஆகிவிடும். மாடு செக்கிழுப் பதை நாம் எல்லாம் பார்த்திருக்கிறோம். சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருக்கும். ஏற்கெனவே எங்கள் அணியினர் பதில் சொல்லிவிட்டதால் நான் மீண்டும் அதுபற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

குறிப்பாக, இங்கே யார்யார் காவல் துறையை சரியாக நடத்தி னார்கள் என்று சொன்னார்கள், நான் ஒன்றை மட்டும் எதிர்க் கட்சியில் இருந்து இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிற நண்பர் களுக்கு, குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்திருக்கிறவர் களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்திருக்கிற உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்குப் பிறகு தொழிலாளர்களுடைய நிலையிலே எந்த அளவுக்கு அமைதி வளர்ந்து வந்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் நிச்சயமாக நேரடியாக ஒத்துக்கொள்ளாவிட்டாலும் மறைமுகமாகவாவது ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அந்த வகையிலே 1980-க்குப் பின்னாலே எடுத்து கொண்டால் கூட தொழிலாளர்களுடைய நிலை மேம்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து, இந்த அரசு நல்லதொரு திட்டத்திற்கு வழிவகுத்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் தமிழ்நாட்டில் பல இடங்களில் போராட்டங்கள் நடந்தாலும் இன்னும் சொல்லப்போனால் கதவு அடைப்புகள் ஏற்பட்டாலும் அதை எல்லாம் நிவர்த்தி செய்து உடனடியாகத் திறக்கப்பட்டிருக்கிறது. என்பதை இங்கே தெளிவாக, உறுதியாகச் சொல்ல முடியும்.



அந்த வகையிலே திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த மட்டி லும் தொழிலாளர் கொள்ளையிலே எந்தவிதமான இடர்ப்பாடு களும் இல்லாமல் அமைதியான முறையான முறையிலே நடந்துக் கொண்டிருந்தது. 1984 ஆம் ஆண்டுக்குப் முன்னாலே சொல் கிறேன். அந்த நேரத்தில் பெல் தொழிற்சாலை என்று மிகப் பெரும் நிறுவனத்தில் எந்தவிதமான தகராறும் இல்லாமல், தொழிலாளர்கள் தகராறு இல்லாமல் நடந்துகொண்டிருந்த போது திடீரென்று தமிழக அரசு தொழிலாளர் விரோதப் போக்கு என்று அறிவித்து தமிழ்நாடு பூராவும் 12-ந் தேதி அர்த் தால் நடத்த வேண்டுமென்ற கொள்கையை அறிவித்து, அந்தக் கொள்கையின் அடிப்படையில் 12—9—1984 அன்று திருச்சி மாவட்டத்திலே அர்த்தால் நடத்தினார்கள். அப்படி அர்த்தாலை நடத்துகிறபோது தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு புறக்கணிக்கிறது என்பதை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அர்த்தாலில் நடுரோட்டிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை கல்லால் அடிக்க வேண்டுமென்ற ஒரு முடிவை அந்த இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் வைத்திருந்தார்கள் என் பதைப்பற்றி பின்னாலே நான் விளக்கமாகச் சொல்ல விரும்பு கிறேன்.

தமிழக அரசு தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கடைப் பிடிக்கிறது, அதனால் தமிழ்நாடு பூராவும் அர்த்தால் என்று அறிவித்தார்கள். திருச்சியிலிருந்து தஞ்சைக்குச் செல்கிற நெடுஞ்சாலையில் ஏதாவது தொழிற்சாலை இருக்கிறதா ? அந்தப் பகுதியிலே இருக்கிற தொழிற்சாலைக்கும் ரோட்டிற்கும் கிட்டத்தட்ட 4 பர்லாங் தூரம் இருக்கிறது. அதற்கு அப்பாலே நீங்கள் அர்த்தால் என்று சொல்லி, இந்த அரசின் கொள்கையைக் கண்டிக்கிறோம் என்று சொல்லி, திருச்சியிலிருந்து தஞ்சைக்கும், தஞ்சையிலிருந்து திருச்சிக்கும் செல்கிற பேருந்துகளில் வருகிற பொதுமக்களை கல்லால் அடித்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கிற திருச்சிக்கு அருகிலே தேவராயநேரி என்ற ஊருக்குப் பக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் பேருந்துகளில் செல்லக்கூடிய பொதுமக்களை வழிமறித்து, கல் லால் அடித்து, அதன் காரணமாக ஒரு சிறுவன் உட்பட இரண்டு பேர் படுகாயம் அடைந்து அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் போதே ஒருவர் இறந்துவிட்டார், மற்றவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த விவரத்தை இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். நான் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் சொல்கிறேன். இந்தச் செயலுக்கும் தொழிலாளர் விரோதக் கொள்கைக்கும் என்ன சம்பந்தம் இருக் கிறது ?

[திரு. எம். அண்ணாதாசன்] [1985 ஜூலை 9

தொழிலாளர் விரோதக் கொள்கை என்றால் ரோட்டிலே போகின்ற மக்களை அடிப்பது தான் அந்தக் கொள்கையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இது 12-ஆம் தேதி நடந்த நிகழ்ச்சி. 13-ஆம் தேதி இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டன என்று தெரிந்த உடனே மாண்புமிகு எங்களுடைய புரட்சி தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் விடுப்பிலே இருந்த சூப்பிரன்டென்டன்ட் ஆஃப் போலீசை அழைத்து உடனடியாகச் சென்று நீங்கள் அங்கே என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து அங்கே அமைதி ஏற்படுத்துங்கள் என்று சொல்லி அங்கே அனுப்பி வைத்தார்கள். பாய்லர் தொழிற்சாலை அதிகாரிகள் சொல்லி அப்படி போலீஸ் அதிகாரிகள் அங்கே வருகிறார்கள் என்று தெரிந்தவுடன் அதற்கு முன்னதாக அந்த இடத்திலே 8,000 தொழிலாளர்கள் ஒரு ஷிப்டிலே வேலை பார்க்கக்கூடிய அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும், கம்யூனிஸ்ட் கட்சியினைச் சேர்ந்த தொழிலாளர்களும் அங்கே எந்தவிதமான அமைதியான சூழ்நிலைக்கும் அப்பாலே திடீரென்று கூட்டத்தைக் கூட்டி காரை விட்டு இறங்கிய எஸ்.பி. அவர்களையும், அவர்களுக்குப் பின்னாலே இருந்த துணை அதிகாரிகளையும் தாக்கி அதன் காரணத்தால் அந்த எஸ்.பி. அவர்களின் கையிலே அடிபட்டு கையே முறிந்து ரத்த வெள்ளம் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது.

3, 4 பேர்கள் அப்படியே அடிபட்டுக் கிடக்கிறார்கள். அந்த எஸ்.பி. நினைத்திருந்தால், டி.ஐ.ஜி. நினைத்திருந்தால் சூட்டிங் ஆர்டர் கொடுத்திருக்க முடியும். தனக்கே ஆபத்து என்று வரும்போது ஒரு தலைமைக் காவல் அதிகாரிக்கு அந்த சூட்டிங் ஆர்டர் கொடுப்பதற்கு நிச்சயமாக அதிகாரம் உண்டு. ஆனால் அந்த அதிகாரி அந்த அடியையும், வாங்கிக்கொண்டு, கை முறிவையும் ஏற்றுக் கொண்டு ரத்த வெள்ளத்தில் நின்று கொண்டிருந்த நேரத்தில் போலீஸ் படை விரைந்தது. இந்த நேரத்தில் நான் அங்கே வேகமாகச் சென்றுகொண்டு இருந்தேன். நான் உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு அங்கிருந்து தகவல் கொடுத்தேன். உடனடியாக எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் போலீஸ் அதிகாரியை அழைத்து எந்தவிதமான அசம்பாவிதமும் நடந்துவிடக்கூடாது; எனவே போலீஸ் படை வருவதை உடனடியாகத் திருப்பி அனுப்புங்கள் என்று டி.ஐ.ஜி.-க்குச் சொல்லி உடனடியாக அந்தப் போலீஸ் படை அத்தனையும் வாபஸ் வாங்கிக் கொண்டது. அடி வாங்கியவர்கள் ஆஸ்பத்திரியிலே இருந்தார்கள். இதை எல்லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால்........



1985 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. எம். அண்ணாதாசன் : முக்கியமான என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். அப்படி அந்த அடியினை போலீஸ் அதிகாரிகள் வாங்கிக்கொண்டாலும் கூட வேறு எந்தவிதமான ஆபத்தான சூழ்நிலையும் வந்துவிடக்கூடாது என்று எண்ணி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தப் படையினை வாபஸ் வாங்க ஏற்பாடு செய்தார்கள். எனவே எப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையில் போலீஸ் துறையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருகிறார்கள் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ட்ரைக்கிலே ஈடுபட்டவர்கள் அதுமட்டும் செய்யவில்லை, பல பஸ்களை எரித்தார்கள் ; இரண்டு ஜீப்களை எரித்து வீணாக்கினார்கள் ; போதாது என்று ஒரு பள்ளிக் கூடத்தையும் எரித்தார்கள்; அதுவும் போதாது என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மன்றத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். இவ்வளவுக்கும் அப்பால் போலீஸ் துறை அந்தத் தொழிலாளர்கள் மீது வேண்டுமென்று பொய்க் குற்றச்சாட்டு எதையும் இதுகாறும் எந்த இடத்திலும் போடவில்லை என்பதை இங்கே நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதைச் சொல்லி

* * * * * *

நாங்கள் எவ்வளவோ திறமையாக நிர்வாகத்தை நடத்தினோம் என்று சொல்கிறார்கள். அவ்வாறு சொல்வது நியாயம்தானா என்பதை இந்த அவை புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் நான் இதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேக்ட்ஸ் சொல்கின்றபோது அது தவறு என்று சொல்லவில்லை. எதிர்க்கட்சியினர் என்று சொல்லும்போது எங்கள் கட்சியினரின் பெயர்களை எல்லாம் ஆரம்பத்திலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே

* * * * * *

அதை நான் வன்மையாக மறுக்கிறேன். அந்தப் பேச்சு அவைக் குறிப்பில் இருக்கக்கூடாது. அது தப்பு.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1985 ஜூலை 9

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்பதை நீக்கிவிட் உத்தரவிடுகிறேன்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்பதைக் குறை கூறினார்கள். ஆனால் ஆளும் கட்சியினர் அதற்குப் பாதுகாப்பு அளித்தனர் என்ற குற்றச்சாட்டை இங்கே சொன்னார்களே, அது இந்த அவையிலே இருக்கலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, நான் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. நான் சாட்டுகின்ற குற்றம் ஓரளவுக்காவது உண்மை இருந்தால்தான் சொல்வேன். மேலும் சொல்கிறேன். 12-ஆம் தேதி ஸ்ட்ரைக், ஹர்த்தால் 11-ஆம் தேதி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருச்சியிலே உட்கார்ந்து பாய்லர் தொழிற்சாலையில் இருக்கின்ற அத்தனை யூனியன்களுடைய தலைவர்களையும் வரவழைத்துப் பேசியிருக்கிறார்கள் என்பதை சி. ஐ. டி. நன்கு தெரிந்திருப்பார்கள். அதை வேண்டுமானால் நீங்கள் தெரிந்துகொள்ளலாம் என்பதையும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–20)

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சி.ஐ.டி. களுடைய ரிப்போர்ட்டுகள் தெளிவாக இருக்கின்றன. கலைஞர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து திருச்சியிலே அராஜகத்தையும் வன்முறையையும் தூண்டிவிட்டார்கள் என்பதற்கு என்று சொன்னார்கள். அப்படி ஆதாரம் இருக்குமானால் அந்த ரிப்போர்ட்டுக்களை காண்பித்து சொல்லட்டும். அல்லது குறிப்பிட்டு சொல்லட்டும். இல்லை என்றால் சி.ஐ.டி. ரிப்போர்ட்டு இருக்கிறது என்று சொல்லி நாங்கள் உங்களுடைய பெயர்களை குறிப்பிட்டு திரும்பச்சொல்ல முடியும். ஆகவே, ஆதாரம் இருந்தால் சொல்லட்டும், இல்லை என்றால், மோட்டிவ்வாகச் சொல்வார்கள் என்று........ (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சந்தித்துப்பேசினார்கள் என்றுதான் சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்த செய்தியைச் சொன்னார்கள். அவ்வளவுதான் நீங்கள் பேசும்போது வேண்டுமானால் மறுத்து விட்டால் சரியாகப் போய் விடும்........(குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்.)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1985 ஜூலை 9]

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, சி.ஐ.டி. ரிப்போர்ட்டுகள் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆதரவாகவோ எதிராகவோ கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இரு சாராருக்கும் உரிமை உண்டு. எனவே, அவர் சொன்னதை நான் பிறகு மறுக்கலாம். அது வேறு விவகாரம். இருந்தாலும் நடைபெற்ற சம்பவம் இது என்று நான் கருதுகிறேன் என்று அவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. அதிலே நான் தலையிட விரும்பவில்லை. நான் அதைக் கேட்கவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள் திருச்சியிலே இப்படி தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து ஓட்டலிலே உட்கார்ந்து அராஜகத்திற்கும், வன்முறைக்கும் செய்கிற காரியங்களை செய்வதற்கு தூண்டிவிடுகிற முறையிலே பேசினார்கள் என்று சி.ஐ.டி. ரிப்போர்ட்டிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள்...........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தொழிலாளர்களை அழைத்துப் பேசினார்கள் என்றுதான் சொன்னார்.

**திரு. எம். அண்ணாதாசன் :** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசினார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது உண்மையா இல்லையா என்று அவர்கள் பேசும்போது சொல்லட்டும்........(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப் பேசினார் என்று சொல்லுகிறார்கள். அது வரையிலும் சரி. உறுப்பினர் அண்ணாதாசன் அவர்கள் சி.ஐ.டி. ரிப்போர்ட்டிலே அவ்வாறு இருந்தது என்று சொல்லவில்லை என்கிறார். சொல்லியிருந்தால் நீக்கிவிடலாம்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய கடமை அது. 13–ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஆனால், அதற்கு முன்னாலே தஞ்சாவூரிலே சோழனுடைய முடிசூட்டு விழாவிற்கு. 15 ஆம் தேதியோ அல்லது 16 ஆம் தேதியோ மாண்புமிகு பாரத பேரரசின் தலைவி, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அங்கே வருவதாக வால்-போஸ்ட்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. 14 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களை வரவேற்பதற்கு என்று அதிகப்படியான விளம்பரங்களுக்குச் சொல்லி, அவர்கள் வருவது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்திலேதோன்—13–ஆம் தேதியன்று 12–ஆம் தேதி நிகழ்ச்சிகள் நடந்து முடிந்து 13 ஆம் தேதியன்று, போலீஸ் அதிகாரிகள் அங்கே தாக்கி மண்டையை உடைத்து கைகளை உடைத்து ரத்தம் சொட்ட சொட்ட ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எனக்கு ஏற்பட்ட சந்தேகம் அது, அதனால்தான் அதைக் குறிப்பிட்டு காட்டுவதற்காக அதைச் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

ஆகவே, தொழிலாளர்கள் மேல் நல்ல அக்கறை உள்ள அரசாக இருந்தக் காரணத்தினால்தான் அவர்களை பதிலுக்கு ஷூட்டிங் ஆர்டர் கொடுத்து, அவர்களை அடித்து நொறுக்காமல் யாருக்கும் எந்த ஆபத்தும் இல்லாமல், ஒரு தொழிலாளிக்குக்கூட எந்தவிதமான காயமும் இல்லாமல், அவர்களை காப்பாற்றும் வகையில் நடந்துக் கொண்ட அரசுதான் இந்த அரசு. அந்தப், பண்புகளை பாதுகாத்துக்கொண்டிருக்கிற தலைவர் தான் எங்கள் தலைவர் தான் என்று சுட்டிக் காட்டி, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் சில நல்ல காரியங்களும் இந்தப் போலீஸ் துறைக்கு செய்திருக்கிறது என்பதை யாவரும் ஏற்று கொள்வார்கள் என்று நம்புகிறேன். புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான்................

(மணியடிக்கப் பெற்றது.)

*திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த சபையின் முன்னவர் அவர்களால் போலீஸ் துறைக்கு மானியம் ஒதுக்க வேண்டும் என்று முன் மொழியப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின்மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். தமிழகத்திலே போலீஸ் துறை நல்ல முறையிலே செயலாற்றி வருகிறது என்பதிலே நாங்களும் ஒருமித்த கருத்தோடு அந்தப் பணிகளை வரவேற்கிறோம். இன்றைக்கு அரசாங்கத்திலே இருக்கிற நிர்வாக இலாக்காக்களிலே போலீஸ் துறைதான் முக்கியமான துறையாகும். காரணம் இன்றைக்கு சமுதாயத்திலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பு, சமுதாயம் பாதுகாப்பாக, பயமின்றி, தீங்கிழைக்கப்படாமல் பார்த்துக் கொள்ள, வேண்டிய பொறுப்பு போலீஸ் துறைக்கு இருக்கிறது என்பதை நாமெல்லாம் உணர்கிறோம். ஆகவே, இந்தத் துறைக்கு அரசாங்கத் துறைகளில் ஒரு தனி முக்கியத்துவம் இருக்கிறது. ஆகவே தான் அரசாங்கம் போலீஸ் துறைக்கு எல்லாவிதமான நன்மைகளையும், வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்காக மாநில அளவிலே மாவட்ட அளவிலே, வட்ட அளவிலே எல்லா வசதிகளுடன் நிலையங்களை ஏற்படுத்தி, வாகன வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொலை பேசி வசதி, வயர்லஸ் போன்ற எல்லா வசதிகளையும் அந்த நிலையங்களுக்குச் செய்து கொடுத்து அரசாங்கம் இந்தத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறது. அதேபோல இந்தத் துறையில் பணியாற்றக் கூடிய அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நல்ல ஊதியம் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்களைக் கொடுப்பதற்கு பல ரேஷன் கடைகளை திறந்து வசதிகளைச் செய்திருக்கிறது. ஆகவே, உணவுப் பொருள்களை





வழங்குவதிலும், உடையை வழங்குவதிலும் இன்றைய நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக நல்ல முறையில் பணிகளைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனை நாங்கள் எல்லோரும் பாராட்டுகிறோம். இந்தத் துறைக்கு இவ்வளவு வசதிகளை செய்து கொடுப்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இந்தத் துறையினர் குறையில்லாத வகையில் அவர்களுடைய குடும்ப வாழ்க்கையை நடத்தினால் தான் அவர்கள் நிறைவோடு இருந்தால்தான் சமுதாயத்தில் சட்டம் ஒழுங்கை நல்ல முறையில் அவர்கள் பராமரிக்க முடியும்.

இன்றைக்குத் தமிழகத்தில் எவ்வளவு தான் சட்டம் ஒழுங்கை தீவிரமாக செய்தாலும், மரியாதைக்குரிய நண்பர் முசிறிப்புத்தன் அவர்கள் கூறியதைப் போல, இன்றைக்கு அதிலும் பல்வேறு இடையூறுகள் இருக்கின்றன. இன்றைக்கு தமிழகத்தில் இந்தத் துறையில் ஒரு தலைமை அதிகாரி இருந்த இடத்தில் இரண்டு தலைமை அதிகாரிகளாகவும், அதற்கு கீழே தலைமை அதிகாரிகளாக நான்கு டி.ஐ.ஜி.க்கள் இருந்த இடத்தில் 10 பேர்களுக்கு மேலாக இன்றைக்கு தலைமை அதிகாரிகளை விஸ்தரித்து காரியங்களைச் செய்திருப்பது, நிர்வாக வசதிகளைப் பொறுத்து இன்றைக்கு மாநில அரசு அந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இந்த வசதிகள் கிராமப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும். குற்றங்கள் அதிகமாகி இருப்பதற்கு காரணம் முக்கியமாக ஒன்றைச் சொல்லலாம். நகர்ப்புறங்களைக் காட்டிலும், கிராமப் பகுதிகளில் இன்றைக்கு மது அருந்த அனுமதித்திருப்பதன் காரணமாக குற்றங்கள் விளைவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எப்படியாவது மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதனை கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும், என்னுடைய கட்சியின் சார்பாக இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிற மாநிலத்தில் மதுவிலக்கு இல்லாமல் இருக்கிறதென்று சொல்வார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி அந்த மாநிலத்தின், அந்தப் பிரதேசத்தின் சூழ்நிலை மற்றும் அமைப்புக்களை ஒட்டி அந்த நிலையை வைத்திருக்கிறது. நம்முடைய மாநிலம் தான் இந்திய தேசத்திலேயே மதுவிலக்கை அமலாக்கி மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக நடத்திக் காட்டிய மாநிலமாகும். அந்த மதுவிலக்கினால் ஏற்படுகிற இழப்பைக் கூட சரிக்கட்டுவதற்கு இன்றைக்குக் காமதேனு என்று சொல்லப்படுகிற சேல்ஸ் டாக்சை நம்முடைய மரியாதைக்குரிய இராஜாஜி அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அரசாங்கத்திற்கு வருவாய் வருவதற்கு வழி செய்து, கொடுத்தார்கள். ஆகவே, இன்றைய நிலையில் அரசிற்கு இதனால் எவ்வளவு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும், ஏறக்குறைய மதுவிலக்கைத் தளர்த்தினால் 150 கோடி ரூபாய்

வருமானம் அரசிற்கு வருகிறதென்றால், இன்றைக்கு 3,500கோடி ரூபாய் அளவில் பட்ஜெட் போடுகிற நம்முடைய அரசுக்கு இந்த 150 கோடி ரூபாய் என்று சொல்வது பெரிய இழப்பு இல்லை. ஆகவே, மதுவிலக்கை அமுலாக்கினால் சமுதாயத்தில் ஏற்படுகிற அநீதிகள், கொடுமைகள், குற்றங்கள், கொலைகள், களவாடுதல், கற்பழிப்புகள் போன்ற தீமைகள் எல்லாம் குறைவதற்கு ஏதுவாக இருக்கும். புரட்சித் தலைவர் அவர்கள் சில சமயங்களில் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மதுவிலக்கைக் கொண்டு வராததன் காரணம் கள்ளச் சாராயம் அதிகமாக ஏற்பட்டு, சமுதாயத்தில் அதிகமான அளவில் அவதிகள் ஏற்படும் என்று சொன்னார்கள். அந்த அளவிற்குக் கள்ளச் சாராயம் இருக்கத் தான் செய்கிறது. இன்றைக்கு மது விலக்கு இல்லாமல் இருப்பதன் காரணமாக, கள்ளச் சாராயத்திலேதான், இன்றைக்கு சாராய வியாபாரிகள் பலர் பெரிய பணக்காரர்களாக ஆகிக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு அரசு நடத்திக் கொண்டு இருக்கக்கூடிய இந்தச் சாராய வியாபாரத்திலே, கள்ளச் சாராயம் மூலமாகத்தான் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் நாம் எண்ணிப்பார்த்தால், கள்ளச் சாராயம் என்பது சமுதாயத்தில் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். ஏதோ 5 சதவீதமோ, அல்லது 10 சதவீதமோ, அதை ஒழிக்கலாமே தவிர, முற்றிலுமாக ஒழிக்க முடியாது. இதன் மூலமாக ஏற்படுகின்ற கொடுமைகளால் சமுதாயம் கெட்டுப் போகும்.

அடுத்து, கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் அதுவும் குறிப்பாக கல்லூரிகளில் படிக்கக்கூடிய பெண்கள் எல்லாம் இன்றைக்கு இதற்கு அடிமையாக ஆவதாக பத்திரிகையிலே நாம் பார்க்கிறோம். அதன் காரணமாக தீய சக்திகள் சமுதாயத்திலே ஏற்படுகிறது. எனவே அவைகளை எல்லாம் காவல் துறையினர் கண்காணித்து, இப்படிப்பட்ட அநீதிகளைப் போக்குவதற்கு அவர்களுக்கு பிரிஹேண்டாகக்கூட அவர்களுக்கு கொடுக்க வேண்டும். சட்டதிட்டங்களில், சமுதாயத்திலே இன்னும் அவர்களுக்குத் தேவையான சலுகைகளை அளித்தால் நல்லதாக இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் நக்சலைட் இயக்கம் சில ஆண்டுகளுக்கு முன்னாலே கொடுமையான காரியங்களைச் செய்து கொண்டு இருந்ததை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த நக்சல்பாரிகள் இயக்கத்தால் பல கொடுமைகள், கொள்ளைகள், கொலைகள் பல ஏற்பட்டன. எங்களுடைய காங்கிரஸ் கட்சியைச்



சேர்ந்த தாதம்பட்டி வெள்ளைய கவுண்டர் அவர்கள் காலை 7—30 மணிக்கு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். அதுமாத்திரமல்ல, நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் தலைவராக இருந்தவர்களைப் பிடித்து வந்து போலீஸ் அதிகாரிகளை விடியற்காலை 6 மணிக்கு வெடி குண்டு வைத்து, அந்த வெடி குண்டின் காரணமாக அந்த போலீஸ் அதிகாரிகள் இறந்தார்கள். பல போலீஸ் காவலர்கள் ஆஸ்பத்திரிகளிலே இருந்து, பல துன்பங்களுக்கு ஆளாகி வைத்திய சிகிச்சை பெற்று, இவர்கள் இரண்டு மாத காலமாக இருந்து பின்பு, வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அதுமாத்திரம் அல்ல. இதற்கு அரசாங்கம் நல்ல தீவிரமான நடவடிக்கை எடுத்து, நக்சல்பாரிகள் இயக்கத்தினுடைய நடவடிக்கையே இல்லாமல் குறைத்து இருந்தார்கள். ஆனால், அங்கேயிருந்த போலீஸ் அதிகாரிகள் எல்லாம் மாற்றப்பட்டு, தேவாரம் போன்ற டி.ஐ.ஜிக்கள் எல்லாம் மாற்றப்பட்டு, இருக்கிறார்கள். இன்றைக்கு அந்த இயக்கத்திலே இருந்து கொள்ளை அடித்தவர்கள், அதிலே ஈடுபட்டு இருந்தவர்கள், பல பேர்கள் மீது வழக்குகள் போட்டு, சிறையிலே போட்டு, அந்த இயக்கத்தினால் எந்தக் கொடூரச் செயல்களும், அராஜகச் செயல்களும் இல்லாமல், கொள்ளை அடிப்பது இல்லாமல், இன்றைக்கு தடுத்திருக்கிறார்கள். எங்களுடைய பகுதியிலேயும், வட ஆர்க்காடு மாவட்டத்திலேயும் ஜோலார்பேட்டை, தர்மபுரி மாவட்டம், இன்னும் ஹரூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி தாலுக்கா, தர்மபுரி தாலுக்கா போன்ற பகுதிகளில் அவர்களுடைய நடமாட்டம் அதிகமாக முன்பு இருந்தது. அவர்கள் எல்லாம் பகல் கொள்ளை அடித்தார்கள். பகல் கொள்ளை என்றால் பயங்கரமாக கொள்ளை, ஒரு இடத்திலிருந்து கும்பலாக லாரிகளிலே வருவார்கள். தென்னந்தோப்பிலே லாரியை நிறுத்தி, தேங்காய்களை எல்லாம் பறித்துக் கொண்டு போய்விடுவார்கள். அதே போல் மாங்காய்த் தோப்பிலே போய், லாரியை நிறுத்தி வைத்து, மாங்காய்களை பறித்து லாரிகளிலே லோடு செய்து கொண்டு போய்விடுவார்கள். அதைப்போல பருத்தி நிலத்திலே போய் பருத்தியை எல்லாம் பறித்து ஏற்றிக்கொண்டு போகக் கூடிய பகல் கொள்ளைகளை பயங்கரமாக நடத்திக்கொண்டு இருந்தார்கள். இதிலே ஒளிவு மறைவு இல்லை. பயங்கரமாக, கம்யூனிஸ்டுகள், அராஜகவாதிகள், அன்றைக்கு நக்சலைட் இயக்கம் என்ற பெயரில் கொடூரங்களைச் செய்தது. எனவே இவைகளை எல்லாம் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை எல்லாம், கொள்ளை அடித்தவர்களை எல்லாம், தவறு செய்தவர்களை எல்லாம் தடுத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவைகள் எல்லாம் இன்றைக்குத் தடுக்கப்புட்டு, மக்களுக்கு ஓரளவிற்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. அப்படி இத்தகைய செயல்களிலே ஈடுபட்டவர்களுக்கு எல்லாம் வக்காலத்து வாங்கக் கூடிய

சில வக்கீல்களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மனு போட்டு, அந்த அதிகாரிகள் தவறு செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டி, இன்றைக்கு அவர்கள் எல்லாம் அந்தக் குற்றச் சாட்டு விசாரணையில் இருப்பதாக கூட நான் அறிகிறேன். அப்படி எல்லாம் செய்த தேவாரம் போன்ற அதிகாரிகளை எல்லாம் மாற்றிய பிறகு, இன்றைக்கு அந்தச் செயல்கள் எல்லாம் அங்கே தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது.

சமீப காலத்தில், பொம்மிடிக்கும், டேனிஷ்பேட்டைக்கும் மத்தியிலே இருக்கிற ரயில்வே லைனில், ரயிலைக் கவிழ்ப்பதற்காக, ரயில் பாதையிலே தீய சக்திகள், அராஜக சக்திகள், கொடூர சக்திகள், ரயில்வே பாதையிலே சதி செய்திருந்தார்கள்.

அதைத் துப்பறியும் இலாகா கண்டுபிடித்து அந்த பெரிய ஆபத்திலிருந்து பாதுகாத்தது. எங்களுடைய அரூர் தாலுக்காவில் கீரப்பட்டி, தாதரவலசை, வள்ளிம்துனை, தோல்தூக்கி, என்ற கிராமங்களில் எல்லாம் மலை வாழ் மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் கம்யூனிஸ்டுகள் போய் அங்கு இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்கும், விவசாயிகளுக்கும், விவசாயத்தில் பல இடையூறுகளை ஏற்படுத்தி சுபிட்சமாக இருக்கும் விவசாயிகளிடம் யாரும் கூலிக்கு போகக்கூடாது. பண்ணைக்குப் போகக் கூடாது, நிலத்தில் போய் கட்டாயமாக..................

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கம்யூனிஸ்டுகள் போய் செய்தார்கள் என்று ஜெனரலைஸ் செய்து சொல்லியிருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் என்று சொல்லும்போது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, நக்சலைட்டு கூட இருக்கிறார்கள். எல்லோரையும் சேர்த்து அவர் இந்த மாதிரி சொல்கிறாரா என்ன என்று தெரியவில்லை. அப்படி வந்தால் அது சரியாக இருக்காது. கம்யூனிஸ்டு என்று பொதுவாக சொல்லி எல்லாம் கொள்ளை அடிக்கிறார்கள் என்று வரக்கூடாது. அது சரியில்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்து இருக்கிறார்கள். ஆதாரத்தோடு சொல்கிறேன். அதற்கான புகார் மனுவை கூட தலைமை போலீஸ் அதிகாரியிடத்தில் கொடுத்து இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கூட கொடுத்து இருக்கிறோம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டு அதற்கான ஆதாரங்களை உங்களிடத்திலே சமர்ப்பிக்க வேண்டும்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுவாக புகார் செய்து இருக்கிறோம் என்று சொல்கிறார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள்தான் செய்தார்கள், அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள் என்று தலைமை போலீஸ் அதிகாரிக்கு புகார் செய்து இருக்கிறோம் என்று சொல்கிறார். (குறுக்கீடு) இங்கே எல்லா தரப்பிலும் பேசுகிறீர்கள், கொலை என்று காவல் துறையில் புகார் செய்தோம், அது இல்லை என்று அதிகாரி சொல்லிவிட்டார்கள் என்று பல பேர் இங்கே சொல்கிறீர்கள். அது போல அவர் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள் என்று தலைமை போலீஸ் அதிகாரிக்கு நாங்கள் புகார் செய்து இருக்கிறோம் என்று கூறுகிறார்.

It is a specific complaint. It is for the hon. Member to establish that there is a complaint.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்படி சொல்வதில் இருந்து இது வேறு ஒரு பக்கம் டைவர்ஷன் ஆகி விடக் கூடாது..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் மிக தெளிவாக சொல்லியிருக்கிறார், புகார் மனு கொடுத்து இருக்கிறோம் என்று.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கம்யூனிஸ்டு என்று ஜெனரலைஸ் செய்து சொல்லுவது சரியல்ல. இரண்டாவது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் இப்படி செய்தார்கள் என்று அவர்கள் ரிப்போர்ட் அனுப்புவது அவருடைய உரிமை அவர் செய்யட்டும். அப்படி ரிப்போர்ட் அனுப்பிய விஷயத்தை இந்த சபையில் அப்படிப்பட்ட காரியத்தை அவர்கள் செய்தார்கள் என்ற முடிவுக்கு வந்து இங்கே எப்படி சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: புகார் மனு கொடுத்து இருக்கிறோம் என்று சொல்கிறார். அதைக் கூட சொல்லுவது கூடாது என்றால் அது எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி செய்தார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள் கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அவர் கட்சியினர் செய்யவில்லை என்ப தற்கு அவர் கட்சியின் சார்பாக அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கூடுதலாக போய்விட்டார். பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல் கிறார்கள். (குறுக்கீடு).

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடு தான் பேசுகிறேன். ஆதாரம் இல்லாமல் பேசவில்லை. அது சம்பந்தமாக போலீசில் வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. அது விசாரணையில் இருக்கிறது. அங்கு விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் இடையில் போராட்டத்தை நடத்தி வேலைக்குப் போகக்கூடாது, பண்ணைக்குப் போகக் கூடாது, பண்ணை வேலைக்குப் போகக் கூடாது.

(பிற்பகல் 1–40)

பண்ணை மகசூலைத் திருடுவது, வாழைக்காயைத் திருடுவது பருத்தி மகசூலை எடுப்பது, மாட்டு திருட்டு செய்வது என்று இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் அங்கே நடைபெற்று, அது சம்பந்தமாக இன்னார் தான் தூண்டுதல் செய்கிறார்கள் என்று எழுதிக் கொடுத்தும் இருக்கிறோம். (குறுக்கீடு).

தலைவர் அவர்களே, நண்பர் ரமணி அவர்களைக் குறிப்பிட வில்லை. அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் தலைமை தாங்கி நடத்துகிறார்கள் என்பதை ஆதாரத்தோடு சொல்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர் தான் தலைமை தாங்கி நடத்தினார், நிரூபிக்கிறேன் என்று பொறுப் பேற்றுக்கொள்கிறார்.

திரு. கு. ரமணி : நான் சொல்வது அது அல்ல. இங்கே சொல்வது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் அப்படிப் பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று..........



திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய மூத்த உறுப்பினர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் சில தெளி வான குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அதற்கு அவர் பொறுப் பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிறார். நிரூபிக்கத் தயார் என்றும் சொல்கிறார். நான் உங்கள் மூலம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, மார்க்சிஸ்ட் கட்சி செய்யவில்லை என்பதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்வாரா ?

Thiru K. RAMANI : The subject matter now before the House is not that. நான் சொல்வது, மாண்புமிகு தீர்த்தகிரி கவுண்டர் சொல்லும் சப்ஜெக்ட் பற்றியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரமணி, உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள் பேசட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் பேசுகின்றபோது, இது மாதிரி கொள்ளை, மற்றவைகள் நடைபெற்றன என்று குறிப்பிடுகிறார் கள். ஆனால் ஒன்று கவனிக்க வேண்டியது என்னவென்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு அந்தக் கொள்கை உண்டு என்றோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அப்படிப்பட்ட திட்டத் தைத் தீட்டியது என்றோ அவர் சொல்லவில்லை. ஆகவே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் அதைச் செய் தார்கள் என்றும், புகார் கொடுத்து இருக்கிறோம் என்றும் சொல் கிறார்கள். பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்றும் சொல்லி இருக்கிறார். அந்தப் புகார் மனுவை, மாண்புமிகு உறுப்பினர்— துணைத் தலைவர் அவர்களிடத்திலே, அந்த ஆதாரம் இருக்கிறது என்று சொல்வதனால்—அதை ஒப்படைத்து விடலாம். ஏனென் றால் அதனுடைய படி இருக்கக்கூடும். அதை ஒப்படைத்து விட லாம். ஆகவே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்கு அந்தக் கொள்கை என்றோ, கம்யூனிஸ்டு கட்சியினருக்கு அந்தத் திட்டம் இருக்கிறது என்றோ பொருள் அல்ல. இதில் ஈடுபட்டவர்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார். அது உண்மையா இல்லையா என்பது விசாரணைக்குப் பிறகு தான் தெரியவரும். புகார் கொடுத்திருக்கிறேன் என்கிறார். அந்தப் புகார் அளவுக்கு அவர் சொல்கிறார். புகார் அளவுக்கு காப்பியை அவர் கொடுக்கலாம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்திலே ஆரூர் தாலுகாவில் அப்படிப்பட்ட அநீதிகள் இருக்கின்ற காரணத்தால், நாங்கள் எல்லாம் அதிலே ரொம்ப கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவேதான் இந்தச் சமயத்திலே அரசினுடைய கவனத்திற்கும், போலீஸ் துறையினுடைய நிர்வாகிகளுடைய கவனத்திற்கும் கொண்டு வர வேண்டும் என்பதற்காக என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்று சொல்கிறேன். இன்றைக்குக் கொலை, களவு, திருட்டு போன்றவைகள் எல்லாம் நடப்பதற்கு சினிமாத் துறையும் ஒரு காரணமாக இருந்து கொண்டு, சினிமாத் துறையின் காரணமாக பல செயல்கள் இன்றைக்கு ஏற்படுவதாக நான் அறிகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் சினிமா சமுதாயத்திலே ஒரு பெரிய சீர்கேடு, சினிமாவை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார், ஆனால் இன்றைக்கு சினிமாத் துறைக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து, அதை வளர்ப்பதற்கு ஆர்வம் காட்டுகிறோம்.

என்னுடைய தொழில் பணியிலே ஈடுபட்டிருந்த ஏ. கே. சதீஷ் என்பவர் இன்றைக்கு சென்னையிலே 'சினிமா' மெயில் என்ற பத்திரிகை நடத்திக் கொண்டிருக்கிறார். அந்தப் பத்திரிகையிலே கூட சென்ற இதழிலே அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

'நான் சிகப்பு மனிதன்' என்ற ஒரு படத்திலே மத்திய அமைச்சர்களையும், மாநில அமைச்சர்களையும், கொலை, கொள்ளை குற்றம் செய்தவர்களுக்கு சாட்சியம் சொல்வதாகச் சொல்லி இருந்தார். அப்படிப்பட்ட படத்திற்கு இடம் கொடுப்பது சரி அல்ல.

ஜெயப்பிரகாஷ், 9 பேரைக் கொலை செய்தவன், 100-வது நாள் சினிமாவைப் பார்த்து, அதன் காரணமாகத் தான் கொலை செய்ததாக அவர்கள் குறிப்பிடுகிறார்கள். 'விலாங்கு மீன்' படத்தைப் பார்த்து விட்டு, வேலூரில் ஒரு கள்ளக் காதலனோடு, உயிரோடு ஒரு பெண்ணை கொலை செய்ததாகவும், அந்தப் படத்தைப் பார்த்து, அதன் மூலம், எரித்து விட்டதாகவும், பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

எங்கள் கட்சியைச் சார்ந்த இளங்கோவன் அவர்கள் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபொழுது நகைகள் திருடப்பட்டிருக்கின்றன. குற்றவாளியைப் பிடித்து விசாரித்தால், சினிமாவில் வந்த காட்சியைப் பார்த்துத்தான் நான் இந்த களவைச் செய்ய முடிந்தது என்று அவன் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறான்.





இப்படி கொலை, கொள்ளை, களவு, திருட்டு போன்றவைகள் சினிமாத் துறையின் காரணமாக அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. நாம் இதை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால், நம்முடைய முன்னவரவர்கள் சொல்வார்கள், நாங்கள் என்ன செய்வது, சென்சார் போர்டு இருக்கிறதே, அது மத்திய அரசினிடத்திலே தானே இருக்கிறது என்று. சென்சார் போர்டு ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் மாநில அதிகாரத்திற்குள்பட்டு இதைக் கட்டுப்படுத்த வேண்டும். சமுதாயத்தைச் சீர்கெடுக்கக் கூடிய சினிமாப் படங்கள், குடி, களவு போன்றவைகளை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் போலீஸ் துறை ஓரளவிற்கு நல்ல முறையில் பணியாற்றுகிறது. என்னுடைய தொகுதியில் உள்ள டாப்பிரெட்டிப் பட்டி என்ற ஊர் பத்தாயிரம் ஜனங்களுக்கு மேல் உள்ள ஒரு இடம். நான்கு பகுதியில் வந்து சேருகின்ற ஒரு ஜங்க்ஷனைப் போல விளங்குகிறது. அங்கே ஒரு ''போலீஸ் ஸ்டேஷன் இல்லை''. அங்கே ''போலீஸ் ஸ்டேஷன்'' ஏற்படுத்தப்பட வேண்டுமென்று இலாக்கா பூர்வமாகவேகூட மேலதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். எனவே, பாப்பிரட்டிபுட்டியில், ஒரு போலீஸ் ஸ்டேஷனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைக்கும் சேலத்திற்கும் இடையே துரித பஸ் சென்று வந்து கொண்டிருக்கிறது. அரூர், ஊத்தங்கரை, திருவண்ணாமலை பகுதி வழியாகச் செல்லுகின்ற பொழுது பள்ளிப்பட்டு என்ற ஒரு இடம் வருகிறது. இந்த இடத்தைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது ஆனால் அங்கேயிருக்கின்ற தொலைபேசி ஒர்க்கிங் ஹவர்ஸ்லே மட்டும் பேசக்கூடியதாகத் தான் இருக்கிறது. மற்ற நேரங்களில் அதில் பேச முடியாது. எனவே, அங்கே டெலிபோன் வசதி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இன்றைக்குப் போலீஸ் துறைக்கு எவ்வளவோ உதவி செய்து கொண்டிருக்கிறோம். எனவே, இந்த உதவிகளைச் செய்து, இந்தக் குறைகளையும், இந்தக் கோரிக்கைகளையும் நிறைவேற்றி போலீஸ் நல்ல முறையில் இயங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, இந்த மானியத்திலே என்னைப் பேச அனுமதித்ததற்காகவும், சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்காகவும் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மிகச் சோதனையான ஒரு நேரத்திலே நான் பேச அழைக்கப்பட்டிருக்கிறேன். நானும் நீண்ட நேரம் பேசி மாண்புமிகு உறுப்பினர்களுடைய பசியின் வேதனையை அதிகப்படுத்த நான் விரும்பவில்லை. போலீஸ் மானியத்தைப் பற்றி

இரண்டு நாட்கள் விவாதித்த பிறகும் கூட, அது போதாது என்ற உணர்ச்சியின் அடிப்படையில் மூன்றாவது நாளும் நேரம் ஒதுக்கியிருப்பது இந்தத் துறையினுடைய இன்றியமையாமையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் இந்த மானியத்திலே சொல்ல வேண்டிய நல்ல கருத்துக்களைப் பற்றி விரிவாகவும், தங்களுக்கே உரித்தான பாணியிலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதில் என்னுடைய பொறுப்பு மிகவும் குறைந்திருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

போலீஸ் துறைக்கு காவல் துறை என்று பெயரிடப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமென்றே நான் கருதுகிறேன். ஏதோ போலீஸ் வருகிறது என்றால் அச்ச உணர்வு இருந்தது என்று மாண்புமிகு திரு. ஹசிறிபுத்தன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த உணர்ச்சியைப் போக்கி, போலீஸ் என்பது நம்மைக் காக்க இருக்கிறதே தவிர தாக்க இருக்கவில்லை என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இப்படியொரு நல்ல மொழிபெயர்ப்பைத் தந்தார்கள்.

இவர்கள், நாம் இந்த மன்றத்திலே இயற்றுகிற சட்டத்தைக் காப்பாற்றுகிறார்கள்; இந்த நாட்டிலே நிலவவேண்டிய அமைதியைக் காப்பாற்றுகிறார்கள்; இந்த நாட்டிலே வாழுகின்ற குடிமக்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றுகிறார்கள். இப்படிப்பட்ட பாரதூரமான பொறுப்பிலே இருப்பவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைப்பற்றியும் நாம் நன்கு அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால், இந்த அவையிலே நடந்த விவாதங்களையெல்லாம் பார்க்கின்ற பொழுது, ஏதோ போலீஸ்காரர்களை அமர்த்தி வைத்துக்கொண்டு நாம் இவர்களைக் குற்றஞ்சாட்டுவதைப்போலவும், அவர்கள் செய்வதெல்லாம் நன்மைகள் தான் என்று சிலர் வாதத்தின் மூலம் அவர்களைக் காப்பாற்றுவது தங்கள் கடமை என்று நினைப்பதைப் போலவும் பேசுவது நல்லதாக எனக்குப்படவில்லை. உண்மை என்னவென்றால், அவர்கள் தங்களது உயிரையும் பணயம் வைத்து எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்கிறார்கள்.



(பிற்பகல் 1—50)

அதையெல்லாம் நாம் நாவாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்திய நாட்டினுடைய பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட அந்த நாளில், அந்தக் கறுப்பு நாளில், டெல்லி மாநகரத்திலே நான் இருந்தேன். டெல்லி மாநகரத்திலே இருந்த மக்கள் மீது கொலைகாரர்களுடைய குண்டு எந்தத் திசையிலே இருந்து வெடிக்கப்படும் என்று நிச்சயமற்ற அச்ச உணர்ச்சி அந்த நாளிலே அந்தத் தலைநகரத்திலே பரவியிருந்தபொழுது அங்கேயிருந்த மக்களுக்கெல்லாம் நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒரு போலீஸ் படையாக, தமிழகத்தைச் சேர்ந்த, விசேஷ போலீஸ்படை, இரண்டாவது படை, இருந்தது என்பதை நான் நன்றாக உணர்வேன்.

அம்மையாருடைய சவ ஊர்வலத்தின் பொழுதுகூட, அந்தச் சவத்திற்குக் கூட ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்று தலைநகரத்திலே, பொறுப்பிலுள்ளவர்கள் ஐயுற்றபொழுது, அதற்கும் பாதுகாவலாக, தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட போலீஸ் படை இருந்தது என்பது நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடியது. அப்படிப்பட்ட சிறப்பான பணியாற்றியவர்களைப் பற்றி, நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய சோதனைகளை, தங்களுக்கு ஏற்படக்கூடிய இடுக்கண்களை அகற்ற ஒரு நடவடிக்கை எடுத்தால், அந்த நடவடிக்கை வரவேற்கப்படுமா? அந்த நீதி உணரப்படுமா? ஏற்றுக்கொள்ளப்படுமா? அல்லது இது வேறு யாருடைய தலையீட்டினைக் கண்டு தான் எடுக்கும் நிர்வாக நடவடிக்கையிலே கூட தனக்குக் களங்கம் கற்பிக்கப்படுமா என்ற அச்ச உணர்ச்சியிலே பல பேர்கள் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை எல்லாம் மாற்றி நியாயத்தை நிலை நாட்டுவதற்காக, அவர்களுக்குப் பூரண வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தந்து, நன்மையை, நீதியை நிலைநாட்டக்கூடிய காவலர்களை எல்லாம் இந்த நாடு வரவேற்றுக் கொள்ளும், நாட்டினுடைய அரசு பொறுப்பேற்றுக் கொள்பவர்கள், அவர்களுக்குத் தக்க அங்கீகாரத்தை அளிப்பார்கள் என்ற உணர்வை நாம் ஏற்படுத்தித் தரவேண்டும். காவல்துறை மீது நம்பிக்கை குறையுமேயானால் நாட்டினுடைய வாழ்வே குலைந்து விடும்; நீதித் துறை மீது நம்பிக்கை குறையுமேயானால் நாடே குலைந்துவிடும்; அரசாங்கத்தின் மீது நம்பிக்கை குறையுமேயானால் அதை மாற்றியமைக்கக்கூடிய பொறுப்பு மக்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால், காவல் துறை மீதோ, நீதித் துறை மீதோ அவர்களுக்குள்ள நம்பிக்கை குறையுமேயானால், திடுதிப்பென்று இந்தத் துறைகளை மாற்றியமைக்கக்கூடிய அதி

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 ஜுலை 9

காரமோ, அல்லது சட்ட வரம்புகளோ நம்மிடத்திலே இல்லையென்பதை நாம் கருத்திலே கொண்டு, நாம் விமர்சிக்கும்போதோ, பாராட்டும்போதோ ஒரு வரம்பிலே நின்று பாராட்டுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

குற்றவாளிகளிடத்திலேயிருந்து சாட்சியம் பெறுவதற்காக, அவர்களைத் துன்புறுத்துவது நல்லது, அது வரவேற்கத்தக்கது என்ற பாணியிலே ஒரு உறுப்பினர் பேசினார் என்று என்னுடைய அணியிலே அமர்ந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள்கூட வருத்தப்பட்டார்கள். ஆனால், அதற்கும் ஒரு வரம்பு இருக்கவேண்டும். வள்ளுவர் கூடச் சொன்னார்.

"அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது".

என்று. அச்ச உணர்ச்சி இருக்கக்கூடிய நேரத்தில், கீழ் மக்கள்— நாம் பிரித்து வைத்திருக்கக்கூடிய ஜாதியினுடைய அடிப்படையிலே அல்ல; அவர்கள் இழைக்கக்கூடிய தீமைகளுடைய அடிப்படையிலே, அவர்கள் செய்யக்கூடிய பஞ்சமா பாதகங்களுடைய அடிப்படையிலே பிரிக்கப்பட்டிருக்கிற அந்த மக்களுக்கு, ஒழுக்கம் எப்போழுது ஏற்படுகிறது என்றால், இப்படியெல்லாம் ஒரு தீவினை ஏற்படும். தண்டனை கிடைக்கும் என்ற அச்ச உணர்ச்சி ஏற்படுகின்றபொழுதுதான் அவர்கள் இந்தத் தீமையிலிருந்து தங்களையும் தீரக் காத்துக் கொண்டு மற்றவர்களுக்கும் தீமை இழைக்காமல் இருக்கக் கூடிய நன்மை ஏற்படுகிறது என்ற தன்மையையும் நாம் மறந்து விடக்கூடாது.

அதே நேரத்திலே அப்படிப்பட்ட தண்டனை வழங்குவதற்கு என்ன வரம்பு இருக்கிறது என்பதை ஏற்கனவே நாட்டினுடைய சட்ட மூதறிஞர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பயன் படுத்த வேண்டுமே தவிர, கொடுமையாக செய்யக்கூடிய தன்மையை நாம் மறந்துங்கூட வரவேற்கக்கூடாது. அப்படி வரவேற்போமானால் நிரபராதிகள், ஒன்றும் அறியாத அப்பாவிகள், உண்மையைச் சொல்லி காட்ட முடியாத ஊமையர்கள், பல பேர்கள், இந்தக் கொடுமைகளுக்கு ஆளாகி விடக்கூடும். அதிலிருந்தும், அந்தக் கொடுமையிலிருந்தும் அவர்களுக்கு அப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப்படாமல் தடுத்தாட்கொள்வது நம்முடைய கடமை என்று நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இன்றைய காலத்தில் திருடர்கள் மிக நவீன உத்திகளைக் கையாள்கிறார்கள். மெத்தப் படித்தவர்கள் எல்லாம் திருடர்களாக மாறி இருக்கிறார்கள். அவர்கள் விஞ்ஞானத்தினுடைய துணைக் கருவிகளை வைத்து எல்லாம் இன்று திருட்டிலே



1985 ஜுலை 9] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

ஈடுபட்டிருக்கும்போது, அந்த நவீனக் கருவிகளை நாமும் கையாண்டு அந்தத் திருட்டுகளைக் கண்டு பிடிப்பதற்கும் திருடர்களை கைது செய்வதற்கும் பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை போதாது என்று நான் கருதுகிறேன்.

நான் ஒரு மேல் நாட்டிலே சுற்றுப் பயணம் செய்திருந்த பொழுது—நான் சுற்றுலா நிகழ்ச்சியைச் சொல்லிக் காட்ட விரும்பவில்லை—சுவீடன் நாட்டிலே ஒரு பாதாள பாலத்திலே சென்று கொண்டிருக்கும்போது அங்கே ஒரு திருடு நடந்து விட்டது. பர்சைப் பறி கொடுத்தவர் போலிசாரிடத்திலே போய் முறையிடவில்லை.

ஆனாலும் கூட முறையிடுவதற்கு முன்னாலே, அந்தப் பாதாளப் பாதையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னாலே போலீசார் திருடியவர்களைக் கண்டுபிடித்து அவர் கையில் இருந்த பர்சை வாங்கி, யார் பறிகொடுத்தார்களோ அவர் களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று பத்திரிகையில் போட்டிருந்ததைப் பார்த்தேன். இப்படி முக்கிய மாக பொதுமக்கள் நடமாடும் சாலைகள், பாதாளப் பாதைகள், பொதுவிடங்களில் அவர்கள் தொலைக் காட்சி யைப் பொருத்தி, போலீஸார் ஓர் இடத்திலிருந்து கூர்ந்து கவனித்து வருவதால் மக்கள் பறி கொடுக்கிற பொருள்களை உடனடியாகக் கண்டுபிடித்து, மீட்டுக் கொடுக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நம்முடைய நாட்டிலே தலைநகரிலே கூட மேம்பாலம் அமைப்பதற்குப் பதிலாக பல இடங்களில் பாதாளப் பாதை அமைத்திருக்கிறோம். அந்த பாதாளப் பாதைகளைப் பயன்படுத்த பொதுமக்கள் அஞ்சுகிறார்கள். தனியாகச் சென்றால் அங்கே என்ன நடக்குமோ என்று அஞ்சுகிறார்கள். பல சமூகவிரோதிகளின் உறைவிடமாக அந்தப் பாதாளப் பாதைகள் அமைந்திருக்கின்றன. அந்த சமூகவிரோதிகளை அங்கேயிருந்து அப்புறப்படுத்தி பொதுமக்கள் அச்சமின்றி அந்தப் பாதைகளைப் பயன்படுத்த காவல் துறையினர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நம்முடைய தலைநகரில் இருக்கக்கூடிய விமான் நிலையத்தில் சமீபத்தில் ஒரு பயங்கரமான விபத்து ஏற்பட்டு கிட்டத்தட்ட 40 பேர்கள் அதிலே இறந்து விட்டார்கள். அந்த விபத்துக்குக் காரணம் தேவையான பாதுகாப்பு தவிர்க்கப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகம் பல ருக்கு இருக்கிறது. ஏன் இந்த சந்தேகம்? சுமார் 350 போலீசார் அங்கே செக்யூரிட்டி பொறுப்பிலே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு

முன்னால் செக்யூரிட்டி பொறுப்பிலே எத்தனை பேர் இருந்தார்களோ அதே அளவுக்குத்தான் இப்போதும் இருக்கிறார்கள், அவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. இன்றைக்கு புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் விமான நிலயம் ஏற்கனவே இருக்கிற சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொஞ்சம் தொலைவில் இருக்கிறபோது ஏற்கனவே இருந்த 350 போலீசார்தான் இந்த இரண்டு பகுதிகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியிருப்பதால் ஏற்கனவே இருந்த பாதுகாப்பு மேலும் குறைந்திருக்கிறது என்பதை நாம் எல்லாம் உணருவோம். 1982—லேயிருந்து இந்த எண்ணிக்கை கூட்டப்படவில்லை என்று தெரிகிறது. இன்று நாளுக்குநாள் சர்வதேச விமானப் போக்குவரத்து அதிகரித்து வருகிறபோது அதற்கேற்ப அங்குள்ள விமான நிலைய செக்யூரிட்டி போலீஸ் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், அங்கே வேலை செய்கிற செக்யூரிட்டி போலீசாருக்கு உணவுக்கும் போக்கு வரத்திற்கும் மத்திய அரசு மனமுவந்து அளிக்கும் அந்த படி (அலவன்ஸ்) கூட நம்முடைய மாநில அரசு அதற்கேற்ப சிறப்பாக அரசு ஆணை பிறப்பிக்காத காரணத்தால் அவர்கள் பெறமுடியாமல், பல இலட்சக்கணக்கான ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசுக்கு ' அன் ஸ்பென்ட் ஐட்டமாக ' சென்றுகொண்டிருக்கிற நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே ஒரு நல்ல செய்தியை குறிப்பிட்டிருந்தார்கள். 1982-ஆம் ஆண்டு இனக்கலவரங்கள் இல்லாத ஒரு ஆண்டாக, இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெற்ற இரண்டொரு சம்பவங்களைத் தவிர வேறு எந்த சம்பவமும் இல்லாத ஆண்டாக, குறிப்பிட்டிருந்தார்கள். அந்த சம்பவம் கூட இல்லாத அளவுக்கு அடுத்து வரக்கூடிய ஆண்டு மலர வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். அதற்கு ஏற்ப நம்முடைய காவலர்களும் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனக்கு ஒரு வருத்தம் உண்டு. இந்த நாட்டில் இருக்கிற அச்சகங்களில் அச்சடிக்கக்கூடிய நோட்டீஸ்களில் எப்படிப்பட்ட வார்த்தைகளை போடலாம் என்று ஒரு சட்டம் இருக்கிறது என்பது எனக்கும் தெரியும். ஆனால் இந்த நாட்டிலே பல்வேறு வகைகளிலே ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களை பாதிக்கச் செய்யும் வகையில் அவர்கள் நடத்துகின்ற கடைகளிலே பொருள்களை வாங்க வேண்டாம் என்றும் அமைதியாக இருந்துகொண்டிருக்கிற சமுதாய மக்களைத் தூண்டுகின்ற வகையிலும் துண்டு பிரசுரங்களை





வெளியிடுகிறார்கள். வெளியிடுகின்ற அச்சகத்தின் பெயர் அந்தத் துண்டுப்பிரசுரங்களில் இல்லை. ஆனால் வெளியிடுவது யார் என்பது காவல் துறைக்கு நன்றாகத் தெரியும். எந்த அச்சகத்தில் அச்சடிக்கப்படுகிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். இப்படி இலட்சோபலட்சம் நோட்டீஸ் அச்சடிக்கப் படுகிறது. ஆனால் இன்றுவரையில் ஏதாவது ஒரு அச்சகத் தின்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா ? இல்லை. இப்படி துண்டு பிரசுரங்களை வெளியிட்டு, அமைதியாக வாழக்கூடிய மக்கள் மத்தியிலே மனக்கிலேசத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தச் செயல் தடுக்கப்பட நடவடிக்கை ஏதாவது எடுக்கப்படுகிறதா என்றால் இல்லை என்று அறியும்போது அதை எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

(பிற்பகல் 2—00)

அதைப்பற்றிக் காவலர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் இந்தச் சட்ட மன்றத்தினுடைய ஆரம்பத்திலேயே பேசும்போது கூட தேர்தல் நேரத்தில் பல அரசியல் கட்சிகள் மீது போடப்பட்ட வழக்கு களை ஒட்டுமொத்தமாக வாபஸ் வாங்குவது ஒரு நல்ல சூழ் நிலையைத் தமிழகத்தில் உண்டாக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மெத்தப் பணிவோடு வேண்டிக் கொண்டேன். அதே வேண்டுகோளை மீண்டும் வற்புறுத்துகிறேன். தேர்தல் முடிந்து பல காலம் ஆகியும் கூட, இந்தத் தேர்தலில் போடப்பட்ட வழக்குகள் இல்லை, சென்ற தேர்தலில் போடப்பட்ட வழக்குகள்கூட, ஆயிரம், ஆயிரம்வழக்குகள் இன்றும் நீடித்துக்கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் நீதிமன்றங்களில் குவிவதை விட அவற்றை வாபஸ் வாங்கிக் கொண்டு தமிழகத்தில் ஒரு நல்ல சுமூகமான சூழ்நிலை தோன்றுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அரசினிடத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று. நடக்கக்கூடிய பஞ்சமா பாதகங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாம் எல்லாம் இந்த நாகரீகமான இப்படிப்பட்ட மன்றத்திலே எடுத்துச் சொல்வதற்குக் கூட நா கூசக் கூடிய குற்றங்களை இழக்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே தப்பிக்கக்கூடாது. அவர்கள் எவ்வளவு செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும் யாருடைய நிழலில் வளர்க்கப்பட்டவர்களாக இருந்தாலும் கூட அந்தக் குற்றவாளிகள் தண்டிக்கப் படுவது சமுதாயத்தில் அந்தக் குற்றங்கள் மலியாமல் இருக்க ஒரு நல்ல ஆரம்பமாக அமையும். ஒன்றை நான் உதாரணமாகச் சொல்ல முடியும்.

வந்தவாசிக்கு அருகில் தேசூரில் ஒரு படுபாதகம் நடந்தது. ஒரு சிறுமியைச் செய்யக் கூடாத செயலைச் செய்துவிட்டார்கள். ஆனால், அதைப் பற்றி முறையிட்டு போலீஸ் துறையிலே விசாரணை நடந்தது. ஆனால், அந்தக் குற்றவாளி பற்றி இதுவரையில் ஒரு வழக்கு கூட பதியப்படவில்லை என்பது அந்த வட்டாரத்தில் வேதனையை உண்டாக்கி இருக்கின்றது.

அதைப் போல தஞ்சை மாவட்டத்திலே ஒரு மிகுந்த வேதனையான சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில பகுதிகளிலே உள்ள கிராமம்—அந்த கிராமங்களுடைய பெயர்களை எல்லாம் பதிவேட்டிலே பதிய நான் விரும்பவில்லை. அந்தப் பாதகத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் பெயர்களையும் கூட இந்தச் சட்ட மன்றத்தின் பதிவேட்டில் பதிய வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். வேண்டுமானால் தனியாகச் சொல்லிக் காட்ட விரும்புகிறேன். யாராவது கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று பாடுபட்டு அவர்கள் தங்களுடைய பொருட்களைக் கொண்டு வருவார்களேயானால் சென்னையிலே இருந்து அவர்கள் கிராமங்களுக்குச் சென்றவுடன் வழிமறித்து அவர்களுடைய பொருட்களையும், பாஸ்போர்ட்டையும் பிடுங்கி வைத்துக் கொண்டு பிறகுஒரு மாதத்தில் திரும்ப வேண்டியவர்கள் திரும்பிச்செல்லும்போதும் அவர்களிடத்தில் ஆயிரம், 500 என்று வாங்கிக்கொண்டு ஒரு பெரிய வழிப்பறி கொள்ளையை நடத்துகின்றனர். அது ஒரு நாடகமாகவே, ஒரு நாளுங்கமாகவே நடந்து கொண்டிருக்கிறது.

இதற்குப் பலியானவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று இரண்டாண்டுகள் இருந்து அவர்கள் சம்பாதித்து வந்த தொகையை எல்லாம் பறிகொடுத்துவிட்டு அவர்கள் திரும்பிச் செல்லும்போது கூட இதனை நீங்கள் போலீசிடத்திலே முறையிட்டால் உங்கள் குடும்பத்தை நிம்மதியாக நாங்கள் வாழ விட மாட்டோம் என்று பயமுறுத்தக்கூடிய அளவுக்குச் சூழ்நிலை இருக்கின்றது. அதைப் பற்றி காவல் நிலையத்திலே ஏற்கெனவே, புகார் செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றி தக்க ஆராய்ச்சி செய்து இந்தத் தீமைகளையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறையிலே பல நூற்றுக்கணக்கான பேர் அவர்கள் மீது சாட்டப்பட்ட எவ்வளவோ குற்றச்சாட்டுகளுக்காக சஸ்பெண்ட் செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆண்டுக் காலமாக ஒரு விசாரணையும் இன்றி அவர்களுடைய காலம் கடந்துகொண்டிருக்கிறது. அதைப் பற்றி ஒரு தனியான விசாரணைக் கமிஷன் நியமித்து விரைவாக அவர்கள் மீது குற்றம் இருந்தால் அந்தக் குற்றத்திற்கு உரிய தண்டனையை அளித்து குற்றம் இல்லை என்றால் மீண்டும் அவர்களுக்குப் பொறுப்பை அளித்து அவர்கள் பணியாற்ற ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



காவல் துறையிலே இருக்கக்கூடிய முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்த பலருடைய ப்ரமோஷன் பல ஆண்டுக்காலமாக தரப்படாமல் இருக்கின்றது. அதையும் கருணை கூர்ந்து தமிழக அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை நிலை நிறுத்தி விடைபெறுகிறேன், நன்றி.

## 7. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள பேரவை விதி 32-ஐத் தளர்த்தி நாளை 10–7–85 சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்தல், மற்றும் மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 10–7–1985 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

252. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1983–84ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்.

— எதுவுமில்லை —

136418